26/5/62
2



# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௩௮ | திருவள்ளுவர் யாண்டு ௲௯௯௩<br>சுபகிருது, ஆனி, ஆடி.<br>1962 ஜூலை, ஆகஸ்ட். | மலர் ௩, ௪ |
|---|---|---|



## பூங்குன்றன் அறம்

(தி. நா. அறிவுஒளி)

ஒரு நாட்டை, ஓர் இனத்தை அழிக்கவோ, முன்னேருவண்ணம் தடுக்கவோ வேண்டுமாயின், அழிக்கும் போர்க்கருவிகளோ, வேறு படைக்கலமோ வேண்டியதில்லை ; மடமை நம்பிக்கையைத் தவிர! மடமை நம்பிக்கையை மக்களின் மன ஆழத்தில் ஊன்றிவிட்டால் ; அது ஒன்றே வளர்ந்து செழித்துக், கிளைத்து ஓங்கி அவர்களை அழித்துத் தீர்த்துவிடும்.

மடமை நம்பிக்கைகள் கல்லாதவர்களிடம் மட்டுமன்றி, கற்ற வரிடமும் இருக்கின்றன. கற்றவர்களில் கூட பகுத்தறிவும், பகுத் துணர்வு ஆற்றலும் இல்லார் பலர் உள்ளனரே ! இத்தகையோரின் மடமை நமபிக்கை மிகமிகக் கேடு பயப்பதாகும். இப் படித்த கூட் டம் நயவஞ்சகமாக நடந்தும், நயச்சிரிப்பு சிரித்தும் உலகை ஏமாற்ற முற்படுகிறது. சிரித்துப் பேசிவிடுவதாலேயே வாழ்வில் தமது தன்னலக் காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று எண்ணி நடப்பவர்கள் நீண்ட காலம் இந்நடிப்பைக் கைக்கொள்ள முடியாது.

'நாகரிகம்' என்ற போர்வையில் உலாவிவரும் மடமை நம் பிக்கைகளுக்கு உலகம் ஏமாந்துகொண்டிருக்கிறது. பகுத்தறிவால் இந்த 'நாகரிகத்'தை ஆராய்ந்தால் ; அப்போது உண்மை தெளி வாகும். மக்கள், வாழ்க்கையில் எவ்வளவு வேண்டாத நம்பிக்கை களுக்கு அடிமைப்பட்டு, தலைவணங்கித் தாழ்ந்து கிடக்கின்றனர் ! இவர்களுடைய அறிவு தெளிவுபெற்று உயரவேண்டுமானல்; சிறிதேனும் 'எண்ணி ஆராய்ந்து தெளியும்' பழக்கத்தைக் கைக் கொள்ளல்வேண்டும்.

ஆராய்ச்சித் தெளிவு எளிதில் அமையும் பழக்கம் அன்று. கோடிகோடி நல்ல அடைவுகளின் (Experieuce) முடிவாகவும், நுண்மாண் நுழைபுலத்தின் பன்மாண் தேர்வின் தெளிவாகவும் கிட்டும் ; கிட்டற்கரும் அமிழ்தமே ஆராய்ச்சித் தெளிவு.

இயற்கையின் ஒட்பத்தை - நுட்பத்தை - ஆராய்கின்ற புலமை யோர் வெளியிடும் கருத்தின் உண்மைப் பொருள்களையோ, உணர் வையோ மிக எளிதில் எளிய மக்கள் புரிந்துகொள்வது கடினமே. அத்தகு கருத்துகளுக்கு உரை வகுப்பதும் கடினம். ஓரளவு தத்தம் அறிவுக்கெட்டிய அளவில் முயற்சி செய்து பொருளுணர முற் படலாம். அவ்வளவே. கருத்துணரும் முயற்சியே இவ்வளவு கடினமாக அமைகிறதெனில், மேதையரின் பாட்டுகளுக்கோ, உரை களுக்கோ உண்மைக் கருத்தை வகுத்துரைப்பதும், அதைத் திறனாய் வதும் ; அது பற்றித் தீர்ப்பு கூறுவதும் எத்துணை அரியது ! இந் நுட்பம் உணராதார் சிலர். மேதையரையும், அன்னாரின் சான் றாண்மைப் படைப்புக்களையும் ' கிள்ளுக் கீரை 'யாகக் கணித்து, தம் புல்லிய அறிவையே பெரிதெனக் கருதி ' முரண் மொழிகளைச் ' சிந்துகின்றனரெனின் அன்னார்க்கு நம் கழிவிரக்கத்தை உரிமை யாக்குவதைத் தவிர வேறுஎன் மொழிதல் கூடும் ?

தெரியாததைத் தெரியும் என்பதும், பெறாததைப் பெற்றோ மென்பதும் அறிவிலாரின் புன்மையைத்தான் காட்டும்.

காணாததைக் கண்டதாகக் கூறினால் அது பொய். இல்லாததை இருப்பதாக நம்பும்படி கூறுவது கற்பனை. இரண்டுக்கும் அடிப் படையில் வேற்றுமை இல்லை. ஆனால் அமைப்பில்தான் ஓரளவு மாறுதல் உண்டு. ஆனாலும், இரண்டுமே (பொய்யும், கற்பனை யும்) இல்லாதன அல்லவா ?

இனைய பொய்மையாளர், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரின் வாய்மொழியைத் திறனாய்தலோ ; தெளிவற்ற தீர்ப்பு வழங்குதலோ அறிவுடைமையன்று. இனைய ஆகாப்பணி இலக்கியத் துறையிலும், அறிவுலகிலும் பெருந் தீமையே பயக்கும்.

தமிழ்ச் சான்றோருள் தலைசிறந்த தனித் தலைவர் ஞாலக்கலைஞர்; அறவாழி அந்தணர் கணியன் பூங்குன்றனார் ஆவார். அவர் எழுதிய பாட்டு புறநானூற்றில் (192 ஆம் பாடல்) இடம் பெற் றுள்ளது.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரோ, மூவாயிரம் ஆண்டுகட்கு முன்போ அப்பாடல் தோன்றியிருக்கலாம்.

தமிழ் மொழியின் தலையாய பாட்டு பூங்குன்றனார் பாட்டே.

இப்பாட்டின் கருத்தை அளக்க, மதிக்க, அறிய, ஆராய, உணர, நம் மறிவு போதியதோ ; இல்லையோ ! ஆயின் ; அதைப் பழிக்க - தூற்ற - பயனற்ற தென்று, உதவாததென்று தீர்ப்பளிக்க நமக்கு அறிவோ - ஆற்றலோ - ஆய்வுத் திறனோ ஏதுமில்லை.

இனி, பூங்குன்றனார் பாட்டைப்பற்றி சிறிது எண்ணிப் பார்ப் போம் :

காக்கை வானத்திலே எங்கும் திரியும். தென்னை மரத்தின் உச்சியில் அமரும். ஆனால், தெங்கின் இளநீரைப் பருக — தின்ன — முடியுமா காக்கையால்? காக்கை குப்பைமேட்டிலுள்ள எச்சிலையும், செத்த எலியையும், புழுப் பூச்சிகளையுமே உண்ணுகிறது. தானே பறக்கும் தன்மை இருந்தும் தென்னையின் அமிழ்த விருந்தை அதனால் உண்ண—சுவைக்க—முடிவதில்லை!

ஆனால் மக்களுக்கோ தாமே பறக்கும் ஆற்றல் இல்லை; வானில், தானே இயங்கித்திரிய இயலாது. அவ்வாறிருந்தும், வானுற ஓங்கி வளர்ந்திருக்கும் தென்னை மீது, மெல்ல மெல்ல ஏறி இளநீரைப் பறித்து, இனிய சுவை நீரையும், நுண்ணிய தூய தெங்கம் பருப்பினையும் துய்க்கிறார்கள்.

உலகினரிலும்; காக்கை வாழ்க்கையினரும்—மக்கள் வாழ்க்கையினரும் உண்டு.

சிறந்த புலவர்கள் தென்னை போன்றவர்கள். அவர்கள் பெருந்தவம் செய்து அரிய, பெரிய, நுண்ணிய, ஒள்ளிய கருத்துக்களை, உண்மைகளை உலகினருக்குக் 'கொடை'யாக வழங்குகின்றனர்.

மனித உருவினராகத் தோற்றத்திலிருக்கும் சிலர் காக்கை போல, உலகில் உழன்றும், சான்றோரின் அறிவமிழ்தத்தை உண்டு சுவைக்க அறியாராய் வீண் பொழுது போக்கிச் சாவார்.

உருவில் மட்டுமன்றி உண்மையிலேயே மக்களாக இருப்போர் அறிஞர்களின் 'ஒட்பமொழிகளை'க் கிட்டரிய விருந்தாக ஏற்றுச் சுவைத்துண்டின்புறுவர்—இவர்களே மக்களாகப் பிறந்ததன் நற்பயனை உண்மையில் துய்த்து உயர்ந்தோர் ஆவர்.

பூங்குன்றனார் புலமை யமிழ்தத்தைப் புறநானூற்றுப் பாடலாக வழங்கினார். அதைத் துய்த்துச் சுவைக்கப் பிறந்தவர்கள் மக்கள். ஒரு சிலரோ இந்த அரும் பெறல் அமிழ்த விருந்தை உண்டு, இன்புற ஆற்றலின்றி இழித்தும் பழித்தும் செம்மாப்பர். அவர்கள் பிதற்றல் ஆராய்ச்சித் திறனற்றது மட்டுமன்றி; பிறரையும் கெடுக்குந் தன்மையதாகும். ஆகவே பூங்குன்றனாரின் பாட்டின் உண்மை தீமை பயவாதது; நன்மையே பயப்பது என்பதையும்; உலகம் உய்யவேண்டின் பூங்குன்றனாரின் பொன்று அறக்கொள்கை நம் நாடு மட்டுமின்றி முழு உலகமும் உணர்ந்து, நம்பித், திருந்திச் செழிக்க வேண்டும் என்பதையும் உணர்த்த வேண்டுவது நம் கடமையாயிற்று.

•

தனக்கு உரிமையும், அறிவும், அடைவும், தெளிவும் இல்லாத துறைகளில் வகுத்து கூறும் தான்றோன்றிகள் மலியும் நாடு விரைவில் வீழ்ச்சியுறும்.

தமிழகத்தில் கண்டவர்கள் கண்டபடி கருத்துரைக்கும் நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. இந் நிலை மாற வேண்டும். மாற வில்லையெனில் நாட்டுக்குப் 'பொதுத் தீமையே' விளையும். ஆகவே, சீரிய அறிஞர்களின் கருத்துக்களைத் திறனுயும்போது, கவனத்தோடும், விழிப்போடும் கண்காணிப்போடும் இருக்க வேண்டும். இன்றேல், குழப்பமும் மருட்சியும் தோன்றிவிடும். மக்கள் தெளிவற்ற நிலையினராய் முரண் கருத்தினராய் வாழ்ந்து பாழாவர்.

இலக்கிய மேதை தான் வெளியிடும் எந்தக் கருத்தையும் ஆழ்ந்துணர்ந்து ஆயிரங் கோடி முறை ஆராய்ந்து தெளிந்து பின்னே வெளியிடுகிறுன். ஆகவே, அக்கருத்து உயிரோடு வாழ்கிறது; காலத்தை வென்று வாழ்கிறது. அத்தகு கருத்தின் ஒட்பத்தையும், அதன் பயனையும் உணரும் உலகினர் அப் புலவனின் மொழி வழி ஒழுகுகின்றனர். அதனுல், நன்மையும் இன்பமும் அடைகின்றனர்.

இதற்கு மாருக எண்ணிப்பேசாமல், ஏனே எதையோ எப்படியோ பேசிவிடுகின்றவர்களும் உள்ளனர். அரசியலாளர் முதலியோர் இத்தகுபோக்கினராக இருக்கின்றனர். அதனுல்தான் அன்னுர் பேச்சை மக்கள் நம்புவதோ, கடைப்பிடித்து ஒழுகுவதோ இல்லை. அவ்வாறு நம்புகின்ற மக்கள் அழிந்துபடுவதை வரலாறு சுட்டிக் காட்டுகிறது.

இவ் வுண்மைகளைத் தெளிந்த பின் பூங்குன்றனுரின் உள்ள நிலையை நாம் ஆராய வேண்டும். அவர் 'கொள்கை' உருவான உள்ளத்தின் உணர்வு நிலை எப்படிப்பட்டது என்பதையும், எவ்வளவு ஆழ்ந்த ஆராய்ச்சிக்கும், அடைவுக்கும் பின் பூங்குன்றனுர் இவ்வரிய 'உயர்ப்பாட்டை'ப் படைத்திருக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

மக்கள் உள்ளத்தில் இயல்பிலேயே வரலாற்றுணர்வு ஊறியுள்ளது. சில போதுகளில் ஐயாயிரம், பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட உணர்வுகளும் திடீரெனத் தோன்றி வெளிப்படக் காண்கிறேம். இறந்தகால நினைவை மாந்தர் என்றும் புறக்கணிக்கவே முடியாது. ஏனெனில் நேற்றின் தொடர்ச்சியே இற்றை நாள்; இன்றைய தொடர்ச்சியே நாளை.

முக்கால உணர்வில் முற்றும் ஈடுபட்டு ஆராயும் புலவோர் வருங்கால வளமார் வாழ்வை வகுத்துக் காட்டல் இயற்கை. இம் முறையில் எண்ணிய எண்ணமே பூங்குன்றனுர் அகத்தில் 'ஞாலப் பாட்டான' 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாட்டை மலர்த்தியிருக்கும்.

'அறிவியலாலும் அரசியலாலும் ஆற்ற முடியாத செயற்கருஞ் செயல்களைக் கலையும் இலக்கியமும் ஆற்றி முடிக்கும்' உண்மை

யைத் தெளிந்தவர் பூங்குன்றனார். ஆகவே தான் மக்களின் உள்ளத்தை மலரச் செய்யும் பாட்டை அருளினார்.

அக மலர்ச்சி, அக விழிப்புத் தான் மாந்தனின் பிறப்புக்குரி ஒப்பற்ற சிறப்பாகும். தன்னையே தான் ஆராய்ந்துணர்ந் தொழு கும் ஆற்றல் மக்களுக்குரிய சிறப்பியல்பாகும். இந்த ஆராய்ச்சி யைச் செய்வதே பகுத்தறிவு. இந்த ஆராய்ச்சிக்குத் தூண்டிவிடு வதே பகுத்துணர்வு.

மக்கள் எவ்வாறோ தவறிய வழியில் நடக்க முற்பட்டு விட்ட னர் என்று இப்பழக்கம் உலகில் துவங்கியதோ அறியோம். ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று 'இவ்வுல கத்து இயற்கை' என்று அறிஞர்கள் பாடும் அளவுக்குத் தீயுணர்வு கள் உலகில் வேரூன்றி விட்டன.

இத்துணை அழுந்தக் காலூன்றிய நச்சுணர்வுகளையும், தீய கருத்துக்களையும் களைய முன் வரப்பேராண்மை கனிந்த பேருள்ளம் ஒன்று உலகில் தோன்றியது. அவ்வுள்ளமே பூங்குன்றனின் புதுமையுள்ளம்.

உலகினரின் அறியாமையைக் களைந்து அறிவொளி நல்கத் தோன்றிய புலமை விளக்கு பூங்குன்றன் ஆவார்.

'நாலாயிரம் பேரை அழவைப்பது எளிது; நாலுபேரைச் சிரிக்கச் செய்வது அரிது' என்ற உண்மையை உணராத மக்க ளிடையே தான் 'எல்லாரையும் இன்புறுத்தவே மாந்தன் தோன்றி னான்; அதற்காகவே தான் தோன்றவேண்டும், என்று புறநானூற் றுப் புலவர் தலைவர் எண்ணினார்.

தாங்களும் தீமை செய்து, பிறரையும் தீமை செய்யத் தூண்டி விடவே உலகினர் கற்றுக்கொண்டனர். இந்தத் தீய பழக்கம் முற் றும் அழியவேண்டும். 'தாமும் நன்மை செய்து, பிறரையும் நன் மையே செய்ய ஆர்வமூட்டி உழைக்க வேண்டும்' என்ற ஆற்றல் மிக்க ஆண்மை எண்ணம் எண்ணினார் பூங்குன்றனார்.

'வெளியுலகம் உணராத—உணர முடியாத—அக உலக வெற்றிகள், பல இருக்கின்றன. அவற்றின் அருமை பெருமை களை அளவிட்டு உரைக்க முடியாது' என்றறிந்து, அந்த அக உலக அழகு வாழ்க்கைக்கு அரிய வழிகாட்டியாகப் புறநானூற்று 192 ஆம் பாட்டினை ஈன்றளித்தார் சான்றோர் பூங்குன்றனார்.

சிறு மனக் கலக்கங்களுக்கு இரையாகிப் பெரிய நோக்கங்களை இழந்துவிடக்கூடாது. பெரிய நோக்கங்களை ஆண்மையோடு ஏற்று, ஆயிரங்கோடி அல்லல்களையும், இழிவுகளையும் கூடப் பொறுத்துக் கொண்டு கொள்கை வாழ்வு வாழ்வதே 'நெறி வாழ்வு' எனப் படும். இத்தகு நெறியாளரே 'தக்கோர்' எனப்படற்குரியர்.

தக்கோர் போற்றும் கொள்கைகள், நெறிகளே மக்கள் போற்றி வழிபட்டுப் பின்பற்றற்குரியவை, தக்கோரல்லாதார் பேச்சும், காட்டும் வழியும் மக்களுக்குப் பயன்படாதவை. தீயூழில் உய்த்துவிடக் கூடியவை.

உயரிய எண்ணங்களை உருக்குலைக்க முனைபவர்கள் உலகின் வளர்ச்சிக்கு ஊறு தேடுபவர்களாவர். உலகின் முன்னேற்றத்துக்கும், உலக நன்மைக்கும் உதவும்வண்ணம் நல்ல கொள்கைகளை வகுத்தளித்த நல்லறிஞர்கள் மொழிகளை மிக எளிதில் கீழே தள்ளிவிடவோ, புறக்கணிக்கவோ முற்படுவது நல்லதன்று.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ்ப் பண்பாட்டு முழக்கம் அகத்துறைக்கு மட்டுமின்றிப், புறத்துறைக்கும் வகுத்த நல் இலக்கணமேயாகும் அரசியல் துறைக்குச் சிறப்பாக அளிக்கப் பட்ட அரிய அறிவுரை.

ஒருலக ஆட்சி என்பது நடக்காத கனவு என்பது பிழைபட்ட முடிவு. நடக்கவேண்டிய, நடக்கப்போகிற ஒரு செயல் திட்டமே ஓருலக ஓரரசு. இதனால் குழப்பமோ, மயக்கமோ விளையாது. இதனால் எந்தத் தனியாரின் உரிமையும் விருப்பமும் சிதையாது.

மொழியுணர்ச்சியும், கலையொழுக்க உணர்ச்சியும் இரண்டும் இயற்கையான உணர்ச்சிகளே. இவை செயற்கை உணர்ச்சிகள் அல்ல. இவற்றை அழிக்கவே முடியாது. இயற்கை என்றும் வாழுமின்றோ. அது போல் மொழிப்பற்றுணர்வும், கலையொழுக்கக் காதலும் என்றும் வாழும் இதனால் 'யாவரும் கேளிர்' கொள்கை சிதையவே சிதையாது. சிதைவதற்கு வாய்ப்பும் வழியும் கிடையாது.

உலக மக்களின் உழைப்பாற்றலும், அறிவாற்றலும், உள்ளத் திறனும் ஒரே அளவினதாக இல்லை என்பது உண்மையே. ஆனால் அதற்காக அவர்கள் பிரிந்தும் பகைத்தும், முரண்பட்டும் இருக்க வேண்டும் என்ற எத்தகு கட்டாயமும் இல்லை.

உலகின் அடிப்படை வேண்டுகைகள், தன்மைகள், உரிமைகள், கடமைகள் யாவும் ஒரே நிலையினவாகவே உள்ளன. உலக அறிஞர்களின் நோக்கங்களும் கருத்துக்களும் ஒரு முகப்பட்டே இணைகின்றன. அறியாதவர்களும், பண்பில்லாரும், அகத்தெளிவற்றோரும் பிரிவும், பகையும், இகலும் பூசலும் விளைக்கின்றனர்.

நிலம் தீயதாகவோ, நல்லதாகவோ இருப்பதில்லை. அங்கு வாழும் மக்கள் நல்லவர்களானால் நிலமும் நல்லதாகும். தீயவர்களானால் நிலமும் தீயதாகும். ஆகவே நிலப் பிரிவினை காட்டி, மக்களை மருட்டி உலகமக்கள் அனைவரும் உடன் பிறப்பினர் என்ற உண்மை உணர்வு வளர்வதைத் தகைவது நன்மை செய்வதாகாது.

யாரும் யாரையும் பகைக்காமல் நட்புறவாடக் கற்றுக்கொள்ளும் கல்வியே இன்றைய உலக மக்களுக்கு முதல் கற்பிக்க வேண்டிய கல்வியாகும். ஆனால் இக்கொள்கையை வைத்துக்கொண்டே ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தைச் சுரண்டவோ, வீழ்த்தவோ முற்படுவது மன்னிக்கமுடியாத கயமையுமாகும்.

உலகில் அதிகாரம் தான் மக்களுக்குள் வேற்றுமையை கற்பிக்கிறது. பிறரை விரட்டவும், மருட்டவும் தான் அதிகாரம் இருக்கிறதெனின். அதை அழிப்பதே நல்லது. 'அதிகாரம்' ஒரு செயற்கைச் செயலே. அறிவுள்ளவர்கள் உலகில் மிகுந்தால் அதிகாரம் வல்லமை, வன்முறை முதலியவைகள் பயனற்றுவிடும்; செயலற்றுவிடும். ஆகவே பூங்குன்றனார் காட்டும் பொருள்மிக்கப் புலமை வழியே உலக உயிர்கள் செழித்து வளர்வதற்குரிய வழியாகும்.

உலக அறிஞர்கள் உலகமக்களின் உறவு நிலையைவற்புறுத்தித் தொண்டு செய்ய இன்னே விரைந்து முனைந்தால், உலகச் சிக்கல்களைவென்று, உலகை ஒரு குடும்பமாக்க முடியும். சிறுமைக்குச் சிறப்பளிக்காமல் பெருமையைப் போற்றும் பண்புள்ளம், அறிவு வளம், சால்புணர்வு ஒவ்வொருவருக்கும் வளரவேண்டும்.

இந்த உணர்ச்சியை வளர்க்க முற்படும் நல்லோர் முயற்சியைத் தடைசெய்ய முனைபவர்களே மடமையை ஓம்புபவர்கள்.

வளர்வதே இயற்கை நெறி. தளர்வது நம் குறைந்த ஆற்றலின் வீழ்ச்சி நிலையையே குறிக்கும். இதுவரை வளரவில்லையென்றாலும், இனி வளரக் கற்றுக்கொள்வோம். அதை விட்டு, 'வளரவே முடியாது' எனத் தாழ்வு மனப்பான்மையோடு பிற்போக்குக்குச் செல்வது அறிவுடைமையன்று.

பூங்குன்றன் கொள்கையைப் போற்றிக் கடைப்பிடிக்க முற்படும் முன்னர் மக்கள் உணரத்தக்கவையும், பண்படத்தக்க முறையும் சில உள. அவற்றையேனும் கடைப்பிடிக்க ஆர்வம் எடுத்தால் உலகில் உண்மைப் பண்பாடும், உண்மை நாகரிகமும் ஓரளவேனும் இடம் பெறும். அதை நிலைநாட்டவேனும் கற்றோர், அறிஞர், மாந்தர் எனத் தம்மை நம்புபவர்கள் முனைவது நல்லது.

"நேர்மையாக எண்ணும் உரிமை, அவ்வாறு எண்ணிய எண்ணத்தை வெளியிடும் உரிமை, நெறியாக வாழும் உரிமை; நெறி வாழ்வை வளர்க்கும் உரிமை; கடமையை ஓம்பும் உரிமை; கடமையை உணர்த்திக் கட்டுப்படுத்தும் பொறுப்பு எங்கு பறிக்கப் படுகிறதோ; எங்கு இவை செம்மையாகச் செயற்பட இயலாத நிலை அமைகிறதோ; அங்கு பண்பாடுமில்லை; நாகரிகமுமில்லை; அறிவுமில்லை; அறமுமில்லை; நேர்மையுமில்லை; உண்மையுமில்லை

என்று உறுதியாகிறது. ஆகவே மேற்குறித்த உரிமைகளைக் கடமைகளை எல்லாரும் போற்றியொழுகல் முதற்கடனாகும். "அன்பு காட்ட முடியாவிட்டாலும் பகைக்காமலேனும் வாழ உள்ளத்தைப் பழக்கப்படுத்துவது நல்லது."

"பிறர் உரிமையைத் திறமையாகப் பறித்து, அவர்களை அடக்கி யொடுக்கி ஆள்வது அரசியல் வல்லமை, ஆட்சித்திறன் என்று இக்காலத்தில் தவறாகக் கருதப்படுகிறது. உரிமைக் களவு எங்கு இருந்தாலும், எங்கு நடந்தாலும், அங்கே உண்மை அரசியலோ, ஆட்சியியற் கொள்கையோ இல்லை யென்றே பொருளாகும். இத் தகு குறைபாட்டை மக்கள் உணர்ந்தால் அமைதியாக ஒற்றுமையாக அரசை மாற்றி அறிவு வளமிக்கப் பண்பாட்டை உருவாக்க வேண்டும்"

"தன்னைத் தானே கட்டுப்பாட்டோடு அடக்கி ஆளவும், அடங்கி வாழவும் கூடிய ஆற்றலுடையவனே, பிறருக்குக் கட்டுப் பாட்டைக் கூறக் கூடிய தகுதியுடையவன். இவ்வுண்மையை உணர்ந்து தன்னடக்கம் பேணல் தக்கோர் கடமையாகும்.

"அரசியல் மக்களுக்கு நன்மை செய்யத், தொண்டு செய்ய எழுந்ததே. அதை அளவுக்கு மேல் வளர்த்து விட்டது கடந்த தலைமுறையினர்கள் செய்த மாபெருங் குற்றமாகும். அரசியலுக்கு அளவுக்கு மீறிய முதன்மை வழங்கிவிட்டது மக்களினம் செய்த மன்னிக்க முடியாத மடமையாகத் தோன்றுகிறது. ஆகவே, ஆட்சி வல்லமையை ஒரு நிலைப்படுத்த வேண்டியது நல்லோரின் கடமை யாகும்."

"சின்னஞ் சிறு காரணங்களை முன்னிறுத்தி, அதற்கு நாடு, இனம், அரசியல் முதலிய போர்வையைப் போர்த்தி மக்களின் உயிர் உடமை, இன்பம், வாழ்க்கை, உள்ள அமைதி, உணர்ச்சி ஆகிய வைகளைக் காணிக்கையிடும் கொடுமை அறிவுடையதன்று. ஆகவே மக்கள் சிறிய செய்திகளைப் பற்றிக் கவலைப்படாமல் புறக்கணிக்க வேண்டும். போலி அரசியலார்களைப் புறக்கணிக்க வேண்டும்.

உலகில் பெரும்பாலோர் உணர்வுச் செறிவுள்ளவர்களாகவும் இல்லை; அறிவு முனைப்புள்ளவர்களாகவும் இல்லை. இதனால்தான் ஆற்றல் மிக்க உண்மை அரசியலை மக்களால் உருவாக்க இயலாது போய்விட்டது. மக்களோடு இயைந்த ஆட்சியே இனி வேண் டும். மக்களோடு இயையாத ஆட்சி 'குடியாட்சியின்' பெருங் குறையாகும். இந் நிலை நீங்கச் சான்றோர் அரசியலில் இடம் பெறு தல் இன்றியமையாததாகும்.

கொள்கைகளுக்காகப் போராட்டம் நிகழ்த்தவேண்டிய அவல நிலை இன்னும் உலகில் நிலவுவதை எண்ணும்போது, அறிவு நாக

ரிகம் மக்களிடை போதிய அளவு வளரவில்லை என்ற உண்மையை விரும்பாமலே உணர முடிகிறது. இந்நிலையை மக்களும் உணர்ந்து திருந்த வேண்டும்.

கதையில் வரும் தீயோர் பண்போவியங்களை 'நாம் வெறுத்தாலும்; பகைப்பதோ துன்புறுத்துவதோ இல்லை. அதுபோலவே உலக வாழ்க்கை என்ற கதையில்கூட நாம் நடமாடும் தீயோரைக் காண்கிறோம். இவர்களையும் பகைப்பதோ, துன்புறுத்துவதோ கூடாது. அவர்களை மன்னித்துப் புறக்கணிப்போம். அந்நிலையையும் மீறியவர்களை மட்டும் காவலில் வைத்துக் கட்டுப்பாடு செய்வோம். ஆனால், அதே போதில் அவர்களைத் திருத்தி உயர்த்தப் பாடுபடுவோம்.''

இத்தகைய அடிப்படைச் செயல்களைக் கல்வி நிலயத்திலிருந்தே தொடங்கி நிகழ்த்தினால், அடுத்த தலைமுறையில் கூட 'உலக ஒரு குடும்ப உறவை' உருவாக்குவது எளிதே.

அறிஞர்களின் கனவு செயலாக வேண்டுமானால்; அறிஞர்கள் பாடுபடுவதோடு, பின்னோடியரும் உண்மையாகக் கடைபிடித்து ஒத்துழைக்க வேண்டும். வாழ்வின் உண்மைகளை உணர்கின்றவர்கள் அன்பையும், அறத்தையும், பண்பாட்டையும், அறிவையும், இன்பத்தையும் கட்டாயம் நம்புவர்; போற்றுவர்; ஒழுகுவர்; சீர்திருத்துவர்; சீர்பெறுவர்.

பூங்குன்றன் ஒழுக்கம், புரியாத கொள்கையோ; புதிரோ அன்று. நிலைபெறவேண்டிய; நீடூழி வாழப்போகிற உண்மை அறம் அது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே, முனிவின்
இன்னா தென்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம்; ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

(—கணியன் பூங்குன்றனார். புறம் ௧௯௨)

# திருமூலநாயனர்

த. இராமநாத பிள்ளை B. A. Lond
பருத்தித்துறை யாழ்ப்பாணம்.

களப்பிரர் என்னும் கன்னடர் சேர சோழ பாண்டியரை வென்று தம் ஆட்சியைத் தமிழ்நாட்டில் சிறிது காலம் நாட்டினர். இக் கன்னடரைத் தமிழர் தம் நாட்டினின்றும் கலைத்துத் தம் சுவாதீனத்தைப் பெற்றனர். இக் குழப்பம் கி. பி. 5-ம் நூற்ருண்டிலோ 6-ம் நூற்ருண்டிலோ நடந்ததென்பது வரலாற்று வல்லோருடைய துணிபு. கி. பி. 6-ம் நூற்ருண்டில் சேரர் சோழர் பாண்டியர் பல்லவர் என்போர் செங்கோலோச்சியிருந்தனர் என அறிவோம். தமிழரசு மறுபடியும் தழைத் தோங்கியதாகத் தமிழ்க் கல்வியும் வைதிக சமயமும் புத்துயிர்பெற்றன. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் முதலியோர் சைவசமய நூல்களைக்கற்று பௌத்தரோடும் சமணரோடும் வாதாடிச் சைவத்தை நிலைநாட்டினர். இவற்றினை உலக வரலாற்றின்கண் விரித்துரைத்தாம்.

சமயக் கல்வி புத்துயிர் பெற்ற காலத்தில் சித்தர் கோயில் எனப்படும் கஞ்சமலையில் ஒரு மடத்தைத் திருமூலநாயனர் நிறுவினர் எனக் கருதப்படும் நாயனருடைய சந்தானத்தோர் சித்தர் என அழைக்கப்பட்டனர். இச்சித்தர்கள் நாயனர் இயற்றிய திருமந்திரத்தை நனிபயின்றனர்; திருமந்திரமாலையின் சிறப்பாயிரமாகச் சிலசெய்யுட்கள் கூறினர் போலும்,

வந்த மடமேழும் மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம
சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே.

ஆகமம் சொன்ன சுந்தரரைத் திருமூலர் எனச் சித்தர்கள் அழைத்தனராகலின் புராணகாரர் திருமூலநாயனர் என்ற பெயரையே வழங்கினர். மேற்காட்டிய செய்யுளால் ஏழுமடங்கள் நந்திபெருமான் நவின்ற அத்துவிதத்தை விளக்கி வந்தன என்றும் அவற்றுள் திருமூலநாயனர் நிறுவிய மடமே முதன்மை பெற்றதென்றும் தெரிகிறது

திருமூலநாயனர் சைவர்கள் தொழும் 63 நாயன்மார்களுள் ஒருவர். அவரைத் தொண்டருள் ஒருவரெனச் சுந்தரமூர்த்திநாயனர் பாடியுள்ளார்.

வம்பறு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்நற்
கொன்றையான் அடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் ஏயர்கோன்
கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் நாட்டமிகு
தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன் ஆரூரன்
ஆரூரில் அம்மானுக் காளே
(திருத்தொண்டத்தொகை)

சுந்தரமூர்த்திநாயனுர் பல்லவ வேந்தன் கழற்சிங்கனுடைய காலத்தினர் எனவும் அவர் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் இருந்தனரெனவும் ஆராய்ச்சிவல்லோர் செப்புகின்றனர். திருமூலநாயனுருடைய பிறப்பைப் பற்றியும் காலத்தைப் பற்றியும் பலவாறு சிலர் புனைந்துரைக்கின்றனர்.

திருமூலநாயனுர் காவிரிக்கரையிலுள்ள சாத்தனூரில் இடையர் குலத்தில் பிறந்தனர் என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்தது. இக்கொள்கைக்கு ஆதாரம் நம்பியாண்டார் நம்பி இயம்பிய திருத்தொண்டர் திருவந்தாதியே.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்தபி ரான்மூல ஞகின்ற அங்கணனே.
—நம்பி திருவந்தாதி

கொக்குல மேய்ப்பான் குரம்பைபுக்கு என்பதன் கருத்து இடையன் இறந்தபின் அவ்வுடலில் புக்கு என்பதன்றி இடையர் குலத்தில் பிறந்தான் என்பதே பொருத்தமாகும். நம்பிக்குப்பின் இருந்த சேக்கிழாரும் உமாபதிசிவாசாரியாரும் இறந்தவுடலில் ஒருசித்தர் புகுந்தார் புகுந்தார் என இனிது புனைந்துரைததனர். இயற்கை விதிகள் எல்லாம் இறைவனின் விதிகளாகலின், அவை யாண்டும் மாறுத லடையா விதிகளாகவே இருக்கும். ஓர் உடம்பு நோயுற்றுப் பயனற்றதெனப் புறக்கணிக்கப் பட்டதாயின், அவ்வுடம்பினுள் வேருேர்உயிர் புகுமெனல் பொருந்தாது என்றும் அழியாதஇயல்பினை யுடைய சீவன் நிலையில்லாத ஓர் இடையனுக உதித்தான் எனக் கொள்ளுதலே ஏற்புடைத்து 13-ம் நூற்ருண்டில் இருந்த உமாபதிசிவாசாரியார் ஒரு சித்தர் இடையனுடைய உடலுள் புகுந்தனர் என இயம்பினர்.

கைலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார் காவிரி சூழ்
சாத்தனூர் கருது மூலன்
பயிலா நோயுடன்வீயத், துயர, நீடும், பசுக்களைக்
கண்டவனுடலிற், பாய்ந்து போத
அயலாகப் பண்டையுடல் அருளான் மேவி ஆவடுதண்
டுறையாண்டுக் கொருபா லாகக்
குயிலாரும் அரசடியி லிருந்து கூறிக் கோதிலா
வடகயிலை குறுகி ஞரே.

இடையன் ஒருவன் யோகப்பயிற்சியாலும் துறவாலும் உயர் நிலை யடைந்தானாகலின் கைலாயத்துச் சித்தர் எனப் புகழப்பட்டான் திருமூலநாயனார் இமயஞ் சென்று ஆங்குள்ள சமய நூல் வல்லாரொடு கலந்து மெய்ப்பொருள் ஆராய்ந்து தமிழ்நாடு திரும்பி இருக்கலாம். ஆனால் கைலையங்கிரியில் இருக்கின்ற சித்தர் ஒருவர் சாத்தனூருக்கு வந்தனரென்பது புனைந்துரையே' மேலும் இறைவனோடு இரண்டறக் கலந்திருந்த சித்தர் தில்லையில் திருநடனம் காண வேண்டிய அவசியம் தெரியவில்லை. இதுநிற்க இடையன் மெய்யுணர்வுடையோனாகி யோகத்திலிருந்தானாக, அவனைப்பசுக்கள் மோந்திருக்கலாம். யோகத்திருந்தவர் இல்வாழ்க்கைக்கு உதவார் எனவே இடையன் மனைவிக்கு ஆறுதல்கூறினர் அறிவுடையோர். திருமூலநாயனார் மூவாயிரம் ஆண்டு திருவாவடுதுறைக் கோயிலிலுள்ள ஓர் அரச மரத்து நிழலில் அமர்ந்து ஆண்டுக்கு ஒரு செய்யுளாகத் தமிழ் மூவாயிரம் இயம்பினர் என உரைத்தார் உமாபதி சிவாசாரியார். திருமூல நாயனார் தான் ஆண்டுக் கொரு செய்யுள் பாடினர் எனச்சொல்லவில்லை. அவர் எல்லையில்லாத காலம் இறைவனோடு இருந்தேன் எனமொழிந்தனர்.

ஞாலத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப் பாலாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன் நற்பொதியின் கீழே. —திருமந்திரம்

திருமந்திரங்கள் மெய்ப்பொருள் கூறுவனவாகலின், தத்துவங்களைத் தேர்ந்தோரால் பாடப்பட்டிருக்க வேண்டும். இலக்கியக்கதை சொல்லும் கவிஞர் போல் ஒரு நாளில் பல செய்யுட்கள் இயற்றினார் அல்லர் நாயனார். பல்லாண்டுகள் தியானத்திலிருந்து தெளிந்த உண்மைகளை ஓதினார் என்பதே பொருந்தும். எனினும் தமிழ் மூவாயிரம் மிகச்சிறந்த நூலாதலின், அவை இயற்ற மூவாயிரம் ஆண்டுகள் சென்றன எனப் புனைந்துரைத்தனர். திருமந்திரம் இயற்ற மூவாயிரம் அல்ல 30,000 ஆண்டுகள் சென்றன எனக் கூறலாம். மனிதன் இப்பூவுலகில் தோன்றி விருத்தியடைந்து நாகரிகமுற்று அறத்தாறு தத்துவ ஞானம் என்பவற்றை ஆராய்ந்து துணிதற்கு 30,000 ஆண்டுகள் தேவையாயின். ஆனால் ஆண்டுக் கொரு செய்யுள் இசைக்கப்பட்ட தென்பது பொருந்தாதென்பதைக் காட்டுதும்.

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே. —திருமந்திரம்

நந்தியின் சந்தானத்தைச் சேர்ந்தோர் எண்மர் அவ்வெண்மருள் தானும் ஒருவன் என வரலாறு கூறுதற்கு ஓராண்டு தேவையில்லை.

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துரு காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே. —திருமந்திரம்

திருமந்திரம் உபதேசிக்கப்பெற்றதன் சிஷ்யர் எழுவரின் பெயரைச் சொல்லுதற்கு நாயனுருக்கு ஓராண்டு தேவையோ என வினவுகின்றோம். தத்துவமஅசி போன்ற தத்துவவுண்மைகளைத் தேர்ந்து தெளிதற்குப் பல ஆண்டுகள் தேவை என்பது ஒருதலை.

சீவ னெனச்சிவ னெனவே றில்லை
சீவ னார்சிவ னாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பதே. —திருமந்திரம்

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. —திருமந்திரம்

இத்தகைய மெய்ப்பொருள் மொழிதற்குப் பல ஆண்டுகள் தேவையே.

தமிழ் நாகரிகம் தோன்றி முதிர்ச்சி யடைந்த நிலையிலே ஒப்புயர் வற்ற தமிழாகமம் நாயனுரால் ஓதப்பட்டதாகலின் அந்நூல் எக்காலத்தில் எழுதப்பெற்றதென அறிதல் விரும்பப்படும். தமிழ் நாகரிகம் கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றி கி. பி. 1000 அளவில் சீர்குலையத் தொடங்கியதெனலாம். திருமூலநாயனுர் மன்று தொழுத பதஞ்சலியார் காலம் எனகருதப்படும் கி. பி ஒன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் இருந்தனர் என ஆராய்ச்சி வல்லோர் துணிகின்றனர். நாயனுர் சுந்தரமூர்த்திகளுக்கு முன்பு இருந்தவர் என்பது பொருத்தமே. திருமூலநாயனுர் சைவசமயம் குன்றியிருந்து புத்துயிர் பெற்ற காலமாகிய கி. பி. எட்டாம் நூற்றுண்டு கழிந்த காலத்தில் இருந்தவராதல் வேண்டும்.

திருமூலநாயனுர் ஆரியமொழியிலுள்ள நான்மறைகள் உபநிடதங்கள் முதலியவற்றோடு தமிழ் மொழியிலுள்ள திருக்குறள்

முதலியவற்றைத் தேர்ந்து தெளிந்து திகழ்ந்தனர் இத்தகைய அறிஞர் தமிழ்மொழியில் தாமறிந்த சமய வுண்மைகளைச் செப்புதற்குப் பேராசை கொண்டவராயினர்.

மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தை செப்பவந் தேனே. —திருமந்திரம்

தத்துவ நூல்களைத் தேர்ந்து தெளிந்து திருக்கூத்தின் இயலைச் செப்புதலே தம்வாழ்க்கை நோக்கமெனத்தம் மாணுக்கனுக்கு அழகுற விளம்பினர் நாயனுர். தமிழ் மொழியிலே மெய்ப்பொருளைச் செப்புதற்கே தம்மை இறைவன் படைத்தனன் என எண்ணினர் நாயனுர்.

பின்னை நின் றென்னே பிறவி பெறுவது
முன்னை நன் ருக முயல்தவம் செய்கிலர்
என்னை நன் ருக இறைவன் படைத்தனன்
தன்னை நன் ருகத் தமிழ்செய்யு மாறே. —திருமந்திரம்

முழுமுதற் கடவுளின் சொருபத்தைத் தமிழில் கூறத்தாம் பிறந்தார் என மொழிந்தார் நாயனுர்.

திருநந்தி தேவர் சைவசித்தாந்தத்தை முதன்முதன் மொழிந்தனர் என்பது சமயநூலார் யாவருக்கும் உடன்பாடே. நந்திதேவர் உரைத்த ஞான மொழிகளை ஆராய்ந்து ஞானம் பெற்ருர் நாயனுர்.

நந்தியரு ளாலே மூலனை நாடிப்பின்
நந்தியரு ளாலே சதாசிவ னாயினேன்
நந்தியரு ளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தியரு ளாலே நானிருந் தேனே —திருமந்திரம்

நந்தியிடம் கற்றதன் பயனுக நாயனுர் முழுமுதற் கடவுளின் சொருபத்தை உணர்ந்த ஆகமம் சொன்ன சதாசிவ முகூர்த்தத்தின் நிலையை அடைந்தேன் என்ருர் நாயனுர். இஃதுணராதார் திருமூலநாயனுர் மூலன் என்னும் இடையனின் உடம்புள் புகுந்தனர் என்றனர். தம்முடலை அரண் செய்து வைக்காமல் தம்முடலிலிருந்தே திருமந்திரத்தைச் சொல்லுதற்கு என்ன தடை என வினவுகின்ருேம். சூக்குமதேகத்தோடு இருந்த சித்தர் இடையனின் தூலதேகத்தினுள் புகுந்தனரெனின், சூக்கும தேகத்தை

அரண்செய்து வைத்தனர் என்பது பொருந்தாது; சூக்குமதேகத் தோடேயே தூலதேகத்துள் புகுதல் வேண்டுமாதலின், புராணகாரர் நாயனுரின் பெருந்தொண்டைப் புகழ்தற்கே இங்ஙனம் எல்லாம் புனைந்துரைத்தார் என அறிக.

இனி ஆகமங்கள் ஒன்பதே என்பதும் அவ்வொன்பதும் 28 ஆகமங்களாகப் பிரிக்கப்பட்டன என்பதும் ஒவ்வோர் ஆகமும் கருமம் ஞானம் உபாசனை என மும்மூன்று பகுதியாகப் பிரிக்கப் பட்டன என்பதும் புலப்படும்.

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழும்
மோகமில் நாலேழும் முப்பேதே முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்
ருக முடிந்த. அருஞ்சுத்த சைவமே.

இதுவரையும் கூறியவற்ருல் திருமூல நாயனுர் இடையர் குலத்தில் பிறந்து துறவியாகித் திருவாவடுதுறையில் இருந்து உண்மை ஞானம் பெற்றுத் திருமந்திரம் பாடிக் கஞ்சமலையில் மடம் நிறுவித்தம் மாணுக்கருக்கு உபதேசித்தனர் என்பது பெறப்படும்.

''மாயாதனு விளக்கே'' என மெய்கண்ட நாயனுர் 12-ம் நூற்ருண்டில் இனிது உரைத்தனர் அவ்வுண்மையைத் திருமூல நாயனுர் 9-ம் நூற்ருண்டில் வற்புறுத்தியிருத்தலைக்கண்டு மகிழ்க. இம்மை வாழ்க்கையில் உடம்பை ஓம்பி வளர்த்து ஐம்புலன்களை நல்லாற்றுப் படுத்தி ஞானத்தைப் பெறுதலே வீடடைதற்கு வழி யென நாயனுர் அறிவுறுத்திஞர்.

அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சு மடக்கின் அமரரும் அங்கில்லை
அஞ்சு மடக்கில் அசேதனமா மென்றிட்டு
அஞ்சு மடக்கா தறிவறிந் தேனே. —திருமந்திரம்

எடுத்த உடம்பை இகழாமல் அதனைக் கருவியாகக் கொண்டே நன்னெறி அடைவோமாக. இம்மை வாழ்க்கையைப் பயன்படுத்தி மெய்ஞ்ஞானம் பெறுதலே மக்களின் நோக்கமாதல் வேண்டுமென யவன வாசிரியர் அரிஸ்தாத்தில் தம் மெய்ந்நூலின்கண் உரைத் தனர் அவ்வுரையும் நம் நாயனுர் உரையும் ஒத்திருத்தலைக் காண்க.

# பாரதிகண்ட தெய்வம்*

ச. பாலசுந்தரம்.

தமிழ்த்தாய் வாழ்த்தும்—வணக்கமும்:—

1 உன்னுந் தொறும்பொருள் ஒண்மைதரும்புல வோருளத்தும்
பன்னுந் தொறுஞ்சுவை பாயிசை வாணர்வாய்ப் பண்ணிடத்தும்
மின்னுந் தொறும்விறல் மேவுங் கலைஞர்நன் மேனியினும்
மன்னுந் தமிழைநம் மெய்வாய் மனங்கொண்டு வாழ்த்துதுமே.

2 அறத்தினுல் அன்பால் சூழும் அகப்புற வாழ்வாற் செம்மைத்
திறத்தினுல் செங்கோல் ஏந்தும் செவ்வியால் ஆண்மை சான்ற
மறத்தினுல் உலகம்வாழக் காட்டிய மாண்போ டின்பச்
சிறப்பெலாம் உறையும் தெய்வச் சீர்வளர் தமிழ்நாட்டின்கண்

3 இருந்தமிழ்ப் புதுவைமேவும் இலக்கிய மன்றந் தன்னில்
பெரும்புகழ்க் கவிஞர்பெம்மான் பாரதிவிழாவிற் செம்மை
பொருந்துற வீற்றிருக்கும் புகழ்மிகு தலைவ! சீர்த்தி
தருந்தமிழ் அருந்திநாளும் சால்புறக் கிளக்கும் அண்ணல்!

4 சுவைமிகு தமிழால் இன்பம் சொட்டஉள் ளுவகைமேவக்
கவியரங் கேறிநிற்கும் கனிதமிழ்ப் புலமை தேர்ந்தீர்!
செவிமடுத் துளந்திளைத்துச் செந்தமிழ் வளர்க்க எண்ணி
அவையினில் வீற்றிருக்கும் அறிஞர்காள்! வணக்கம்! நன்றி!

அவையடக்கம்:—

5 திக்கெலாம் வியக்குந் தெய்வ வள்ளுவன், துறைமூன்றுள்ளும்
புக்குநாற் பொருளுஞ் சேரக் காப்பியம் புனைந்த சேரன்
இக்கொடு தேன்பால் கைக்க இசைநவில் கம்பன், உள்ளம்
நெக்குநெக் குருகப்பாடும் நால்வரோ டாழ்வார் என்னும்

6 தெய்வமாக் கவிஞர்வாக்கில் சீர்நிறை கவியாய்த் தோன்றி
உய்வகை யருளும்சீர்த்த ஒண்டமிழ் மொழியாற் செய்யுள்
செய்வதற் கொப்பினேன்என் சிந்தையுள் தமிழ்த்தாய் நிற்கும்
மெய்ம்மையா லன்றியென்றன் மேதையா லிசைப்பே னல்லேன்

7 சார்ந்தவர் தமக்குமூன்று தமிழையும் வழங்கும் சங்கம்
சேர்ந்துநின் றிருந்துகேட்ட சிற்றறிவதனை லிங்கே
நேர்ந்துசெம் புகழால்நீண்ட பாரதிகண்ட தெய்வம்
தேர்ந்துபொற் கவிதையாலே செப்புவேன் ஒப்புவீர்நீர்

---

*25—9—60ல் புதுக்கோட்டை இலக்கிய மன்றத்தில் நிகழ்ந்த பாரதிவிழாக் கவியரங்கத்திற் பாடப்பெற்றவை.

8 அலைகடல் நாவாயோட்டும் அறிஞர்காண் சிறுவர்தாழை
இலைமடல் மழைநீத்தத்துள் இட்டுளம் உவக்குமாபோல்
கலைநிறை அறிஞர்செய்த காவியச்சிறப்பை எண்ணி
நிலைபெறு கவிதைகூறும் நினைப்பினாலிசைக் கின்றேனால்

9 திரைபடும் நிழலைக்கண்டு சிந்தையுள் மகிழ்வா ரைப்போல்
வரையுமென் கவிதையாவும் வாலறிவதனாற் சான்றோர்
உரைமிகு பொருளாளெண்ணி ஒளிவளர் சிந்தையாலே
புரையிலா தாக்கிவாழ்த்துப் புகன்றருள்செய்வர் அன்றே

10 விருந்தெனின் முனைந்துசென்று விருப்பொடுபிளக்கும்வாய்தான்
மருந்தெனின் வருந்திமூடல் வழக்கமே ஆயினும்நோய்
திருந்துதற் கதுவும்தேவை தேர்ந்தபா ரதியின்சிந்தை
பொருந்திய தெய்வக்கொள்கை புகலுவேன் புரிந்தமட்டே.

பாரதியின் சிறப்பு :—

11 யார்இந்த பாரதியார்? ஏனிவரின் சொற்களையிப்
பாரறிய வேட்கைப் படுகிறது? இவ்வுலகம்
தாவாத ஞானந் தனையுற்றார் தம்வேந்து
சாவா மொழிபேசும் தண்கவிஞர் என்றிந்த
மூவர் மொழிகேட்க முந்துமென்பார் ஏனென்றால்
ஈங்கிவர்கள் யார்க்கும் அடிமைப் படுதலிலை.
ஆங்கவருள்,
ஆணையிடும் மன்னன்; அருள்வழங்கும் ஞானியரோ
அன்பால் உளத்திசைப்பார்; ஆறறிவால் ஆய்ந்துசுவைத்
தின்பால் இயல்நெறியால் யாவர்க்கும் ஏற்றபெருஞ்
சால்போ டிசைப்பார் தகவார் பெருங்கவிஞர்
ஆதலினால்,
கோல்பிடித்துத் தண்டங் கொடுத்தளிக்கும் மாமன்னன்,
செம்மை யறந்தாங்கி மும்மைத் திறம்பேசி
இம்மைப் பயன்விழையா ஞானி; இவர்களினும்
பாரில் உயர்ந்தார்; இப் பாரதிக்கும்அப் பெருமை
கூறின் அவர்கூற்றைக் கொள்ளத் தடையுண்டோ?
பாரதியைப் பற்றிஎன்றன் பாயிரத்தைக் கேண்மின்!
சமய சமுதாய வாழ்வோ டறிவு
குமைந்து, மொழிப்பற்று குன்றிக், குடிப்பெருமை
இன்றி, எழுச்சியற்றுத் தாய்நாட்டுப் பற்றழிந்து
நன்றி மறந்தொழிந்து நாய்களினும் தாழ்வாகிச்
சிந்தை யடிமை செயலடிமை வேட்டயலாய்
வந்தவர்க்குக் கால்பிடிக்க வற்றாமகிழ் வெய்தி
நிந்தை பெருக இருந்த தமிழ் நாட்டில்
அந்தணனாய்த் தோன்றி அணிதமிழாற் பாப்புனைவான்
பெண்ணின் சிறப்பெடுத்துப் பேசுகின்ற ஆசானாய்
பண்ணின் நெறிதழுவிப் பாட்டிசைக்கும் வண்டாய்

இருள்நீக்க ஓங்கும் இளமதியாய் உண்மைப்
பொருள் காட்டப் போந்தசுடர்ப் புத்தொளியாய்
மூடப் பழக்கம் முறிக்க வரும்புயலாய்
வேட்மிடும் போலியரை வீழ்த்தும் வடிவேலாய்ப்
பாமரர்க்கும் பாட்டின் சுவையளிக்கும் பைங்குயிலாய்த்
தேமதுரச் செந்தமிழின்சீரைத் திசைமுற்றும்
தூக்கி பரப்பவரும் தூதுவராய்ச், சோம்பரினைத்
தாக்கி எரிக்கும் தணலாய்நம் தாய்நாட்டின்
கொத்தடிமை வெட்டவரும் கோடரியாய்ச் சாதியெனும்
தொத்து பெருநோய்க்குத் தித்திக்கும் நன்மருந்தாய்
பாசிபடர்ந்த பழம்பெருமை தூய்மைபெற
வீசிப்பொழியும் வியன்மழையாய், முந்தும்
புதுமைக் கொளியேற்றும் பொன்னுய்ப் புலமை
இதுவென்று காட்டஎழுந்த வரகவியாய்
வந்த பெரும்புலவன் வான்புகழ்சால் பாரதிதன்
உள்ளம் உரையுடலால் ஓங்கும் உரிமையுணர் (வு)
அள்ளித் தெளிக்கும் அருந்தமிழின் தேனருவி
கொள்ளக் குளிர்வீசும் கோடைநிலா; ஈங்கு
விளை நிலத்திற் பாயாமல் வெள்ளத்தை நன்கு
தளையிட்ட பான்மைபோல் தண்டமிழைச் சில்லோர்
கூலிபெற்று வேலிகட்டிக் கூட்டிச் சிறையிட்டுக்
கானல்நீர் காட்டிவந்த காலத்தே ஆங்கதனை
நாலு திசைமுழுதும் நாத்தழைக்கப் பாய்ச்ச
மடைதிறந்த செம்மல், மறுமலர்ச்சி கொள்ள
நடையளித்த நல்லோன் தமிழ்த்தாய் நறும்புதல்வன்
ஆதலினுல் அன்னேன் அருளும் மொழிகேட்பின்
பூதலத்தோர் கொள்வார் புகழ்.

12 ஆரமுதத் தமிழ்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டிவ்
அகிலமெலாம் ஒளிபரவப் புகழுடம்பால் மிளிரும்
பாரதியின் தீந்தமிழிற்பரவி எழில்மேவும்
பற்பலவாம் சுவைதேர்ந்திப் பாவலர்கள் இன்பச்
சீரமைந்த தீங்கவியாற் செப்பசுவைத் துள்ளீர்
தெய்வமெனிற் செவிபுதைத்து மாறுமிற்றை நாளில்
பாரதியார் கண்டதெய்வப் பான்மையினைச் சற்றே
பாடவிழைந் தழைத்தீர்நும் பண்புமிக நன்றே

13 "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாமென்(று)
அள்ளுசுவைத் தீங்கவிதை அருளியசெந்
தமிழ்ப் புலவன் அறிவா லோர்ந்து
விள்ளுமொரு தெய்வநிலை விளக்கமுற
உணருகின்ற வீரர் கல்வி
எள்ளளவும் இல்லாதேன் இசைப்பதற்கிங்
இசைகின்றேன் இதுவியப்பே.

தெய்வ நிலை:—

14 வானை நினைந் தெழுந்துசெலும் மலர்ச்செடிமேல்
வண்ணமுறப் பூத்திருக்கும் மலரைக்கண்டு
தேனை நினைந் தெழுகின்ற வண்டின் கூட்டம்
தித்திக்கும் தேனையுண்டு மகிழ்ந்துபாடும்
தேனையந்த மலருக்குள் செலுத்தினோர் யார்?
தெரியாது வண்டிற்குச் சிந்தையில்லை;
மானிடராய்ப் பகுத்தறிவைப் பெற்றுநிற்கும்
மனிதகுலம் சிந்தித்த தின்னும்சிந்தை

15 மூடவில்லை முயல்கிறது மேலும்; மேலும்
மூழ்கியெழும் நீரினது தண்மை. எங்கும்
ஓடிமெல்லத் தீண்டுகிற காற்றின் வன்மை
உடல்தீண்ட உயிர்வாடும் தீயின் வெம்மை
தேடியெல்லை காணுவான் பரப்பின் உண்மை
செய்தவர் யார்? சிந்தையின்னும் தெளியவில்லை
நாடியதன் இயல்பறியும் அறிவின்மிக்கார்
நானிலத்தில் எங்குமுளர்; அவற்றின்தோற்றம்

16 தோன்றியதன் மூலம்அதைத் தோற்றினோர் யார்?
தொடர்ந்தவையுட் சிலமாற அழியாதென்றும்
ஊன்றிமிகும் நிலைமையெலாம் முழுதுணர்ந்தோர்
உள்ளபடி உளராகுல் அவரே உள்ளார்.
வான்றிகழும் கதிரும்அதை வட்டமிட்டு
வருகின்ற கோள்நிலையும், வரம்பும்யாவும்
ஆன்றபெரும் அறிவதனுல் ஆய்கின்றூர்கள்
அவைவந்த வரலாற்றை அறிந்தவர் யார்?

17 "தீப்பிழம்பு செஞ்சுடராம் அதன்வெளிச்சம்
திங்களிலே படுகிறது, புவிஉருண்டை
யாப்புமுறையா லவைகள் சுழலும்" என்பார்
யார் இவற்றைச் சுழற்றுவது? விடைவியப்பு!
நாப்படைத்தோர் இயற்கைவலி, நியதிஎன்பார்;
நல்லுடம்பும் காணுதஉயிரும் பெற்றுக்
காப்பெதுவும் இன்றிநிகழ் பொருள்பல் கோடி;
காட்சிதரும் உயிரில்லாப் பொருள்பல் கோடி

18 ஒவ்வொன்றும் தன்மையெழில் சாயல்செய்கை
உணர்ச்சிஅறி வியல்பிவைகள் ஒவ்வாதிங்கே
எவ்வளவாண் டாகவிவை இயங்கல் கண்டோம்!
ஏனென்றுசிந்தித்தார் யார் யார்? கேட்பின்
அவ்வளவும் இயற்கைதான் என்பார் — ஆனுல்
ஆண்மையறி வொழுக்கமிவை வளர்த்துநாளும்
செவ்வியொடு சிந்தனையும்பெற்ற மாந்தர்
சிறுமையுறக் காரணம் என்? அதுபோகட்டும்

19 வளமான உடல்பெற்றும் மருத்துவர்தம்
வாய்மைஎனும் ஆய்வுரைகள் பெற்றிருந்தும்
உளமார விரும்பாமல் சாதல் எனே ?
ஓதுகலைக் கல்வியெலாம் மறந்து நோயால்
தளர்வாகி மெலிதல் ஏன் ? — தானேபெற்ற
தனயர்களுள் ஒருவரைப்போல் ஒருவரில்லை
அளவாகச் சிந்திக்கின் அறிவுபோதா(து)
அருவியப்பாய் முடிவதன்றி அமைதியுண்டோ ?

20 இதுவிதுவும் கூடவிது உண்டாம் ஆங்கே
இதைப்பிரித்தால் இதுவாகும், இதனைக்காண
இதுகருவி யாகும்; இது இதனை வெல்லும்
என்றென்றை ஒன்றாக மாற்றல் — மேலும்
அதுவதனைக் கூட்டல குறைத் தளந்துபார்த்தல்
அத்துணையா மன்றி ஒருதுரும்பையேனும்
புதுமதியால் பிறப்பித்தார் இன்றும இல்லை
புவியளந்தார் மதியளக்கப் புறப்பட்டுள்ளார்

21 ஆயினும்இம் மனிதகுலம் துன்பமின்றி
அமைதியொடு வாழ்கிறதா ? மருந்திருந்தும்
நோயினின்றும் உய்ந்ததுவா — பசிபோயிற்று
நோக்குங்கால் அழுக்காறும் பகையுமன்றி
வாயினும்நாம் சொல்வதற்கோர் ஒழுங்குமில்லை
மற்றிதற்கோர் காரணந்தான் இன்றிப்போமோ ?
தாயினும்நல் லருளுடைய சான்றோர் அந்தத்
தன்மையினை ஆய்ந்தார்கள் — ஆய்ந்தநல்லோர்

22 எல்லையிலாத் திறல்என்றார் தெய்வமென்றார்
இறையென்றார் கடவுள் கந்தழியென்றார்கள்
சொல்லளவால் அளந்துணர்த்தல், உணர்தல்ஒல்லா ;
தோய்ந்தவர்கள் உணர்வார்கள் என்றார் ; அந்த
நல்லியலை விளக்குவதே 'சமயம்' என்றார்
நானிலத்தில் எங்குமிதுவிளங்கும் — ஆனால்
தொல்லைகெட அவர்கண்ட சமயத்தாலே
துன்பமும்பல் கோடிவிளைந் துளதிங் கம்மா !

23 வரலாறு காணுமுன் சமயம் வாழ்ந்த
வகைதெரிய வழியில்லை அக்கா லத்தும்
ஒருவாறு தெய்வநினைப் பிருந்த தென்ற
உண்மைமறுப் பதற்கில்லை யவனர்சீனர்
பெருவாழ்வு வாழ்ந்தஎகிப் தியர்கிரேக்கர்
பேணியதோர் சமயநிலை விளங்காதேனும்
குருவென்றும் இறையென்றும் தூதரென்றும்
குவலயத்தார் போற்றும்பெரு மக்களாகி

24 அருள்வேட்ட சித்தார்த்தர் அருநோன் பெண்ணும்
அகளங்கர் அன்புரைத்த ஏசுநாதர்
மருள் நீக்கப் போந்தநபி நாயகங்கள்
மக்களுய்ய மாணறிவால் மதங்கண்டார்கள்.
இருள் நீக்கும் நான்மறையை முதலாக்கொண்ட
இருபெரிய வைதீகச்சமயப் பாங்கில்
பொருள்கண்ட சங்கரர்ரா மானுசர்சீர்
மத்துவர்மெய் கண்டார், சைதன்யர்போன்ற

25 மாதவத்தோர் பாரதத்தில் வேதச் சார்பால்
மதங்கண்டார் மதநெறிக்கு விளக்கந் தந்தார்
ஓதுமவர் கொள்கையினுள் ஒன்றை யொன்றிங்
கொவ்வாமல் மாறுபடல் உண்மை யேனும்
மோதுகின்ற பகையெல்லாம் நெறிக்கே யன்றி
முழுமுதல்உண் மையில்முரணே இல்லை — ஆங்கே
வாதில்லைத்; தெய்வமுள தென்னுங் கூற்றில்
வம்பில்லை; பாரதியார் கூறுகின்றார்

பாரதிகண்ட தெய்வம்:—

26 *"தெய்வம் பலபல சொல்லிப் — பகைத்*
*தீயை வளர்ப்பவர் மூடர்*
*உய்வதனைத்திலும் ஒன்றாய் — எங்கும்*
*ஓர்பொருளானது தெய்வம்*
*தீயினைக் கும்பிடும் பார்ப்பார் — நித்தம்*
*திக்கை வணங்குந் துருக்கர்*
*கோயிற் சிலுவையின் முன்னே — நின்று*
*கும்பிடும் ஏசு மதத்தார்*
*யாரும் பணிந்திடும் தெய்வம் — பொருள்*
*யாவினும் நின்றிடுந் தெய்வம்*
*பாருக்குள்ளே தெய்வம் ஒன்று — இதில்*
*பற்பல சண்டைகள் வேண்டா"*

ஒன்றினென் றெவ்வாமதத்தார்க் — கிந்த
உண்மை உரைத்தமை போலே
ஒன்றும் மதத்தில் வெவ்வேறாய்த் — தெய்வம்
ஓதுநர்க்கும் உரைக்கின்றார்,

27 *"மூர்த்திகள் மூன்றுபொருள் ஒன்று — அந்த*
*மூலப்பொருளொளியின் குன்று*
*நேர்த்தி கமழுமிந்த ஒளியை — எந்த*
*நேரமும் போற்று சக்தியென்று"*

ஓர்த்துமொழியு மிந்த ஒருமை — கவி
உள்ளத்தை நாமறிய வருமே
சார்த்தி வழங்குமிந்தப் பெருமை — பிற
சமயத்திற் காணல்மிக அருமை

28 *"நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்*
*இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல்"* — தமிழினிலிவ்
வாறுரைத்த நங்கள் அமரகவி பாரதியார்
கூறுவதைக் காண்போம் குறித்து

29 *"உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்*
*உண்மையென்று தானறிதல் வேணும்"* — இது
பயிலுங் குழந்தைகளுக் காகச் — செய்த
பாரதியின் சீரமைந்த பாடல்

30 சிந்தனைக்கும் எட்டாத பொருளைப் பற்றிச்
சிந்தனையே உருவான கவிஞர் மக்கள்
மந்தையினுக் கிசைப்பதென்ன என்று சான்றோர்
மனம்ஊன்றிப் பார்ப்பதுதான் இயற்கை, மேலும்
நிந்தனைக்கும் நினைப்பிற்கும் நேயத்திற்கும்
நெக்குவிடாக் கொள்கையிந்த தெய்வக் கொள்கை
வந்தனைக்கிங் குரியமொழிக் கவிஞர்கூறும்
வாக்கினிலே அதன்வரவை நோக்குவோம்யாம்

31 அம்பொற் பதத்தர விந்தத்தில் வாழ்பவரை
ஆணையின் மேவி நின்றே
செம்பொருள் யாவையும் தேர்ந்த கவிஞனின்
தேமொழிப் பாவழியே
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வுதரும் பதம்
ஓம்-சக்தி ஓம்-சக்தி ஓம் - என
நம்பர்க் குரைத்தனன் நான்மறை மந்திரம்
நாடுக நாடுகவே!

32 *"புத்த பகவான் — எங்கள்*
*புத்த பகவான் — அவன்*
*சுத்த மெய்ஞ்ஞானச் சுடர்முகங் கண்டேன் (புத்)*
மாரிபோற் றமிழைப்பெய்த வரகவி கனவிற்கண்ட
ஆரிய தரிசனத்தோர் அருங்கவி; இதனுட் புத்தர்
வீரவில் விசயன் கண்ணன் வேறிலைஎன்றார் இந்தச்
சீரிய கவியால் தெய்வச் சிக்கலை விடுத்தா ரம்மா!

33 பண்ணிறை கண்ணனின் பாக்கள் — கவிஞர்
பரவிய இறைநெறி பகர்ந்திடுமால்;
*"உண்ண உண்ணத் தெவிட்டாதே — அம்மை*
*உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்"*
துயர்தீர்க்கும் அன்னையாச் சொன்ன கவிதையிது.

34 தந்தையாத் தாயாகத் தன்னுடைய தோழனுச்
சிந்தை அறிந்துதவும் சேவகனுப் — பந்தமுறு
காதலனுக் காதலியாக் காண்மகவாக் கோக்குருவா
ஓதுகின்றார் காண்கமிக ஓர்ந்து.

35 "சின்னஞ்சிறு கிளியே — கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே..............................
..............................................................
பிள்ளைக் கனியமுதே — கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே"

கொள்ளை யின்பங் கூட்டுங் குழந்தைக் கவிகளிலே
உள்ளத் திறையுணர்வை ஊட்டும் சிலவரிகள்.

"கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலா
எண்ண விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்
செல்வம் இளமாண்பு சீர்சிறப்பு நற்கீர்த்தி
கல்வியறிவு கவிதை சிவயோகம்
தெளிவே வடிவாம் சிவஞானம் என்னும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவரு கின்றனகாண்"

கண்ணனைச் சேவக னாக்காட்டும்மொழி யிவைகள்

"தூண்டிற் புழுவினைப்போல் — வெளியே
சுடர்விளக் கினைப்போல்"......இஃது

ஆண்டகையை எண்ணி
அழுங்குஞ் சிறு குறிப்பு

"திக்குத் தெரியாத காட்டில் — உனைத்
தேடித் தேடி யிளைத்தேனே"... இது

நெக்குருகி உள்ளொளியைத்தேடும் நெடுங்குறிப்பு

"தேனை மறந் திருக்கும் வண்டும் — ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் — இந்த
வைய முழுதுமில்லைத் தோழி
கண்ணன் முகம் மறந்துபோனால் — இந்தக்
கண்கள் இருந்துபய னுண்டோ?" —இது

கண்ணனைக் காதலனா எண்ணிக் கருத்தழியும்
வண்ணப் பொற்பாட்டிற் சிதறுமணியுட் சிலவாம்
காதலியாப் பாடும்கவியின் நுணுக்கத்தை
மேதைகளேயன்றிவெறுங் காமுகரோ தாமறிவார்?

பாயுமொளி நீயெனக்குப் பார்க்கும்விழி நானுனக்கு
தோயுமது நீயெனக்குத் தும்பியடி நானுனக்கு

வேதாந்தமிங்கே விளம்புகின்றார் — சான்றாக

இன்பமாகி விட்டாய் காளி என்னுளம்புகுந்தாய்
பின்பு நின்னையல்லால் காளிபிறிது தானுமுண்டோ?

பாருங்கள் தேருங்கள் பரம்பொருளோ டொன்றுவதை

36 ஆறுபல வாயிடினும் கடலிற் சென்று
அணைதலிலே மாறுபடா; குயவன் பாண்டம்
வேறுபல வடிவாகி விளங்கி னாலும்
விளைந்ததுமண் ணொன்றுபல உவமையாலே

கூறுபடு சமயத்தார் இசைப்பார் அந்தக்
கொள்கையிலே பாரதியின் கொள்கை என்ன ?
வீறுபெறத் தமிழ்க்கவிதைத் தேனிற்செய்த
வேந்த னுளம்கொண்ட அருள்தெய்வம் யாது

*" யாதுமாகி நின்ருய்காளி — எங்கும் நீ நிறைந்தாய்*
*தீதுநன்மை எல்லாம் காளி — தெய்வலீலை யன்ரே*
*பூதமைந்தும் ஆனுய் காளி — பொறிகளைந்துமானுய்*
*போதமாகி நின்ருய் காளி-பொறியை விஞ்சிநின்ருய் "*

*" சத்திபதமே சரணென்று நாம் புகுந்து*
*பத்தியினுற் பாடிப்பலகாலும் — முத்திநிலை*
*காண்போம் அதனுற் கவலைப் பிணிதீர்ந்து*
*பூண்போம் அமரப் பொறி "*

37 வித்திவிளைவாக்கி வேட்கையற உண்டுவக்கும்
புத்தியிலார்க் கிங்குப்புகல்கின்ருர் — *" சத்தியமாய்*
*சத்தியே நம்மைப் படைத்ததுகாண் நூருண்டு*
*பத்தியுடன் வாழும் படிக்கு "*

38 *" இன்பவடிவாகி நிற்பாள் — துன்பமெலாம்*
*[அவளிழைப்பாள்*
*இஃதெல்லாம் அவள் புரியும்மாயை — அவள்*
*ஏதுமற்ற மெய்ப்பொருளின் சாயை "*

அன்புடனே கூறுகின்ருர் அத்துணையும் மெய்யன்ரே
அவையாவும் நாமுளத்திற் றேர்ந்தால் — அறி
வாண்மைஎழி லோடுவரும் சேர்ந்தே.

39 ஆற்றலொன்றே தெய்வமதைச் சத்தியாக
ஆரியர்தம் வேதத்துள் அமைத்தாரென்று
போற்றியுளம் களிக்கின்ருர் பூவில்உள்ள
பொருள்களெலாம் இறைவடிவே இறையே யாமென் (று)
ஏற்றமிகத் துதிக்கின்ருர் பாடுகின்ருர்
இன்பதுன்பம் ஒருமுகத்தின் இருகண்என்று
நாற்றிசையும் ஒலியெழுப்பி முழக்குகின்ருர்
நாத்திகர்போல் சிலபோது பேசுகின்ருர்

40 ஆத்திகத்தை, வேதத்தைப் பேணி எண்ணி
ஆரியராய் வாழ்ந்தகவி பாரதிக்கு
நாத்திகத்தில் நம்பிக்கை யில்லை — ஆனுல்
நடுநிலையை அவர்மறக்க வில்லை — வீணே
கூத்தியற்றும் சடங்குசபம் பூசை வேள்வி
குறிக்கோ ளாகாவென்றும் குணமொன் றில்லார்
சாத்திரத்தைச் சான்ருகக் காட்டிஏய்த்தல்
தவருகும் எனவுமெடுத் தறைதல் கேண்மின்

41 "ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் ! ............
மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள் !"—வையும் மொழியிவை

"சுத்த அறிவே சிவமென்று கூறும்
சுருதிகள் கேளீரோ? பல
பித்த மதங்களிலே தடுமாறி
பெருமை யழிவீரோ ?"—உய்ய மொழிந்தவை

"காவித்துணி வேண்டா கற்றைச் சடைவேண்டா
பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கே"
மேவித் தவவேடம் வெறில்லை என்பார்க்குச்
சேவித்துப் பாரதியார்செய்த கவிதையிது.

"சாத்திரங்கள் வேண்டா சதுமறைகள் ஏதுமில்லை
தோத்திரங்கள் இல்லையுளம் தொட்டுநின்றால் போதுமடா"
பாத்திரத்தால் வையத்தைப் பாலிக்கும் பாரதியார்
ஆத்திரத்தாற் சொன்ன அருங்கவியுள் ஈதொன்று

42 வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணைசெய்யும் ஒலியிலிருப்பாள்
கோத கன்ற தொழிலுடைத்தாகிக்
குலவுசித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத் தினெழிலிடையுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள் "... இது
கலைமகள் நிலையெனப் புலவனுரைத்தது.

43 மொழிபடு செல்வியை வழிபடும் நெறிஎன
எழிலொடு பாவலன் இசைப்பதைக் கேண்மின்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கிய தன் மேல்
சந்தனத்தை மலரையிடுவோர்
சாத்திரம் இவள் பூசனையன்றாம்
வீடுதோறுங் கலையின் விளக்கம்
வீதிகள் தோறும் இரண்டொருபள்ளி
தேடுகல்வி யிலாத தோரூரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ளும் வழியிவை கண்டீர்

44 வேதாந்தக் கொள்கை யிவர் விருப்பமென்று
விளம்பு கவியத்துணையும் எழுந்து சொல்லும்
நாதாந்த முடிவினிலே விளங்கும் அந்த
நல்லொளியை நாடியரும் பேற்றை எய்திப்
போதாந்தம் புரியும் வகை புகலுகின்றார்
புரட்சியொளி வீசு நெறி பரப்பிச் சத்தி
பாதாந்தம் அன்றியிந்தப் படியினுள்ளார்
பண்பமை வாழ் வெய்தலரிதா மென்கின்றார்.

45 கற்றதனால் ஆயபயன் வாலறிவன் நற்றாளை
உற்றமைதல்' என்றுரைத்த வள்ளுவனைப்—பெற்றதமிழ்
நாட்டிற் பிறந்த நறுங்கவிஞர் ஆதலினால்
பாட்டிலி சைத்தார் அதனைப் பார்!

*" அறிவாகிய கோயிலிலே*
*அருளாகிய தாய்மடிமேல்*
*பொறிவேலுடனே வளர்வாய்—அடியார்*
*புதுவாழ் வுறவே புவிமீதருள்வாய் "*

46 நெஞ்சமிருண்டு நினைவெல்லாம் புன்மைகொளும்
பஞ்சையருக் கோதுகின்றார் பாரதியார்—" *தஞ்சமென்றே*
*வையமெலாங் காக்கும் மகாசத்தி நல்லருளை*
*ஐயமறப் பற்றல் அறிவு.*'!

47 *காக்கைச் சிறகினிலே நந்தலாலா—உன்றன்*
*கரியநிறத் தோன்றுதையே நந்தலாலா* "—என்னும்
பாட்டில் இறைநிலையைப் பாடும் முறையால்—இங்குப்
பாரதி பரத்துவத்தை இயம்புகின்றார்.

48 *" கேட்பது நீ பெற்றிடுவாய் ஐயமில்லை*
*கேடில்லை தெய்வமுண்டு வெற்றியுண்டு*
*நமோ நம ஓம் சத்தியென நவிலாய் நெஞ்சே "*
*" சோம்பற் கெடுக்கும் துணிவே சக்தி*
*சொல்லின் விளங்கும் சுடரே சக்தி*
*தீம்பழந் தன்னில் சுவையே சக்தி*
*தெய்வத்தை எண்ணும் நினைவே சக்தி "*

வீம்புகள் பேசி வேறுபடுத்தி
வீணே சமயப் பூசல் நடத்தி
தாம்பின் சுருக்கைக் கழுத்திடும்பத்தி
தாங்குபவர்க் கவர் கூறும் நற்புத்தி.

முடிப்புரை :—

49 தெய்வ நிலைபற்றித் தேசத்தின் மாக்கவிஞர்
செய்த கவியனைத்தும் செப்ப இயன்றிடுமோ ?
எண்ண இனிக்கும் எடுத்தியம்ப நாவினிக்கும்
வண்ணக் கருத்துக்கள் வாழ வழிகாட்டும்
ஏதுமறியேனை இங்கழைத்துப் பாரதியார்
ஓதுகின்ற தெய்வநெறி சொல்லவகை செய்த
இலக்கியமன் றத்தார்க் கிதயங் கலந்த நன்றி
தண்டமிழைப் போற்றும் தலைவரவர்கட்கும்
கொண்டபெரும் அன்பாலே கூடியுள்ள நல்லவைக்கும்
அன்பு கலந்தநன்றி அன்னை தமிழ்க்கென்றன்
இன்ப வணக்கம் இது.

வாழ்த்து :

50 பொங்கறி விளங்கோ கம்பன் பொன்மொழி அமிழ்தவாரி
நுங்கி, வள்ளுவப் பேராழி நுழைந்து தோய்ந்தாடித் தேர்ந்து
இங்கெழிற் றமிழால், யார்க்கும் இயைந்த நற்கருத்தால் உள்ளப்
பங்கயம் விரிக்கும் பண்பார் பாரதிப் பாக்கள் வாழி.

சென்ற இதழின் தொடர்ச்சி :

# அறிவன் கோயில்


வித்வான் சி. கோவிந்தராசனர்.

தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை

(உரிமை ஆசிரியருக்கு)


## திருநலக் குன்றம் (குடுமியான் மலே)

பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர் ஆகிய மன்னர்களுடைய வரலாற்றின் சிறந்த சின்னங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இச் சிற்றூர், சிற்றண்ணல் வாயில் மலைக்கு மேற்கே நான்கு கல் தொலைவில் அமைந்துள்ளது ஊரின் மேற்குப் பகுதியாக அமைந்துள்ள குன்றமே குடுமியான்மலே யென்று அழைக்கப் படுவதாகும்.

முதல் இராசராசன் காலத்தில் இப் பகுதி குன்றியூர் நாட்டின் உட்பகுதியான திருநலக்குன்றம் என்று பெயர் பெற்றிருந்ததைப் பெரும்பான்மையான கல் வெட்டுகள் கூறினும், அதே காலத்தில் தோன்றிய சில கல்வெட்டுகளில் திருநிலக்குன்றம் என்றும், "இரட்டபாடிகொண்ட சோழவளநாட்டுக் குன்றியூர் நாட்டுத் திருநலக்குன்றம்" என்று விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது.

மலேயின் கிழக்குப் புறத்திலமைந்துள்ள பல்லவர்காலக் குகைக் கோயிலுடன் இணைந்து முன்புறமாக எழுந்துள்ள பழமையான சிவன் கோயில் வரலாற்றுச் சிறப்புடையதாகும். இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனேச் சோழர் காலக் கல்வெட்டுகள் திருநலக்குன்றமுடையார் என்றும் திருநலக்குன்றமுடைய நாயனர் என்றும் கூறுகின்றன. கி. பி. 16, 17-ஆம் நூற்ருண்டுகளில் எழுந்துள்ள நாயக்க மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகளில் முறையே குடுமிநாத சுவாமி, குடுமியார் நயினர், சிகாநாதர் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளன.

கி. பி. 1615-ல் இங்கு வெட்டப்பட்டுள்ள நாயக்கர் காலக் கல்வெட்டொன்றில் "தென்கோனுட்டு ஒல்லேயூர் கூற்றத்துச் சிகாநல்லூர்" என்று இப்பகுதி குறிக்கப்பட்டுள்ளது. தென் கோனுட்டின் தலேயாய ஊராக இருந்தமை குறித்து இதனைச் 'சிகாநல்லூர்' (சிகை + நல்லூர்) என்று சிறப்பாக அழைத்திருத்தற் கூடும். எனவே இங்கு கோயில் கொண்டுள்ள இறைவனும் ஊரின் பெயராலேயே சிகாநல்லூர் நாதர் என்று பெயர் பெற்றிருக்கவேண்டும். அப்பெயர் காலப்போக்கில் குறைந்து சிகாநாதர் என்ற அளவில் உள்ளதெனலாகும்.

இஃதொருபுறமிருக்க, சிகை என்பதற்குத் தலைமயிர் என்று பொருள்கொண்டு, அதற்கேற்ப இக் கோயிலில் பிழை செய்த அர்ச்சகரைக் காப்பாற்றும் பொருட்டுச் சிவபெருமான் முடியுடன் விளங்கினுர் என்று தலபுராணம் கூறுகின்றது. இறையகப்பணியாளர் பல குறைகளை நிகழ்த்தி வந்தமையை இக்கதை குறிப்பாகச் சுட்டுவதால் விடுத்து மேற்செல்லுதும்.

பழமை நிறைந்த சிகாநாதர் கோயிலில் நுழைந்தவுடன் இடப்புறமாக ஆயிரக்கால் மண்டபத்தைக் காணலாகும். இம் மண்டபம் இன்று இடிந்த நிலையில் உள்ளே செல்லுவதற்கு அச்சப்படுமளவில் நிலைகெட்டு நிற்கின்றது. மண்டபத் தூண்களில் திருமாலின் பல தோற்றங்களைக் காட்டும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியைக் கடந்து உள்ளே செல்லுவோமானுல் நூற்றுக்கால் மண்டபத்தை அடையலாகும். இம் மண்டபத்தினை ஆனை ஒட்டிக் கால் மண்டபம் என்றும் அழைக்கின்றனர்.

இம்மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள தூண்களில் மிகச் சிறந்த சிலைகள் உயிர்ப்புடன் செதுக்கப்பட்டுள்ளன. இரதி மன்மதச் சிலைகள் தென்காசி சிற்பத்தோடு வைத்து எண்ணத்தக்கதாக அமைந்துள்ளன. சிற்பி மெல்லிய மேலாடைகள் அணிந்துள்ள பாங்கில், மகளிரின் அழகினைத் தோற்றமளிக்கச் செய்திருக்கும் சிற்பக் கலையின் நுட்பத்தினை நோக்க, தென்காசி சிற்பத்தில் இல்லாத கலை நுட்பம் இங்கு அமைந்துள்ளமையை அறியலாகும். இம் மண்டபத்தினைச் சார்ந்துள்ள துவாரபாலக வாயிலைக் கடப்போமானுல் கங்கையராயன் குறடு என்றழைக்கப்படும் பகுதியை அடையலாகும். இக் குறட்டின் மீது ஏறியவுடன் சபாமண்டபம் தோற்றமளிக்கின்றது. சபா மண்டபத்தில் மிக்க அழகோடு ஏழடி உயர அளவில் எழுந்தருளியுள்ள ஆடவல்லானின் சிலை காணத்தக்கது. அடுத்துள்ள பகுதி அர்த்த மண்டபமாகும். அர்த்த மண்டபத்தைச் சார்ந்துள்ள கருவறை பிற்காலப் பாண்டியர்களாலும், விசயநகர மன்னர்களாலும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது: இத்திரு மூலட்டானத்தில் எழுந்தருளியுள்ள இறைவனையே சிகாநாதர் என்றழைக்கப்படுகின்றது. இக் கருவறையில் பாண்டியர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கி. பி. 710—740 வரை பாண்டிய நாட்டை ஆண்ட சடையன் மாறன் என்னும் பாண்டியனுல் இக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிபந்தங்களைக் கூறும் கல்வெட்டே பழமையானது.

இவ்விறையகத்தினைச் சார்ந்து வடபுறம் தனித்துள்ள கோயிற் பகுதியே உலகுடை நாயகி என்றழைக்கப்படும் அம்மன் கோயிலாகும். இக் கோயிலின் முகமண்டபத்தினைச் சார்ந்து ஆறுகோண வடிவில் மிண்டபமொன்றுளது. இம் மண்டபத்தில் புதுக்கோட்டையை ஆண்ட பழைய மன்னர்கள் பட்டங்கட்டிக் கொண்டனர். அம்மன் கோயிலுக்கு முன்னர் எழுந்துள்ள கோபுரம் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்கோர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

இவ்வாறு அமைந்துள்ள சிகாநாதர் கோயிலைச் சூழ்ந்துள்ள மதிலின் மேற்குப் புறத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறிய வாயிலைத் தாண்டியவுடன் மலையின் கிழக்குப்புறம் தோற்றமளிக்கின்றது. இப் பகுதியிற்றான் பல்லவர்காலக் குகைக் கோயில்களுள்ளன. வரலாற்றுப் பழமைக்கோர் சின்னமாகத் திகழும் இப்பகுதியை, முன்னருள்ள சிகாநாதர் கோயிலுக்குரிய மதிற் சுவர்களுடன் அடைவாகப் பக்கங்களில் எழுப்பப்பட்டு மலைச் சரிவில் இணைக்கப்பட்டுள்ள பெருஞ் சுவர்கள் பாதுகாக்கின்றன.

குகைக் கோயில், இறையகமும் தாழ்வாரமுமாகச் சிறிய அளவில் குடையப்பட்டுள்ளது. இறையகம் 23½ அடி உயரம் 12 அடி அகலம், 9 அடி உயரம் கொண்டது. கருவறைத் திருவுருவமாகவுள்ள இலிங்கமும் பாறையிலேயே குடைந்தெடுக்கப்பட்டுள்ளது. இக் குகைக்கோயிலை ஒட்டிப் பிற்காலத்தில் கட்டப்பட்ட இரண்டு மண்டபங்கள் இருக்கின்றன. இவற்றுள் சிறியதாயுள்ள உள் மண்டபம் குலோத்துங்கனால் கி.பி. 1106.ல கட்டப்பட்டது. முகமண்டபம் ரகுநாதராயத் தொண்டைமானால் கட்டப்பட்டது. குகைக் கோயிலில் குடையப்பட்டுள்ள தாழ்வாரத்தின் இரு புறங்களிலும் சுவரிலேயே ஏழடி உயரமுள்ள துவார பாலகர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலச் சிற்பக் கலைக்கோரிலக்காக இச் சிலைகள் தோற்றமளிக்கின்றன. குகைக் கோயிலுக்குத் தெற்கே ஐந்தடி உயரமுள்ள வலம்புரி விநாயகர் சிலை பாறையிலேயே வெட்டப்பட்டுள்ளது. இக் குடைவரைக் கோயிலை மேலைக் கோயில் என்றும் திருமேற்றளி என்றும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இங்குள்ள சிவபெருமான் திருமேற்றளி மகாதேவர் என்றழைக்கப்படுகிறார். குகைக் கோயிலைச் சார்ந்து உமாதேவியின் திருக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக் கோயில் பாண்டியர் கால சிற்பச் சுவடுகளுடன் விளங்குகிறது. அம்மையின் பெயர் அழகிய நாயகி என்பதாகும்.

குகைக் கோயிலுக்கும் பாறையில் செதுக்கப்பட்டுள்ள வலம்புரி விநாயகருக்கும் இடையில் பலகை போன்று எழுந்துள்ள இயற்கையான பாறையில் இசைக் கலையைப் பற்றிய கல்வெட்டொன்று பெரிய அளவிலுளது. இக் கல்வெட்டு, கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டில் வெட்டப்பட்டதென்பர். “சித்தம் நமசிவாய” என்று தொடங்கி முப்பத்தெட்டு வரிகளாகிய பின், இறுதியில் “எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய” என்ற இசைக் கலையின் பாகுபாட்டை உணர்த்தும் கருத்துடன் இக் கல்வெட்டு விளங்குகின்றது. அத்துடன் கல்வெட்டின் முடிபாக “ஸ்ரீருத்திராசாரியனுடைய மாணவனான பரம மகேச்சுவரன் வெட்டுவித்தது” என்று சொல்லி இருக்கின்றது. இவர்கள் யாவரென்பது ஆராய்தற்குரியது.

குகைக்கோயில், இசைக் கல்வெட்டு, வலம்புரிவிநாயகர் ஆகிய பல்லவர் கால இலச்சினைகட்கு மேல் நூற்றைம்பதடி உயரத்தில் மலை நடுவே திறந்த வாய்போன்றொரு இயற்கைக் குகை அமைந்

துளது. இக்குகையை அறுபத்து மூவர் குகையென்பர். இக் குகையின் மேல் விளிம்பில் இடபவாகனத்தில் உமையுடன் காட்சி தரும் இறைவனுடன் அறுபத்து மூன்று சிவனடியார்களின் படிமங் களும் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக் குகைக்குச் செல்லும் வழி நேரியதன்று. இவ் வழியினை ஆட்டுக்கால் வழி என்றழைப்பர். பாறை முகடுகளிலும் செங்குத்தான சரிவுகளிலும் ஆடுகள் இலகுவில் செல்லும் திறமை உடையன. அத்தகையதாக அமைந்து, மக்கள் ஏறிச் செல்லுவதற்கு அருமையுடையதான சிறிய படிவழிகள் மலை விளிம்பில் வெட்டப்பட்டுள்ளன. உளத் திட்பமுடையாரன்றி மற்றவர் செல்லுதற்கியலாத வகையில் அமைந் துள்ள இக் குகையினையும், சிற்பங்களையும் மலையின் அடிவாரத்தி லிருந்தே நெடிய தோற்றத்தில் காணலாகும்.

மலையின் மேற்றளத்தில் பல பழைய கட்டிடங்கள் இருந்து அழிந்ததற்குரிய சுவடுகள் காணப்படினும், எஞ்சியதாக முருகன் கோயிலொன்று இன்றுமுள்ளது. இக் கோயிலிலுள்ள "ஸ்வஸ்தி ஸ்ரீ எம்மண்டலமும் கொண்டருளிய பெருமாள் ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு கூ-ஆவது" என்று தொடங்கும் கல்வெட்டின் செய்தியினைக்கொண்டு இக் கோயில் 13-ஆம் நூற்றுண்டில் ஏற் பட்டதென்று தெரிகின்றது. திருநலக்குன்றமான இக் குடுமி யான் மலை மீது ஏறி வலம் வருவதே கோயிலை வலம் வருவதன் சிறப்பென்று கொண்டுள்ளனர். அதற்கேற்ப மலையின் இருபுற மும் சரிவாக அமைந்துளது. மலையின் வடகோடிச் சரிவில் அண் ணன் கிணறு, தம்பிக் கிணறு என்ற இரண்டு கிணறுகள் இருக் கின்றன. ஊரவருக்குரிய குடிநீரை இக் கிணறுகள் அளிக்கின்றன. பிற்காலச் சோழராட்சியில் அரசியலதிகாரிகளாக இப் பகுதியி லிருந்த உடன் பிறந்தாரிருவர், மக்களின் நன்மையைக் கருதிச் செய்த அறமாக இக் கிணறுகள் ஏற்பட்டமையாலேயே இவைகள் அண்ணன் கிணறு, தம்பிக் கிணறு என்று பெயர் பெற்றன. இவ் வுண்மையை, "பாண்டிய குலாசனி வளநாட்டு இடையாற்றூர் நாட்டு திருத்தவத்துறை காவலுடைய அரைசு வீற்றிருந்தாந் இளை யரையநாந இடையாற்றூர் நாடாழ்வாந் மகன் திரு அரைசுடையா நாந இறங்கலமிட்ட தாழையூர் நாடாழ்வாந் தம்பி சேமந் நிகாவி சோழநாடாழ். வாநாந பதினெண்பூ . மகிடத்தியாகிப் பிள்ளை யார் தமையநார் இறங்கலமிட்ட தாழையூர் நாடாழ்வாந் திருநலக் குன்றத்தில் வடபாறையில் செய்வித்த ஊறல் இவர் தந்மம்" என் னும் செய்தியைத் தரும் இங்குள்ள கல்வெட்டு உணர்த்துகின்றது.

குடுமியான் மலையில், நூற்று இருபது கல்வெட்டுக்கள் இருக் கின்றன. அவை முறையே, இருக்குவேளிர், பல்லவர், பாண்டி யர், சோழர், நாயக்கர், தொண்டைமானர், ஆகிய அரசர்களால் ஏற்படுத்தப்பட்டவைகளாகும். கல்வெட்டுச் செய்திகளால் இப் பகுதியின் வரலாற்றை நன்கு தெரிந்துகொள்ள இயலுகின்றது.

(தொடரும்)

# ஒன்பது

புலவர் எஸ். நடராசன்,
(தலைமைத் தமிழாசிரியர், டி. இ. எல். சி. உ. பள்ளி, புதுக்கோட்டை.)

இம்மொழிபற்றி அறிஞர்பலர் பல ஆய்வுரைகளை நூல்வாயிலாகவும், கட்டுரைகளாகவும் தந்துள்ளனர். ஆயினும் என் அறிவிற்கும் சில கருத்துகள் தோன்றின. அவைகளை அடியில் வருமாறு தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஒன்பது என்னும் எண்ணைக் குறிக்கும் 'தொண்டு' என்ற சொல், 'தொண்டு படுதிவவின்' (மலைபடுகடாம் — வரி 21) என்றும், 'ஆறென, ஏழென, எட்டென, தொண்டென' (பரிபாடல் 3 வரி 79) என்றும், 'தொண்டு தலையிட்ட' (தொல் — பொருள் — சூ. 413) என்றும் சங்க இலக்கியங்களிலும், தொல்காப்பியத்திலும் வந்துளது. மேலேகூறப்பட்ட இடங்களையன்றி வேறு இலக்கியங்களில் இச்சொல் யாண்டும் எடுத்தாளப்படவில்லை என்பதை அறிய வேண்டுகின்றேன். ஆயினும் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்ருன ஏலாதி — 72ஆம் பாடலில் 'உணராத தொண்டிருந் துன்பம் தொடரும் பிறப்பிதென் என வந்துளது. இவ்விடம் தொண்டு ஒன்பதைக் குறிப்பாகக்கொண்டு ஏதேதோ பொருள் உரைப்பர் இதன் உரையாசிரியர் ஈங்கு முன்வினை எனும் பொருள்தரும் 'பழவினை'யைக் குறிக்க எழுந்தவிடத்து பழமை, முன் எனும் பொருளில் 'தொண்டு' எனக் குறித்துள்ளமை வெள்ளிடைமலையாக விளங்குவதை அறிக. இந்நூல் 8ஆம் நூற்ருண்டைச் சேர்ந்ததாக அறிஞர்கள் கருதுவர். ஆதலின் இச்சொல் அதில் ஒன்பதை வழங்க ஏதுவும் இல்லைஎன மறுக்க.

'தொண்டு' எனும் இச்சொல் தொல்காப்பியர் காலத்திற்குப் பல நூற்ருண்டுகளுக்குமுன்பே வழக்கற்றுப் போய்விட்டதென்பதும், திரிசொல்போலஎடுத்தாண்டனர் தொல்காப்பியர் எனவும்தெரிகிறது அதனுல் அச்சொல்லை நினைவுபடுத்துவான்போல் ஓரிடத்துமட்டும் எடுத்துக்காட்டிச் சென்றமை அறியத்தக்கது. ஆனுல் பரிபாடலும், மலைபடுகடாமும் கூறியிருப்பதை நோக்கின் 'தொண்டு' வழக்கத்தில் இருந்ததை வெளிப்படுத்துகின்றன. இதனுல் அந்நூல்கள் இரண்டும் தொல்காப்பியத்திற்கு முந்தியன எனக்கொள்வதற்கும் வழிதந்துள்ளமை அறிந்து இன்புறத்தக்கது.

ஒரு சொல்லின் அருகிய வழக்கைவிடப் பெருகிய வழக்கிற்கே இலக்கணம் இடந்தருவதைத் தொல்காப்பியத்தை நன்கு அறிந்தோர் அறிவர்; ஆதலின் அவர்காலத்தில் யாவராலும் வழங்கப்பட்ட 'ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்' முதலிய எண்களைக் கூறுவதோடு, அவை பிறவற்ருேடு புணரும் புணர்ச்சி விதிகளையும் கூறியுள்ளார். இதுவே இலக்கண நெறியாகும் என்பதை யாவரும் அறிவர்

தொல்காப்பியர் சொல் ஆராய்ச்சியில் முற்படாமல், வழக்கிற்கு இலக்கணம் அமைப்பதை மேற்கொண்டார் என்பதை, 'ஒன்பது + பத்து, ஒன்பது + நூறு' எனக்கொண்டு அவை 'தொண்ணூறு, தொள்ளாயிரம்' ஆகத் திரிந்ததாகக் கூறியுள்ளதால் அறிக. இதுவே நெறியென நன்னூலாரும் பின்னூலாரும் கொண்டு ஒழுகினர். ஏன்! நாமும் ஒழுகிவருகிறோம்; வருவோம். ஆனால், தொண்ணூறு, தொள்ளாயிரம் முதலியன தொல்காப்பியப் புணர்ச்சி விதிப்படி வரவில்லை அவருக்கும் முன்னோர் நல்லதொரு ஒழுங்கு முறையிலேயே இவ்வெண்களை அமைத்துள்ளனர் என்பதைச் சிறிது ஆராய்வோம்.

தொண்டு — தொள் + து; ஒட்டு — ஒள்(தொள்) + து எனப் பிரித்து முறையே தொள்—தொளை எனப் பொருள்கொண்டு, ஒன்பது என்பதை ஒன்றில்லாப்பத்து எனவும், தொள்ளை நூறு தொள்ளாயிரம், மரூஉ ஆக வந்ததெனவும்; ஒட்டு — தொடட்டு — தொடர் எனக்கொண்டு எட்டையும் பத்தையும் தொடர்படுத்துவது, எண்பதையும் நூறையும் தொடர்படுத்துவது, எண்ணூறையும் ஆயிரத்தையும் தொடர்படுத்துவது என்பர். இம்முறை ஆராய்ச்சிக்கு உட்பட்டதென்றாலும பொருணோக்கம் ஒட்டியதாக அறிய முடியவில்லை. எந்தச்சொல்லும் எடைபோட்டதுபோல் நம் முன்னோர் அமைத்திருக்க இதனில் இவ்விதம் ஒட்டுப்பிழைப்பா செய்திருப்பர்? ஆதலின் இச்சொல்லிற்கு வேறுபொருள் அமைந்திருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அதன்படி இச்சொல்லைச் சிறிது ஆய்தல் உற்றேன். இதுவே முடிவெனக் கூறவில்லை. ஆய்வு வளர்ச்சியுடையது. ஆதலின் இன்னும் நல்ல ஆய்வுகாண இது ஒரு படியாம் எனக்கொள்க.

'தொண்டு, என்பது 'தொள்' எனும் பகுதியைப் பெறுவதற்குச் சற்று முன்னே சென்றால் 'தொல்' என்பதும் அதற்கும் முன்னே சென்றால் 'ஒல்' எனும் சொல்லும் கிடைக்கின்றது. இதனை ஒழுங்கு செய்தோமானால் முறையே ஒல் — தொல் — தொள் என்பது தோன்றும். தொல் என்பதில் உள்ள 'ல்' 'ள்' ஆகத்திரிதல் ஒலியியல்பு இவ்வொலிமாறுபாடு எல்லாமொழிக்கும் இயல்பு என்பதை மொழி ஆராய்ச்சியாளர் கண்டமுடிவாம்.

தொல்லேதொள் ஆகி, பின் 'து' என்ற சொல்லாக்கச் சொல் புணர, 'தொண்டு' என்றாயது. (கொள் + து—கொண்டு, கள் + து— கண்டு, உள் + து—உண்டு) இனி தொல், தொலை என்பன முறையே பழமை, முன் உள்ளது என்னும் பொருளைத் தருவதாகும். இப்பொருளையே தொண்டு என்பதற்கும் அளித்துள்ளதாகும். இதனால் இச்சொல் பத்துக்கு முன் உள்ள எண் என்பதை உணர்த்த எழுந்தது எனலாம். இன்னும் ஒன்றுமுதல் தொடர்ந்து எண்களின் இறுதியில் உள்ளது எட்டுஆகும். அதன்பின் பத்து ஒன்றே

ஒரு சொல்லில் உள்ளது. ஆதலின் பத்துக்கு முன்எனில் எட்டுக்கு அடுத்தது என்பது இயல்பாகவே தோன்றும். இக்கருத்தை, பத்துக்கு முன் உள்ளதை நம்முன்னோர் 'தொண்டு' என்று குறித்தமை சாலவும் பொருந்தும் எனத் தோன்றுகிறது.

இம்முறையில் தொண்ணூறு என்பது பத்தின்தொடரில் உள்ள ஒருபத்து. இதை தொள் + நூறு எனக்கொண்டு நூறுக்கு முன்னுள்ள ஒருபத்து எனும்பொருளையும், எண்பதுக்கும் நூறுக்கும் இடையில் உள்ளது என்பதையும் புலப்படுத்தி நிற்பதை அறியவும். இதேபோல் தொள்ளாயிரம் — தொள் + ஆயிரம் எனவுற்று நூறு வரிசையில் உள்ள ஓர் எண் என்பதையும், ஆயிரத்திற்கு முன் உள்ளது. எண்ணூறுக்கும் ஆயிரத்துக்கும் இடையில் உள்ள ஒரு நூறு—எனும் கருத்தினையும் கொடுத்துள்ளதை நோக்குக. அதனல் இச்சொல் ஒன்ருக எண்ணும்போது ஓர் ஒன்ருகவும், பத்தாக எண்ணும்போது ஓர் பத்தாகவும், நூருக எண்ணும்போது ஓர் நூருகவும் முன் நின்று பொருள்தரும். ஆழ்ந்த கருத்தமைந்த 'தொண்டு' என்பதின் திரிந்த 'ஒல் — தொல் — தொள்' என்பதை அறியும் போது நம்முன்னோர் வழங்கிய அழியாத, ஆணித்தரமான வேர்ச் சொல்லை என்னென்போம்.

ஒன்பது தனது முன்னைய வடிவமான 'ஒல்' (ஒல் — தொல் — தொள்) என்பதிலிருந்து இயல்பாகத் தோன்றி, ஒல் — ஒல்லை முதலிய சொற்களாக நின்று, தனது முன்னைய பொருளாகிய 'பழமை' முன்உள்ளது என்பதைப்பெற்று நிற்பதை அறியவும். ஒல் என்பதன் லகரம் ஒலி நயம்பெற 'ன' கரமாகத்திரிந்து (நல் + பால் — நன்பால் என்பதுபோல்) 'ஒன்' என்ருகி, அதனுடன் பத்து என்பது, தன் இயல்பான இடைகெடல், முதல்நீளல் எனும் முறைப்படி 'பது, பான்' என்ருகிப் புணர, முறையே, 'ஒன்பது, ஒன்பான்' என வழங்கலாயிற்று. இதனில் ஒன்பது பத்துக்கு முன் உள்ளது எனும் பொருளைப்பெற்று விளங்குவதை அறியவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பழைய வடிவம் | — | ஒல் | — | தொல். |
| திருந்திய வடிவம் | — | தொல் | — | தொள். |
| | | தொள் + து | — | தொண்டு. |
| | | தொள் + நூறு | — | தொண்ணூறு. |
| | | தொள் + ஆயிரம் | — | தொள்ளாயிரம். |
| திருந்தா வடிவம் | — | ஒல் + பது | — | ஒன்பது. |
| | | ஒல் + பான் | — | ஒன்பான். |

இவ்விருவடிவங்களும் பழைய பொருளை இழந்துவிடாமல், 'தொல் — தொள்' திருந்தியவடிவில் தொண்ணூறு, தொள்ளாயிரமாகவும், திருந்தாவடிவமான 'ஒல்', ஒன்பது, ஒன்பான் என நின்றும், வழக்கிலும் செய்யுளிலும் வழங்கி வருகின்றன.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# தமிழில் பாயிரம்


## வித்துவான் சொ. சிங்காரவேலன் எம். ஏ.,

[முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.]


**உரைப்பாயிரம் :**

உரை நூல்களுக்குப் பாயிரம் எழுதும் வழக்கமும் தமிழில் உரையாசிரியர் காலந்தொட்டு எழுந்து வளரலாயிற்று. உரையாசிரியர் பாயிரம் பெரும்பாலும் உரை நடைவகையிலும், சிறுபான்மை செய்யுள் வடிவிலும் அமையலாயிற்று. தமிழில் உரைகளைக்குறித்து ஆராயு முன்பு, உரை நடை என்பதன் தோற்றத்தையும் சிறிது சிந்தித்தல் வேண்டும்.

**உரைநடை வகை நான்கு :**

தொல்காப்பியனுர் காலத்தும் உரை நடை இருந்தது. அதனை அத்தொல்லாசிரியர் நான்கு வகையாக்கிக் காட்டுகின்ருர் ;

"பாட்டிடை வைத்த குறிப்பினுனும்
பாவின் றெழுந்த கிளவியானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்
உரைவகை நடையே நான்கெனமொழிப"

என்பது அப்பெருமானுர் திருவாக்கு * இடையிடையே பாட்டு விரவி வரும் உரைநடைக்குத் தகடூர்யாத்திரை என்ற நூலை மட்டும் பேராசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். சிலப்பதிகாரத்தையும் எடுத்துக் காட்டினர் இளம்பூரணரும் நச்சினுர்க்கினியரும், 'பிறபாடையும் விரவி வருவனவும் இதனுள் அடங்குமோ' என்று எடுத்துக்கொண்ட பேராசிரியர், தமிழ் உரையாயினதவிரப் பிறவற்றைப்பற்றிய

* தொல்காப்பியம் — செய்யுளியல் — 173 நூற்பா.

---

ஆகவே, தொண்டு ஒன்பதைக்குறிக்க மறைந்துவிட்டாலும் அதன் வேர்ச்சொல்லை ஏற்று, பொருள்மாருமல் இன்றும் என்றும் நிலவுமாறு நமது முன்ஞேர்கள் கூறியுள்ளனர். அவர்கள் சொல்லாராய்ச்சி செய்யவில்லை எனினும் சொல்லின் பொருள் நுட்பம் அறிந்தே சொற்களை உண்டாக்கியுள்ளனர் என்பதைத் தள்ளிவிட முடியாது. தொண்டு இன்று ஒன்பதாகாவிட்டாலும் அதன் பழைய பொருளாகிய 'பழமை, முன் உள்ளது' என்பதை இழந்துவிடவில்லை என்பதை அறியவும். ஆதலின் ஒல் என்ற முதல் வேர்ச்சொல்லில் இருந்தே ஒன்பது, தொண்டு, தொண்ணூறு, தொள்ளாயிரம் தோன்றின என்பதைக் கூறியுள்ளேன். இன்னும் பல கருத்துகள் அறிஞர்பால் தோன்றும். அவைகளையும் ஆய்வாளர்கள் வெளியிடின், தமிழின் பழமைக்கு ஒரு புதுமெருகு கொடுத்துப் போற்றி, வரவேற்போமாக.

*'ஆய்வு வளரட்டும், தாய்மொழி தழைக்கட்டும்'*

ஆராய்ச்சி ஈண்டில்லையென்று முடிவு போக்கியுள்ளார். பொருளொடு புணராப் பொய்ம்மொழி என்பது தற்காலத்துப் புதின (Novel) வகை போல்வனவற்றைக் குறிப்பதாகலாம். பேராசிரியரோ, "ஓர்யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக் கியையாப் பொருள்படத் தொடர்நிலையான் ஒருவனுழை ஒருவன் கற்று வரலாற்று முறையான் வருகின்றன" என்றார். சிறுகுரீஇயுரை, தந்திரவாக்கியம் என்பனவற்றைப் பேராசிரியர் 'பொருளொடு புணர்ந்த நகைமொழி'க்குக் காட்டியுள்ளார். 1.

இவ்வுரை நடை மகளிர்க்கு உரைக்கும் உரை நடை, மைந்தர்க்கு உரைக்கும் உரை நடைஎன இரண்டாக்கப்படும் என்பர் இளம்பூரணர், இவ்வரையறை அக்காலத்து மக்கள் மன நிலையையோ, அன்றி இளம்பூரணரது மனநிலையையோ விளக்குவது என்று கொள்ளலாம். பாட்டுக்கு உரையெழுதுவதும் ஒருவகை உரை நடையே என்பதனைப் "பாவின்றெழுந்த கிளவியானும்" என்ற திருவாக்கான் உணரலாம். 2. இவ்வாறெழுந்த உரைகளுக்குப் பாயிரம் எழுதுவது என்ற வழக்கை உரையாசிரியர்கள் மேற்கொள்ளலாயினர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார்போன்ற பழைய நல்லாசிரியர் உரைப்பாயிரம் தீட்டியுள்ளனர். இதனைப் பின்பற்றித் தற்காலத்தே நூல்களுக்கு உரையெழுதுவோரும் உரைப்பாயிரம் உரைத்து, நூற்பொருளைப் பின்னரே நன்கு விளக்கப் புகுவாராயினர். எடுத்துக்காட்டாகத் திருக்குறட் பாயிரவியலுக்கு {கடவுள் வாழ்த்துமுதலிய நான்கு அதிகாரங்களைப் பாயிரவியல்எனக்கூறுவது வழக்காக உள்ளது. திருவள்ளுவமாலையிலும் இதற்குச் சான்றுகள் உள்ளன.) அமைந்த தமிழ்ப் பெருந்தகை திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் எழுதியுள்ள பாயிரத்தைக் கூறலாம். இங்குச் சில உரைப்பாயிரங்களைமட்டும் சிந்தித்துச் சில குறிப்புகளைக் காட்டுவாம்:

### அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம்:

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு ஓர் அரிய உரைப்பாயிரம் வரைந்துள்ளார். சிலப்பதிகாரத்திற்கு இலக்கண அமைப்புத் தொல்காப்பியத்தினின்றே அறிதல் வேண்டும்என்றுகூறித் தொடங்குகின்றார். சிலப்பதிகாரத்தை "இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள்" என்று குறிக்கின்றார். அன்றியும்

"எழுத்தின் திறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தம் தனிலொன் றறிந்தோ — முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற்குரை யின்று
எழுதத் துணிவதே யாண்" —என்ற வெண்பா

விலும், "பழுதற்ற முத்தமிழின் பாடல்" என்று சிலப்பதிகாரத்தைக் குறித்தல் அறியலாம்.

---

1. தொல்காப்பியம் — செய்யுளியல் — 172 நூற்பா உரை.
2. ,, ,, — 172 நூற்பா.

காப்பியம் என்பது வடமொழிப்பெயர் என்பதும் இவர்கொள்கை யாகும். உதயணன் கதைகூறும் பெருங்கதையின்மேல் இவர் வைத்துள்ள பற்று மிக உறுதியானதாக உள்ளது. பொருளொடு புணராப் பொய்ம்மொழியாகிய கதையை இது கொண்டதன்று என் றும், பட்டாங்கு கிளந்து பலவினப்பாட்டான் இயங்குவது சிலப்பதி காரம் என்றும் கூறும் இவர்தம் கருத்து அறிந்தின்புறத்தக்கதாகும். இவ்வுரைப்பாயிரத் தானறியப்படும் இசைத்தமிழ் நூல்கள் ஆவன :- பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்சமரபு, பரதசேனபதியம் என்பன, நாடகத்தமிழ் நூல் களாக, பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற் றியம், மதிவாணர்நாடகத் தமிழ்நூல் என்பன இவராற் குறிக்கப் பெற்றுள்ளன. இந்நாடகத்தில் 'வீடு' கூறிற்றிலர் என்பதும், சிலப் பதிகாரமும் மணிமேகலையும் ஒன்றோடொன்று தழுவி இயங்குவன என்பதும் இவர் தம் பாயிரத்திற் கூறிமுடிக்கின்ற செய்திகளாகும்.

பரிமேலழகர் உரைப்பாயிரம் :

திருக்குறளுக்குச் சிறந்த உரை தந்தருளிய பரிமேலழகர், தம் உரைப்பாயிரத்தில் மாந்தர்க்கு உறுதிப்பொருள் நான்கென எடுத்துக் கொண்டு, அவை அறம் பொருள் இன்பம் வீடு என்றார். வீடு—துற வறமாகிய காரணவகையாலேயே கூறப்படும்; இலக்கண வகையாற் கூறப்படும் நிலைமை உடைத்தன்று என்று விளக்கியுள்ளார். அறம் என்பதற்கு மனுமுதலிய நூல்களுள்விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் ஆம்எனப் பொருள்கூறி விளக்கப்புகுகின்றார். பொது மறையாகிய குறள் நூலுக்கு இவ்வாறு இவர் குறுகிய வரையறை காட்டுவது பொருந்தாத ஒன்றாகும் என்று விளக்கவேண்டிய அவசி யமே இல்லையல்லவா? ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்ற வகை களும் அவற்றின் விளக்கமும் சற்றும் குறள்நெறிக்கு ஒவ்வாதனவே யாம். ஆயினும் 'ஒழுக்கமே அறம் எனத் திருவள்ளுவர் கொண் டுள்ளார்' என்ற பகுதிமட்டுமே குறள்நெறிக்கு ஒத்துவரும் நிலையில் உள்ளது.

இனி ஒழுக்கத்துக்கு வருண, ஆசிரம நிலையினின்று ஒழுகுதலே என்று பொருள்கொள்ளும் பகுதியும் முற்கூறியதைப்போல் மாறு படக் கூறலாகும். 'எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்குக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார் திருவள்ளுவர்' என்றலும் பொருந் தாக்கூற்றாகவே உள்ளது. 'உலகம் கடவுளை வாழ்த்தி உய்க' என்பதே திருவள்ளுவர் கருத்தாதலேயன்றித் தம் நூல் முற்றுப் பெறும் பொருட்டு வாழ்த்தினாரென்பதற்குச் சிறிதும் சான்றில்லை யென்பதை அவ்வதிகாரத்துப் பத்துக் குறட்பாக்களே சான்றாய் நின்று விளக்கும்.

காமத்துப்பாலின் தொடக்கவுரையினும் பரிமேலழகர், வள்ளு வனார் களவு, கற்புஎனப் பிரித்துத் தமிழ்நெறிப்படி யோதுவதனை மறந்து எழுதுகின்றார். 'இவர்பொருட் பாகுபாட்டினை வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான்' என்றெழுதும் பகுதி, திருவள்ளுவனார்க்கு

நெறிகாட்டும் குறிப்பு வடநூலிலிருந்தே வந்தது எனப் பிழைப்படக் கூறுதலான் பொருந்தாததாயிற்று. காமத்துப்பாலின் உரைப் பகுதி யுள்ளும் பரிமேலழகர் பலவிடங்களில் ஆசிரியர் கருத்திற்கு அப்பாற் பட்டு நின்றே பொருள் எழுதியுள்ளார். தமிழ்நெறிப்படிக் களவு, கற்பென வழங்கும் இருகைகோள் அமைத்துத் திருவள்ளுவனர் காமத்துப்பால் முற்றும் அமைத்துள்ளார் என்பது இங்கு அறியத் தக்கதாகும்.

இவ்வாறே நச்சினர்க்கினியர் பொருளதிகாரத் தொடக்கத் தின்கண் எழுதியுள்ள உரைப்பகுதி போல்வன உரைப்பாயிரமாய் நின்று புதியமரபினை விளக்கிநிற்றல் காணலாம்.

திரு. வி. க உரைப்பாயிரம்:

திருக்குறளுக்கு உரையெழுதப்போந்த திரு. வி. க. அவர்கள் திருவள்ளுவர் உலகிற்காகத் தோன்றியவர் என்பதை விளக்கு கின்ருர்கள். 'திருவள்ளுவர் நினைவு தோன்றும்போது உலக நினைவும் தோன்றுதல் இயல்பே' என்கின்ருர்கள். திருவள்ளுவர் வரலாருக இப்போது வழங்குவதன் நிலைகுறித்து இரங்கியுரைக் கின்ருர்கள். தாம் உரையெழுதப் போந்தது குறித்துச் சொல்லுங் கால், 'யான் இப்பொழுது ஏட்டுக்கும் இறைக்கும் இடையில் நிற்கின்றேன்; இறையருள் கூடின் திருவள்ளுவரை நேரேகாணும் பேறு பெறுவேன்; மற்றவர்க்கும் அவரைக் காட்டுவேன்' என்று கூறிப்புகுவது மெய்ம்மொழியாய் நின்று உள்ளத்தை உருக்குவ தாகும். 'திருவள்ளுவரைக்காண ஒல்லும்வகை முயல்வேன்; வழுக் கியும் வீழ்வேன், யான் மனிதன்; குறையுடையேன்; சிறுமை யுடையேன்; அறியாமையுடையேன்' என்றெழுதித் தம் உரைப் பாயிரத்தை முற்றுவிக்கின்ருர்கள். தாம் உரைத்ததே உரையென்று சாதிக்கும் தன்முனைப்பு — தருக்கு — இங்கே இல்லை. தூய உள்ளம் பேசுகிறது; உரைகாணப் புகுகின்றது என்ற நல்லெண் ணம் உரையைப் பயிலுமுன்பு அனைவர் உள்ளங்களிலும் படிகின்றது. இவ்வுரைப்பாயிரம் காலப்போக்கில் விளைந்த புதுமை நடையும் நலமும் கெழுமி நிற்றல் கூர்ந்துநோக்கி உணரலாம்.

கால்டுவெல் — பாயிரப்பனுவல்:

இங்குச் சிந்தித்தவாற்ருல், பாயிரங்கள் நம் நாட்டு இலக்கிய உலகிடையே தோன்றிநின்று வளர்ந்துவரும் இயல்பு நன்கு அறியப் படும். உரைப்பாயிரங்கள் அவ்வவ் வுரையாசிரியரின் நெஞ்சின் நிழலை நேரிதிற்காட்டும் கண்ணுடியாக உள்ளன என்பதும் அறிய லாம். பாயிரத்தைப் படித்துத்தான் நூலைக் காணவேண்டும் என்ற மரபு முற்றும் மாறிவிடவில்லை என்பதும் தெளிவு. கால்டுவெல் தம் ஒப்பிலக்கணத்துக்கு எழுதிய 'பாயிரமே' (Introduction) இன்று ஒரு நூலாய் நின்று நிலவி இன்பம் அளிக்கிறது என்பதும் அனைவரும் அறிந்ததே.

(தொடரும்)

# காந்தியடிகள் கருத்து?

(அ. இராமமூர்த்தி M. A., B. T.)

The foreign medium has prevented the growth of our vernaculars. If I had the powers of a despot I would to-day stop the tuition of our boys and girls through a foreign medium and require all teachers and professors on pain of dismissal to introduce the change forthwith. I would not wait for the preparation of text-books. They will follow the change. It is an evil that needs a summary remedy.

(Young India 1. 9. 21.)

பிறமொழிக் கல்வி தாய்மொழி வளர்ச்சியைத் தடைப்படுத்தி விடுகிறது.

நான்மட்டும் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் இன்றே அக் கொடுமையை நிறுத்திவிடுவேன். அந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முன்வராத ஆசிரியர்களேயும், பேராசிரியர்களேயும் உடனடியாக வேலையைவிட்டு விலகச்சொல்லவும் தயங்கமாட்டேன்.

பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்படுகிறவரை பொறுத்திருக்க மாட்டேன்; அவை தாமாகவே வந்துவிடும்.

உடனடியாக நீக்கப்படவேண்டிய கொடுமை இது (பிறமொழிக் கல்வி)தான் — யங் இந்தியா 1—9—21.

"கல்லூரிகளில் தமிழைப் புகுத்துவது வீண்செலவே அந்த முயற்சி தோல்வியே"

நடைபெற்று முடிந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஜூலை 8-ஆம் நாளன்று கேள்வி நேரத்தின்போது, நமது மாநிலக் கல்வியமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் மேற்கண்டவாறு அறிவித்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. சரியான மனப்பான்மை என்று தலைப்பிட்டு தேசீய ஏடுகளில்கூட சில அதைப் பாராட்டியும் எழுதியுள்ளன.

அமைச்சர் அவர்களது கூற்று உண்மையிலேயே உண்மை என்று கொண்டாலும் அதைக் கூறிய மனப்பான்மை சரியா என்பது

பற்றி, தேசீய உள்ளத்தோடுகூட காந்தீய உள்ளமும் கொண்டவர்களிடையே முரண்பட்ட அபிப்பிராயங்கள் எழுவது தவிர்க்க முடியாததாகும்.

கல்வியைப் பொறுத்தவரையிலும் காந்தீய உள்ளம் எது என்பதை எடுத்துக்காட்டத்தான் அண்ணல் காந்தியடிகள் தனது யங் இந்தியா இதழில் 1—9—21 அன்று வெளியிட்ட கருத்தினை மேலே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறோம்.

பலநூறு ஆண்டுகளாக வாழ்வுபெற்று வந்துள்ள ஒரு முறையை ஓரிரு ஆண்டுகளில் வெற்றிகரமாக மாற்றியமைத்துவிட முடியும் என்று யாரும் கருதியிருப்பார்களேயானால் அது அவர்களது தவறாகத்தான் இருக்கவேண்டுமே தவிர அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் தவறாகமுடியாது. அதுபோலத்தான் பெண்டிக் காலத்திலிருந்து பெருவாழ்வு பெற்றுவிட்ட ஆங்கிலத்தை அண்மையில் அமைச்சர் சுப்பிரமணியம் காலத்தில் இடம்பெறத் தொடங்கிய தமிழ் அவ்வளவு விரைவில் வெற்றிகாண முடியும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அதுவும் அதை வெற்றிபெறச் செய்யவேண்டியவர்களே மாற்றாந்தாய் மனப்பான்மையோடு செயலாற்றுகிற சூழ்நிலையில்.

தாய்மொழி மூலம் — தமிழ்மொழி மூலம் — கல்விபெற மாணவர்கள் முன்வரவில்லை என்பதே அம்முறையின் தோல்விக்கு எடுத்துக்காட்டு என்பதை நம்மால் ஒத்துக்கொள்ள முடியாது.

தாய்மொழி மூலம் கல்வி பெறுபவர்களது அறிவின் தரத்தைச் சோதித்துப்பார்த்து, அவர்கள் ஆங்கிலத்தின் மூலம் கல்வி பெறுபவர்களைவிட அறிவில் குறைந்த தரத்தைத்தான் பெற்றிருக்கிறார்கள் என்று நிரூபித்துக்காட்டினால் நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியும். அப்படி அதை நிரூபித்துக் காட்டவேண்டியவர்களும், கல்வித் துறையிலும் அறிவுத்துறையிலும் அனுபவம்மிக்க கல்வி நிபுணர்களேயன்றி அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் அல்ல. அவ்வாறு நிபுணர்கள் யாரும் அந்நிய மொழியின் மூலம் கற்பதில்விட தாய்மொழி மூலம் கற்பதில் அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது — இதுவரை எந்த நிபுணரும் அப்படிச் சொன்னதில்லை—என்று நிரூபித்துக் காட்டினால் நாம் அதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை.

அப்படியும் தாய்மொழிக் கல்விபெற பலர் முன்வராமல் இல்லை. கடந்த ஆண்டுகளில் இருந்ததைவிட இந்த ஆண்டுதான் சற்று ஆர்வக்குறைவு காணப்படுகிறது. அதற்குக் காரணம் பெற்றோர்களது அச்சம்என அரசு கூறுகிறது. அரசினது கொள்கையில் காணப்படுகிற மாற்றம்தான் என்று பெற்றோர்கள் நினைப்பதாகத்

தெரியவருகிறது. அரசினது கொள்கை மாற்றத்தைவிடக் குறிப்பாகப் புதிய கல்வியமைச்சரின் போக்கில் காணப்படும் மாற்றந்தான் எனவும் கூடச் சில பெற்றோர்கள் அஞ்சுவதாக அறிகிறோம்.

இன்றையச் சூழ்நிலையில், தாய்மொழி மூலம் கல்வி பெறுவதென்பது — அதுதான் இயற்கை நியதி என்றாலும்கூட — மிகவும் துணிச்சலான ஒரு சோதனையாகவே உள்ளது. அந்த மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்படுவது இயற்கையே. துணிச்சலான இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிற அவர்களுக்கு, அவர்கள் படிக்கிறகாலங்களில் சில சலுகைகள் அளிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் பட்டம்பெற்று வெளியில்வந்த பிறகும், ஒருகால அளவு வரையில், சில சலுகைகள் அளிக்கப்பெறும் என்கிற உத்தரவாதத்தை அரசாங்கம் தர முன்வருவதில் தவறு ஏதும் இருக்க முடியாது.

சமூகத்தில் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கென சில தனிச் சலுகைகளும் உதவிகளும், அவர்கள் படிக்கிறகாலங்களில் மட்டுமின்றி, வேலை வாய்ப்புப்பெற முயற்சிக்கிற நேரத்திலும், இடம் ஒதுக்கி வைத்துத் தரப்படுவதைப் போல், மொழித் துறையில் பின்னணியில் தள்ளிவைக்கப்பட்டிருந்த தாய் மொழியில் – தமிழ் மொழியில் – கல்வி பயின்றோருக்குச் சில சிறப்பான சலுகைகள் காட்டப்படுமேயானால், அதை எதிர்ப்பவர்களுடைய தொகை அதிகமாக இருக்கமுடியாது. சமூகத்தில் முன்னணியில் நிற்கும் சில உயர்சாதிக்காரர்கள்தான் சாதிச் சலுகைகளை எதிர்த்தனர். அவர்களுடைய எண்ணிக்கையும் குறைவு; அவர்களது நோக்கமும் குறுகியது; நேர்மையற்றது. அதேபோலத்தான் மொழித் துறையில் எதிர்ப்பவர்கள் நிலையும்.

இந்தப் பயிற்று மொழிச் சிக்கல் தமிழ் நாட்டுக்குமட்டும் உரியதல்ல. இந்தியத் துணைக்கண்டத்தைச் சார்ந்துள்ள அத்தனை மாநிலங்களுக்குமே பொதுவான ஒன்றாகும். எனவே இதை அணுகுபவர்கள் மிகவும் பொறுப்புணர்ச்சியோடும் நிதானத்தோடும் அணுகவேண்டும். எந்தவிதமான அரசியல் உள் நோக்கங்களுக்கும் இதில் இடமில்லை. நேர்மையான காந்தீயக் கண்ணோட்டத்தோடு இதை அணுகினாலொழிய நாம் வெற்றிபெற முடியாது; நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முடியாது; மொழி வெறியைத் தூண்டிவிடும் தீய சக்திகளை வெற்றிகாணவும் முடியாது.

---

# தொல்காப்பியத் தமிழ் உவமை

இர. குழந்தைவேலு, பி. ஏ. (ஆனர்சு)
லால்குடி.

தமிழ்வளம் நிறைந்தது தொல்காப்பியப் பெரும்புகழ் நூல். அரும்பெறல் தமிழ்மரபுத்தாயாய் இலங்கும் இப்பெருநூல், நவில் தொறும் இலக்கண ஞாயிருகவும், இலக்கிய விளக்கமாகவும் கலந்து நின்று நம் நெஞ்சம் இனிக்க அறிவுவிருந்து வழங்கும் வாழ்க்கை நெறி நூல்ஆம். தமிழ்கூறும் நல்லுலகம் இந்நூலைப் பயில்தொறும் 'இஃது இலக்கியமும் ஆம்' எனத் தெளிய வாய்ப்பளிக்கும். இதற்கு எழுந்த உரைகள், தொல்காப்பியர் தம் நுட்ப அறிவை இசைப்பன.

நடையால் தனிப்புதுமைப் பொலிவுடைய இந்நூல் முக்கூறு பட்டது. எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களே அக்கூறுகள். இஃது இந்நிலத்தவர்க்குப் புதுச்செய்தியாய் அமைதல் பெருமையே. முதல் அதிகாரம் ஒன்பது இயல்களை உடையது. இரண்டாம் அதிகாரத்தும் ஒன்பது இயல்கள் உள. மூன்றும் அதி காரத்துள்ளும் ஒன்பது இயல்களே.

முதல் அதிகாரத்தை ஒன்பது இயல்களாக வகைப்படுத்திய தொல்காப்பியர், தம் உள்ளத்தில் பிறந்த ஓர் அழகுணர்ச்சியால், ஏனைய அதிகாரங்களையும் ஒன்பது ஒன்பது இயல்களாகக் கண்டார் எனல்தகும். இக்குறிப்பைச் சொல்லதிகாரத்துள் 'வேற்றுமை இயலை'யும், வேற்றுமை 'மயங்கியலை'யும் கொண்டு அறியலாம். வேற்றுமை இலக்கணம் ஒன்றே. எனவே, 'வேற்றுமை இயலி'ல் எழுவகை வேற்றுமைகளையும், வேற்றுமை மயக்கத்துள் இரு வகையான பொருள் மயக்கத்தினையும், உருபு மயக்கத்தினையும் விளங்க அடக்கியருளலாம். இன்னணம் நூலை வரையறுத்தலில் இழுக்கு வருதலின்று. அமைப்பின் அழகை நெஞ்சிற் குறித்துக் கொண்டு, முதல் அதிகாரத்தைப்போன்று ஒன்பது ஒன்பது இயல்களாக இரண்டாம் அதிகாரத்தினையும், மூன்றும் அதிகாரத் தினையும் யாத்தலைக் கருதியே இம்முறையினை ஆசிரியர் விரும்பி மேற்கொண்டாராதல் வேண்டும்.

அவ்விழைவின் பெருக்கால், வேற்றுமை மயக்கத்தின் வகையான பொருள் மயக்கத்தினையும், உருபு மயக்கத்தினையும் 'வேற்றுமை மயங்கியல்' என்னுந் தனி இயலில் பேசுவர் தொல்காப்பியர். இதனல்

உரையாசிரியர் தமிழுக்கு — நினைவுகூரத்தக்க விளக்கத்திற்கு — மாசு கற்பிக்கும் எண்ணம் இன்றுளன உணர்க. எனவே, ஓரியலில் இடங்கொடுக்கவியலும் இலக்கணக்கூறுகளுக்கு ஈரியல் ஆசிரியர் வகுத்தார்எனக் கூறல் ஒவ்வும். இங்கு, ஆங்கில நாடகப்பேரறிஞர் ஷேக்ஸ்பியர் என்பாரைக் கருதல்வேண்டும். அவர் யாத்த அத்துணை நாடகங்களுள்ளும் (36) ஐந்து ஐந்து களங்களே (Five Acts) என்பது அந்நாடகத்தொகையைக் (The Works of Shakespeare) காண்பாருக்குப் புலனும். இவ்வமைப்பும் அழகுணர்ச்சியின் பேரீடு பாட்டால் எழுந்ததென்பது தெளிவுறுகின்றது. எனவே, நூல் அமைப்புச் செம்மை, தொடர்ந்து கற்கும் வேட்கையைக் கற்பார் நெஞ்சில் மிகச் செய்யும் என்பது தொல்காப்பியர் எண்ணமாதல் வேண்டும் என்று கொள்ளலாம். தொல்காப்பியர் எண்ணி எண்ணி இப்புதுமையைக் கையாண்டது உன்னற்பாலது. தொல்காப்பியம் எழுந்தகாலம் முந்தியது என்பதனையும், ஷேக்ஸ்பியர் நாடகங்களின் காலம் மிக மிகப் பிந்தியது என்பதனையும் மறத்தலாகாது. காலத்தைப்பற்றிய தெளிவு, இலக்கிய — இலக்கணச் சிறப்பின் உயிர்ப்பை உணர வாய்ப்பு நல்கும்.

அழகிய அமைப்பில் வரம்பு செய்துகொண்ட தொல்காப்பியர், நூற்பொருளை நயப்படுத்தலையும் கருத்திற்கொண்டார் எனக்கூறல் பொருத்தமே.

"கோடுவாழ் குரங்கு குட்டியுங் கூறுப"

(தொல். பொருளதிகாரம்: மரபியல். 13)

இது தொல்காப்பிய நூற்பா. இவ் ஓரடி நூற்பாத் தொடரினுள், அஞ்சொல் நுண்டேர்ச்சிப் புலமைச்செல்வர் 'கோடுவாழ்' என்னுந் தொடரைப் பெய்துள்ளார். இது காட்டுவதென்ன? ஆசிரியர் தமிழ்ப்பாக்களைச் சுவைத்துத் திளைத்த திறத்தை நுவலுவது. அவ்விலக்கியத் துய்ப்பால், ஆசிரியர் உள்ளத்தில் கிளைத்த அழகிய தொடர்கள், இலக்கணம்பற்றி உரைக்கும்போது கலந்து உறவாடுகின்றன. இலக்கிய அறிவின் உழவு, இலக்கண விளைவு என்பது தமிழ்ப்பெருவழி (மரபு) கண்ட உண்மை. 'குரங்கு' என இயம்புதல் நிறைவுடையதே; பொருள் விளக்கங்கொண்டதே. ஆயினும், 'கோடுவாழ் குரங்கு' எனத், தொடரை நீளச்செய்தலால், இந் நூற்பா நெடுந்தொடர்க்குச் சுவை கூட்டுவதாயிற்று. இங்ஙனம்,

ஏற்ற சொல்லைக்கூட்டலால் விளையும் இனிமை உணர்ந்தே ஆசிரியர், நூற்பாவின் பொருளை நம் உள்ளம் எளிதாய்ப் பற்றுதற்கு அழகிய தொடர்களைத் தந்துள்ளார் போலும்.

இவ்வண்ணம் ஈர்ப்புத்திறனைத் தம் நூலுக்கு அமைத்த ஆசிரியர், உவமை, மக்களுக்கு நூற்கருத்தை எளிதில் உணர்த்தி அக்கருத்தை அவர் உள்ளத்தும் நிலைத்து வாழச்செய்வது என்ற உண்மை தெளிந்தவர். தொல்காப்பியர் நூற்பாக்களிடைப் பெய்து காட்டும் உவமைகளால், மேற்குறித்த கருத்தை உட்கொண்டு நூல் இயற்றிய குறிக்கோள் அறியப்பெறும். இதனைக் காண்போம்:

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணவிற் றென்ப"

(தொல். பொருளதிகாரம்: களவியல்: 28)

என்பது களவியல் நூற்பா. ஈண்டுக் குறிப்பிட்டது தலைவிக்கு உரியதோர் இயல்பு ஆம். மனைவிக்குக் கணவன்பால் இன்புற வேட்கை தோன்றுகின்றது. அவளிடத்து அவ்வெண்ணம் பல்குகின்றது. எனினும், அப்பெருவிருப்பத்தைக் கொழுநன் முன்பு பேசும் மனம் வளர்ந்தவள் அல்லள். அவளது உள்ளம் இடந்தருவதில்லை. அத்துணையளவிற்கு உடையா உர நெஞ்சங்கொண்டவள். அவள்பால் நிறைந்து நிற்கும் இவ்வுணர்ச்சி, அங்ஙனம் சொல்லால் தெரிவிக்காத நிலையிலும், புது மட்கலத்தில் பெய்த நீர்புறத்தே ஊறித் தோன்றல்போல வெளிப்பட்டுத் தோன்றும் என்பதாம். எனவே, கணவன் குறிப்பால் உணருந்திறத்தது என்பது கருத்து. உவமையின் பொருத்தம் தெளிவாக விளங்குகின்றது. மட்கலத்தில் நீரை நிறைத்தால், அவ்வளவைக்காட்டுவது மட்கல இயற்கை. தலைமகளின் வேட்கையைத் தலைமகன் குறிப்பில் உணருமாற்றை, இவ்வுவமையை ஆசிரியர் தம் தமிழில்—நூற்பாவில் — உயிர்நாடியாகக் கொண்டு உணர்த்துந்திறம் புகழத்தக்கது.

விண்ணில் — காற்றில் — பொறித்த எழுத்து அழியாது நிலைத்து விளங்கல் இயற்கையாகாது; மறைந்தொழியும். இக்கருத்தினைத் தொல்காப்பியர் தம் தமிழில் உவமையாக வைத்து இனிதின் உரைத்திருக்கும் நலம் ஈண்டுக் கருதற்பாற்று.

"அந்தரத் தெழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்"

(தொல். பொருளதிகாரம் : கற்பியல் : 5)

என்ற கற்பியல் நூற்பாவின் இடைப்பகுதி, தலைவன்கண் கூற்று — பேச்சு — நிகழும் இடத்தினை மொழிவது. காதலர்கள் கரந்து ஒழுகும் ஒழுக்கம் களவொழுக்கம் என்பது தமிழ் எண்ணம். களவுச் சேர்க்கையில் பேரன்பு பூண்டு இன்புற்றபோழ்து, தலைமகன் ஒழுகிய ஒழுக்கக் குறைபாட்டால் குற்றம் தோன்றலாயிற்று. இக்களவுக் காலத்து நிகழ்ந்த குற்றம், வானவெளியில் வரைந்த எழுத்து ஓடி ஓடி ஒளிந்துச் சிதைதல்போலத், தேய்ந்து நீங்கப் பழகுங் காலத்தும் தலைவன்பால் வாய்த்தொடர் பிறக்கும் என்பதாம். அவ் வெழுத்தின் மறைவில் எத்துணைக்கால விரைவு உண்டோ, அத்துணைக்காலச் சுருக்கம் குற்ற ஒழிவிலும்உண்டு என்பதனைக் கருத்தை ஒற்றி ஒற்றி நினைவுகூரல் வேண்டும். எழுத்தின் விரைந்த மறைவை இங்கு உவமையாகப் பொருத்திக்காட்டிய புலமை நாம் ஊன்றி உணரத்தக்கது.

"தந்தையர் ஒப்பர் மக்களென் பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும்"

(தொல். பொருளதிகாரம்: கற்பியல் : 6)

எனத் தொல்காப்பியம், தலைவியின் கூற்றுமொழி நிகழும் இடத்தைக் கூறும். தாயர் ஈன்று புறந்தரும் மக்கள் — பிள்ளைகள் — தம் தந்தையரை வனப்பு, முறைசெய்தலில் தளராத செங்கோல் செம்மை, கெடுதல் அறியா விழுப்பொருள் விழைவார்க்கு ஈதல் முதலிய நற் பண்புகளில் உணர்ந்து ஒத்திருத்தல் சால்பு. நற்பண்புகளிற் திரிந்த அகத்தின்நோய் காக்கும் பண்புகளில் ஒவ்வாதிருத்தலே அழகு. இதனைத் தெளிவுறுத்தும் இடத்தில் தலைமகளுக்கு உரைக்க வாயெழுவது உண்டு. இங்கு, 'ஒப்ப' என்னுஞ் சொல்லாட்சியால் உவமை உணர்த்தும் அழகை நீள நினைந்து இன்புறுதல் கூடும்.

இன்னணம், கலையழகுச்சுவை நிறையத் தேனூறுஞ்சொற்களால் வடிவெடுத்த தொல்காப்பியத் தமிழ் உவமை நயம் சொலற்கரிய இன்பங் கிளர்ந்தெழச் செய்கின்றது. தொல்காப்பியர், உவமை யுணர்த்துஞ் சொற்களை வரையறுத்து இயம்புங்கால், போல, மான, ஒப்ப (பொருளதிகாரம். உவமையியல் : 11) என்னுங் கிளவிகளையும் அடக்கியுள்ளார். மேல் விளக்கிய நூற்பாக்களில் தொல்காப்பியர், இச்சொற்களைத் தழுவியிருத்தல், தாம் இலக்கணங் கண்டதற்கேற்ப இலக்கியம் அமைத்துப் பீடுற்றுப் பெருமை பிறங்க வழிகாட்டினார் என்பதனை உறுதி செய்யும், தொல்காப்பியனார் நுண்மாண் நுழை புலம் அறிதொறும் அறிதொறும் வியப்புற்றுப் பாராட்டற்பாலது.

# தமிழக வரலாற்று இடர்ப்பாடுகள்

திருவாட்டி மேனகை அம்மையார்,

இராணிப்பேட்டை.

## 1. தமிழகப் பழமையும் பிறமொழிச் சான்றுகளும்

பைந்தமிழ் நாட்டுப் பழமை பல்லாற்ருனும் தெற்றென விளங்கிக்கிடக்கவும், அதன் பழமைதான் இத்துணையதென்று சான்று பகர்ந்து நிறுவப்போந்த சான்ருேர் பெரிதும் இடர்ப்படுவாராயினர். நம் தண்டமிழ் நூல்கள் குறிக்கும் வேந்தர்களையும் அவர்களைப்பற்றிய செய்திகளையும் ஏனைய நாடுகளின் வரலாற்றுக் குறிப்புக்களோடு ஒப்புநோக்குழி அச் செய்திகளின் பழமையும் மெய்ம்மையுஞ் செவ்விதிற் புலனும். அத்துடன் உள்ளம் அமையாது அப்பழைமைப் பெற்றிமையைப் பின்னரும் விரித்துரைப்பான் புகிற் குற்றப்படும். குற்றப்படுமாறு என்னையோவெனிற் கூறுதும்:

இறைவனுண்மை இனிது பெறப்பட்டதொன்றன்றே! ஆதியுமந்த நடுவாகி யல்லானுய அவன் சீர்மையும் நோக்கரிய நோக்காய் நுணுக்கரிய நுண்ணுணர்வாய் நின்ற அவன் நீர்மையும் யாவர்க்கும் ஒப்பமுடிந்த தொன்றேயாம். அன்னனுக, அவன் வழிபாட்டிற்புக்கு அவனிற் கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும் நலத்தின் நிற்பதன்றே இவ்வுயிர்களின் கடப்பாடு! அதனிற்றங்காது பெயர்த்தும் அவன் சீர்த்தியை ஆய்வான்புகில் அது சாலாது வழுப்படுமென்க. அஃதேபோல் புலனுழுதுண்ட பழந்தமிழ்ப் பேராசிரியன்மார் தந்த நூல்கள் பலவும் தமிழர் அயல்புலத்தார் மயல்வலைப்பட்டு அவமுற்றதால் மாய்ந்து போயினவாக, நஞ்செந்தமிழும் நஞ்சுண்ட நம்பனேபோல் ஆதியுமாகி யல்லாத பான்மைத்தாகியது. ஆகவே இறைவனின் தனி முதற்றன்மை இவ்வளவிற்றென்னும் இயல்பிற்படாதது போல, பசுந் தமிழின் பழமையும் இத்துணைத் தென்னும் பெற்றித் தன்றென அறிக. எனவே விரித்துரைக்கப் புகுதல் கற்பனையின் பாற்பட்டு ஏதப்படுமென்க.

தமிழகத் தொன்மை யுணர்த்துவான் கருதிய ஆய்வாளர் நந்தமிழ்நூற் சான்றுகளோடு உள்ளம் அமையாராய்ப் பிறமொழிச் சான்றுகள் தேடிப் பேரிடருற்றனர். அவ்வாறு பிறமொழிச் சான்று கொண்டு தமிழக வரலாற்றை உய்த்துணரப்புகுவதால் உண்டாம் இடர்ப்பாடுகளையும் அவைகளையும் முறையினையும் எம் சிற்றறிவிற் குற்ற துணையே கூறல் இக்கட்டுரையின் நோக்கம் பேரறிவும் பேராராய்ச்சியும்படைத்திலாத எமது புல்லறிவாண்மையிற் போந்த கருத்துக்களில் பொருந்துவ கொண்டு பொருந்தாதன விலக்கிப் புலவோர் தழீஇக் கொள்வராக.

## 2. குமரிநாடு — பெயர்க் காரணம்.

குமரிநாடு என்னும் பெயர் வழக்கிற்குக் காரணங் கற்பிப்பான் முனைந்து ஒரு கதை யுரைப்பர். அக்கதை வருமாறு:— "மனு என்பானொரு தமிழ்வேந்தன். அவனுக்கு இயமன் என்னும் ஆண் மகவும் இளையென்னும் பெண் மகவுந் தோன்றினர் மனு தனது நாட்டை அவ்விருவர்க்கும் பகிர்ந்தளித்தான். இளை யென்ற அக் குமரி கோல் ஓச்சிய திறத்தால் அந்நாடு குமரிநாடெனப்பட்டது" என்பது.

இக் கதைதான் புராணச் சார்பிற்றாகலான் வலியுடைத்தன் றென்க. என்னை ? "பரிதி மார்பினிற் சமனொடு காளிந்தி பயிலுந் திரு" என்று சிவஞான முனிவர் குறிக்கும் புராணக் கூற்று மேலே காட்டிய கதைக்கு முரண்படுமாறு காண்க. அன்றியும், அவ்வாய்வாளர் தாமே தமது கூற்று, புராணத்தினைத் துணைப்பற்றி நின்று வலியின்றாதலுணர்ந்தார் போல, மலையாள நாட்டில் மகளிர்க்கே அரசுரிமையுஞ் சொத்துரிமையுஞ் சாரும் மரபைச் சுட்டிக்காட்டி இளை குமரி நாடாண்டதை மெய்ப்பிக்க முற்படுவர். இவர், இம்மருமக்கள் தாய வழி மரபு சேரர் காலத்தே இல்லாமையைச் சிந்தியாராயினர். என்னை ? சேரர் குலத்துள் ஒரு செல்வியாவது செங்கோல் செலுத் தினதாகச் சங்க நூல்கள் சாற்றிற்றில. குறிப்பாகப் பதிற்றுப்பத்து மகளிர் நாடாண்டமையையோ அவர்க்கரசுரிமை யுண்மையையோ இலை மறை காய் போன்றேனும் இயம்பிற்றில்லை. 'நிலஞ்சிறிதென் னும் ஊக்கம் துரப்பச்" சேரர் நாடாண்டதை நவின்றனவேயன்றி அவர் உடன் பிறந்தாளுக்காக உலகாண்டனரெனச் சங்க நூல்கள் உரைத்தில. எனவே, சேரலர் நாடு கேரளர் நாடாயின பிற்றை நாளிலேதான் மகன் வழித் தாயம் மறைந்து மருமக்கள் வழித்தாயம் மலர்ந்திருத்தல் வேண்டும். அஃதும் மலையாள நாட்டுச் செல்வம் தமிழகத்தே சென்று செறிப்புறாதிருத்தல் பொருட்டே தோற்றிய தென்று புலவர் கூறுவர்.

அன்றி இம்மருமக்கள் வழித்தாயம் சேரர் காலத்திருந்ததெனச் சாதிப்பான்புகின், இளங்கோவடிகள் துறவு யாதொரு பெருமையும் உடைத்தன்றாய் அத்துறவே போலியாய் விடும் என்க.

## 3. பாரத புராணங்கள்.

மற்றும் அல்லி யென்பாளை அருச்சுனன் மணந்த கதையினைக் காட்டிப் பாண்டியகுலத்துப் பாவையர் பார் பொறுத்தபான்மையால் பாண்டிய நாடு கன்னி (குமரி) நாடாயிற்றென்பர். இக்கதையைக் கால்டுவேல் அறிஞரும் குறிக்கத் தவறவில்லை. இக் காரணமும் வலியிழந்து போதலை வகுத்துரைப்பாம்.

அல்லியின் கதையைக் குறித்த கால்டுவெல் அறிஞர் மற்றொரு செய்தியையும் குறிக்கத் தவறவில்லை. பாண்டவர் தந்தையின் பெயரான பாண்டு என்ற சொல்லடியாகப் பிறந்ததே பாண்டியர் என்

னும் சொல் என்கிறார். அஃதாவது பாண்டியர் பாண்டுவின் வழித் தோன்றல்கள் என்பதே இதன் கருத்து. பாண்டுவின் வழித்தோன்றிய பார்த்தன் பாண்டுவின் வழித்தோன்றிய பாண்டியர் மகளை (அஃதாவது உடன்பிறந்தாளை) மணந்தானென்னுஞ் செய்தி நகைப் பூட்டுவதாமன்றோ?

அன்றியும், அல்லியைத் தனியரசோச்சிய தையலாளாக அல்லி யரசாணி மாலை, பவளக்கொடி மாலை, ஏணியேற்றம் முதலிய நாட்டுப் பாடல்கள் நவிலும். எனவே, இவளே பாரதம் பகரும் சித்திராங்கதை யெனக் கோடல் ஏற்புடைத்தன்று. என்னை? பெயர்களை மொழி பெயர்த்துரைக்கும் மரபுடைய வடமொழியாளர் அல்லி யென்ற பெயரைச் சித்திராங்கதை யெனத் திரித்தது யாங்ஙனமோ என்பது. சித்திராங்கதை யென்பாளின் தந்தையை அருச்சுனன் மணலூரிற் சந்தித்து அவன்பால் மகட்கொடை பெற்றனனெனப் பாரதங் கூறும். ஆயின் சித்திராங்கதை செங்கோலோச்சியது யாங்ஙனமோ என்பது பாரதமும் இவள் அரசோச்சினமைப் பற்றியாதும் உரையாமையும் ஈண்டு கருதுக என்பது.

அன்றியும், திருவிளையாடற் புராணமும் இவளைப்பற்றிப் பேசல் வேண்டுமே! இச்சித்திராங்கதையாளோடொத்த செல்வியை அப் புராணத்துள் யாண்டுங் காண்கிலம். அல்லி அரசோச்சியதேபோல இப்புராணத்துள் தடாதகைப் பிராட்டி தனியரசு செய்த செய்தி பயிலப்படுகிறது. இவர் தந்தையார் மலயத்துவசன் என்பான் இவனை அல்லியின் தந்தையாக்க முயலல் அவர் செயலாம் என்க.

மலயத்துவசன் என்ற பெயருக்கொரு காரணமுண்மை எமக்குத் தோற்றுகிறது. அதனையும் ஈண்டு பொறித்தல் சாலும் என எண்ணு கின்றனம். பண்டைத் தமிழரசர் தாம் பெற்றவென்றி முதலியவற் றைத் தம் பெயரோடிணைத்துச் சிறப்பித்துக் கொள்வர். கடல் பிறக் கோட்டிய வேல்கெழு குட்டுவன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழி யன், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என வரூஉம் பெயர்களைக் காண்க. தடாதகைப் பெருமாட்டியாரின் தந்தையும் வடநாட்டுப் படை யெடுப்பில் வென்றி யெய்தி இமயத்தே கயல் பொறித்தானாகல் வேண்டும். மலையிற் கொடி பொறித்த (மலை — துவசம்) இவனியற் பெயரை யொழித்துச் சிறப்புப் பெயராலேயே மலைத்துவசன் எனக்கொண்டு பிறகு மலயத்துவசனென்று வடவர் மாற்றி வழங்கினராதல் வேண்டும்.

நிற்க மேலே சுட்டிய பாரதக்கதை பொய்யன்றென நிறுவுதற் பொருட்டாய் இத்தடாதகைப் பெருமாட்டியைத் துணைக்கழைப்பர் கண்ணகியைக் காளியாக்கிய செய்தியேபோன்று தடாதகையாரே அல்லியெனவும் ஆலவா யவிர்சடைக்கடவுளே அருச்சுனன் எனவும் உக்கிரகுமாரனே பப்புருவாகனெனவும் இவ்வாய்வாளர் உரைப்பர்.

இதுவும் ஏலாவுரையே யென்பதைப் பின்னர் விளக்குவாம். ஆயினும் இவ்வம்மையார் வேள்வித்தீயில் உதித்த வழக்குபற்றி இவரே திரௌபதியெனவும் மலயத்துவசனே பாஞ்சாலனெனவுங் கூறுது விடுத்தனரே அதற்கு எம் நன்றி.

இனி அவர் உரை ஏலாமையைக் காண்பாம். திருவிளையாடல் இவ்வுக்கிரகுமாரனைக் கடல்சுவற வேலெறிந்த கொற்றவனெனக் கூறும். பாரதமோ இதைக்கூறுது மௌனம் சாதிக்கிறது. புராண ஆசிரியரும் பாரத ஆசிரியரும் ஒருவரே யென்பதையும் ஈண்டு நினைவுகூர்க. அன்றியுந் தலபுராணத்தின்படி இவனே மூன்ருஞ் சங்கம் இரீஇய பாண்டியனுவான். இச்செய்திகளே ஒன்றுக்கொன்று முரண்படுவவாயின. என்னை? கடல்சுவற வேலெறிந்தகாலம் மிகப் பண்டையது. மூன்ருஞ்சங்கங் கண்டகாலம் மிகப் பிந்தியது. இவனே கடல்சுவற வேலெரிந்தோனுகவும் கடம்பவன மதுரையை ஆண்டோ னுகவும் இருத்தல் இயலாது. கடல்சுவற வேலெறிந்த இவன் காலத் தேயே கடல்கோளுற்றதெனல் பொருந்தாது என்னை? அவன் காலத்தேயே அவன் நகரை ஆழி அலைப்புறச்செய்யாது என்க. இதனை,

> " வடிவே லெறிந்த வான்பகை பொருது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள "

எனச் சேரரிளவல்தெற்றென விளம்பிப்போந்தார். இதற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் இதனைப் பின்னரும் நன்கு தெளிவிப்பான் கருதி.

"முன்னொரு காலத்துத் தனது பெருமையினதளவை அரசர்க்குக் காலான் மிதித்துணர்த்தி வேலானெறிந்த அந்தப் பழம் பகையினைக் கடல் பொருது பின்னொரு காலத்து அவனது தென்றிசைக் கண்ணதாகிய பஃறுளியாற்றுடனே பலவாகிய பக்க மலைகளையுடைய குமரிக்கோட்டைக் கடல்கொண்டதனுல்"

எனவிரித்துப் போந்தார். மேலும் மூன்ருஞ்சங்கங் கண்டான் முடத்திருமாறனென நம் செந்தமிழ் நூல்கள் செப்புவனவாம். அவனே இவ்வுக்கிரகுமாரனெனக்கொள்ளலும் அமைவுடைத்தன்று. என்னை? அவ்வாறுகொள்ளின் 'அடியிற்றன்னளவரசர்க் குணர்த்தி' என்ற சிலப்பதிகார உரை வெற்றுரையாய்விடும் என்க.

உக்கிர குமாரனைப் பப்புருவாகன் என்பதினும் உடம்பிடி யேந் தும் முருகனின் தோற்றம் என்னும் திருவிளையாடல் கருத்தே சிறிது பொருந்தும். கடல் வடிம்பலம்ப நின்ற இப்பாண்டியனை "முந்நீர் விழவினெடியோன்" எனத் தமிழ் நூல்கள் போற்றும் நெடியோன் என்ற பெயர் முருகனுக்காதலை 'ஒடியாவிழவினெடியோன்குன்றத்து' என்வரும் அகப்பாட்டில் கண்டு கொள்க.

அன்றியும், பற்குனன் என்னும் பாண்டவனைப் பசுங்கதிர்த் திங்கள் பணியொடுமுடித்த பரமனெனப் போற்றும் அத்துணைப் பேதைமையரல்லர் பழந்தமிழர் என்க. ஆதலின் பாரதம், தல புராணம் முதலிய கூறும புனைந்துரைகளைத் துணைக்கொண்டு பசுந் தமிழேற்றம் பகர்தல் இழுக்கென உணர்க,

4. பாரத நிகழ்ச்சியின் மெய்ம்மை.

பாரதக்கூற்று பொய்ம்மையெனின் மெய்ம்மையதன்கண் எட் டுணையுமிலதோ? ஆயின்,

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

எனவருஉம் புறநானூற்றுச் செய்திஎன்னுய்முடியும்என்பது கடா. இச்செய்தி பொய்யுரையன்று; பொருளுரை என்பதே விடை. என்னை? அணிஎன்ற முறைக்கேனும் தாம் கண்டிலாதசெய்தி கழற முற்படாது, ஆண்டும் தாம் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றறிந்த இயற்கை உவமையே யுரைக்கும் பூட்கையினராய பைந் தமிழ்ப் பேராசிரியன்மார் நடவாத ஒன்றினைமேலிட்டுப் புகழாரன்றே! எனவே பாரத நிகழ்ச்சி பொய்யன்று. பாரத நூலின்கண் பயிலப் பெறுஞ்செய்திகளே புனைந்துரைகளாமென அறிக.

5. தமிழகக் கதைகளும் வடநூல் தோற்றமும்.

பாரதம், இராமாயணம் போன்றவை நம் பழந்தமிழ் நூல்களிற் பல்காலும் பயிலப்படுதலால் ஆரியர் கலப்பு மூன்ருஞ்சங்க காலத்துக்கு எத்தனையோ நூறு ஆண்டுகட்குமுன் தொடக்கமுற்றிருத்தல் வேண் டுமெனவுஞ்சிலர் செப்புவர். திருந்த நோக்குழி இதுவும் மெய்யுரை யாகாது மயலுரையாதல் பெறப்படும்.

வடமொழி யியல்பாய்ந்த பேராசிரியன்மார் சிலர் ஆய்வுரைகளை ஈண்டுத் தருதும் :-

(அ) "ஆரிய மொழியிற் காணப்படும் எழுத்துக்களும் பிறவும் அம்மொழிக் கினமாகிய இலத்தின், கிரீக்கு, எபிரேயம் முதலிய மொழிகளில் இல்லாமையால் இந்தியாவை அடைந்த ஆரியர் அங்குறைந்த தொல்குடிகளாகிய தமிழரின் எழுத்துமுறைகளைப் பின்பற்றியதுடன் லிபி களையும் ஆக்கிக்கொண்டார்க ளென்பது வெள்ளிடை விலங்கல்."

"திராவிட இந்தியா"

(ஆ) "வடநூலார் தமிழின் நெடுங்கணக்கைப் பார்த்து உயிரெழுத்து மெய்யெழுத்துக்களை அடைவுபடுத்திக் கொண்ட அளவில் அமையாது தமிழினும் தமக்கு உயி ரெழுத்துக்கள் மிகுதியாய் உண்டென்று காட்டுவதற்குப் புகுந்து பொருந்தாப் பேரவாவால் உயிரெழுத்துக்க ளல்லாத ரு, ரூ, லு, அம், அ: என்னும் உயிரெழுத்துக் களையும் அவற்றோடு கலந்து இழுக்கினர்."

"மறைமலையடிகள்"

(இ) "தாங்கள் செல்லுமிடங்களுக்குத்தக்கபடி புதிய லிபிகள் ஏற்படுத்திக்கொள்ளும் இயல்புடைய ஆரியர் தமிழ் நாட்டிற்கேற்றபடி தமிழ்லிபியை ஒட்டிக் கிரந்தம் என்னும் புதியதோர் லிபி வகுத்தனர்."

"தமிழ் மொழியின் வரலாறு."

இவ்வாறு தங்களது மொழியின் எழுத்துக்கே இடர்ப்பாடுற்றுக் கடன்கொண்டவடவர் தமிழருக்கு ஒழுக்கவிதிகளையும் சமயவுண்மை தெளிக்கும் நூல்களையுஞ் சமைத்தாரென்பது ஊமையன் உவாத்தி யானுயினன் என்பதுபோலப் பொருந்தாததொன்று. ஆம், அன்றி அவர்தாம் கற்பித்தாரென்னில், பிற்பட்ட காலத்தனவாய நிகண்டுகள் "மிலேச்சராரியர்" என்று மொழியாதென்க. என்னை? குரவரை யிகழ்ந்த பழியும் பாவமும் அதனுற்சாருதலின்.

எனவே, பண்படாத மொழியுடனும் எதிரியின் ஏற்றங்கண்டு இந்திரனைநோக்கி மந்திரங்கூவிச் சிந்தையுளையும் மந்த உணர் வுடனுமே ஆரியர் தமிழகத்துக்குவந்தனர். வந்தோர் ஆண்டு வதிந்த தமிழர் ஒழுகலாறுகளையும் அறிவு மேம்பாட்டினையுங்கண்டு பெரிதும் அச்சமுற்றனர். தாளாற்றலாற்றந்த பொருள் வேளாண்மை செய்தற்பொருட்டேஎன்ற நெறிபிடித்தொழுகிய தமிழர்பால் விருந் தினராயமைந்தனர். அக்காலை தங்கள் மொழிக்கும் எழுத்துக்களை வகுத்துக்கொண்டனர்.

நாட்டின் வளங்கண்டு நயந்தசிந்தையினராய அவர் உழைத் துண்ணலை வெறுக்குங் கோட்பாட்டினராதலால் தமிழரை மயல் வலைப்படுப்பான் வினைசூழலுற்றனர். தமிழ்நாட்டில் அக்காலத்து வழங்கிவந்த வரலாறுகளை உய்த்துணர்ந்தனர். அவ்வரலாறுகளைக் கற்றதோடமையாது தம்மொழியில் மொழிபெயர்த்துங் கொண்டனர். அவ்வாறு மொழிபெயர்க்குங்காலைத் தங்கள் உயர்வு அதன்கண் யாண்டுங்காணக் கிடக்குமாறு அவ்வரலாற்று நெறியினைத்திரித்து மொழிந்துகொண்டனர். வடவர் மறைகளும், இராமாயணமும், பாரதமும், இவ்வண்ணம் யாக்கப்பட்டனவேயாம். இராமாயணப் புலவரான வான்மீகியாரே புறநானூற்றுள் 358ஆம் செய்யுளை யாத்

தவர் என்று உறுதிசெய்த பேராசிரியர் இராகவையங்கார் முடிவும் இக்கோட்பாட்டை அரண்செய்தமைகிறது. இச்செய்யுளை யாத்தவர் இராமாயண வான்மீகனுரேயெனின் அவர் இராமாயணம் யாத்துச் சிலநூறு ஆண்டுகளாவது கழிந்தபின்பன்ரே அஃது தமிழில் பெரு வரவிற்ருதல் இயலும்? அங்ஙனமிருப்பச் சோழன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட் சென்னியின் கொடைநலம் பாராட்டுவா னெடுத்துக்கொண்ட ஊன்பொதிபசுங் குடையார் என்னும் பைந் தமிழ்ப் பாவலர்,

"கடுந்தெற லிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்
கருஅ வருநகை யினிதுபெற் றிகுமே"

என மொழிதல் இயலாதே!

எனவே வடவர் தமிழ்நாட்டெல்லையுள் புகுதரற்கு முன்னமேயே இக்காதைகள் தமிழரிடை வழங்கிவந்தன எனக் கோடலே ஏற் புடைத்தாகும். அற்றன்று, வான்மீகியார் தம் இராமாயணத்துள் பாண்டியரின் தலைநகரான கபாடபுரத்தைப்பற்றி விரித்துக் கூறி யுள்ளார். ஆகவே, அவர் இடைச்சங்க காலத்தவராதல்வேண்டு மெனத் தடையெழுப்புவர். அவர்க்கு அவ்வண்ணம் ஆயப்புகுதல் அறிவின்பாற் படுவதன்றென விடையிறுக்க. என்னை? கல்கியென் பார் பொன்னியின் செல்வன் என்றதொரு புனைகதை எழுதினர். அதனுள் அவர் கும்பகோணத்தைக் குடமூக்குஎன்று வழங்கியுள்ளார். ஆகவே அவர் குடமூக்கு என்ற பெயர் வழக்காற்றிலிருந்த காலத்தே வதிந்தவராதல் வேண்டுமென முடிவுகட்டுவது அறிவுடைமை யன்ருகும். வரலாறு நிகழ்ந்தகாலத்தே குடமூக்கு என்ற பெயர் வழங்கினமையின் ஆசிரியரும் அப்பெயரையே தந்துரைத்தார். அஃதேபோல வான்மீகனுரும் இராமாயண நிகழ்ச்சி இரண்டாம் சங்ககாலத்தது என்ற கருத்தினராதலால் அதனைக் குறிப்பா லுணர்த்தும் பொருட்டுக் கபாடபுரத்துக் கவிஞேதிச் சென்ருரென்க.

இந்நூல்களெல்லாம் தமிழினின்றுங் களவுசெய்யப்பட்டு ஆரியர்க் காக்கந் தரும்வண்ணம் திருத்தி யமைக்கப்பட்டனவே யென் பதற்கு இன்னமும் சான்றுகூறுதும். தமிழர் நான்மறைகளைப் பெற் றிருந்தனர். அவைகளைப் 'பண்டாய நான்மறை' யெனப் பாராட்டி யும் வந்தனர். சிவபிரான் 'மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து உற்றவைம்முகங்களாற் பணித்தருளி' னர் என்றும் வாதவூரடிகளார் மறைகளின் வரலாற்றைக் கூறிப்போந்தார்; ஆனல் வடவரின் மூல மறைகளெங்குள்ளனவோ எவர்கூறினரோ யாதும்தெரிகிலது. வேத

வியாசரால் மறைகள் திருத்தியமைக்கப்பட்டன என்னும் செய்தியே யன்றி வேறொருவரலாறுங் கிடையாது. வியாசரால் திருத்தப்பட்ட மறைகளிவையெனத் தற்போதுள்ள வேதங்களைக் கூறினல் திருந்தாத மூலமறை எங்கே? எனவே, வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்கண்டதன்று வடமறைகள். அவை சார்பு நூலின் பாற்படும். எதனோடு சார்புடைத்தோவெனில் தமிழ் மறைகளோடு சார்புடைத்து. அவை தாம்பெரிதும் திரித்து அமைக்கப்பட்டனவாதலால் முதல் நூலோடு யாண்டும் மாறுகொள்ளும் இயல்பிற்றுயது. திருவாளர் பா. வே. மாணிக்க நாயகரவர்களது ஆய்வுரை இக் கருத்தை உறுதிப்படுத்துகிறது. அது வருமாறு:—

“ஆனல் அந்த அந்தணர் யாவர்? அவர் மறை யாது? என்பனதான் புலப்படாதனவற்றுள் சில, வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத்தமிழ் உலகத்து அந்தணர் என்பாரும் சிந்துநாட்டுப் பிராமணரென்பாரும் ஒன்றேயா? தமிழ் நாட்டு அந்தணர் மறையும் சிந்துநாட்டுப் பிராமணர் வேதமும் ஒன்றேயா? நான்மறை, சதுர்வேதம், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், பிராமணர், சத்திரிய, வைசியசூத்திர என்னும் போலி ஒற்றுமைகொண்டு இரண்டும் ஒன்றென்பதா? உட்கிடை வேற்றுமைகண்டு அன்றென்பதா?”

மேற்போந்த உரை தமிழ்மறை திரித்துரைக்கப்பட்டது என்பதைச் சொல்லாமற் சொல்லுகிறது. நான்மறை சதுர்வேதமாகத் திரிந்த தன்மையேபோல் இராமாயணமும் பாரதமும் திரித்துரைக்கப்பட்ட நூல்களேயாகும். தென்கோடியின் கண்ணதாய சேரநாட்டு வேந்தன் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் வடகோடியிற் கிடந்த குருச்சேத்திரத்தே வடவேந்தர் தம்முள் பொருதொழியப் பெருஞ்சோறளித்த கடப்பாடியாதோ யாம் அறிகிலம். அன்றி அவ்வாறு சோறளித்தல்தான் ஒல்லுவதாமோ? வரலாற்றுக் காலந்தொட்டே வடவரும் தமிழரும் நண்புடன் கெழுமிவாழ்ந்தசெய்தி கண்டதில்லை. மாருக, மாற்றலராகவே இருவரும் ஒருவரையொருவர் மதித்தொழுகினர். எனவே, இகல்வேட்டெழுந்த ஆரியப்படைகட்குச் சேரன் சோறளித்த உறவு என்கொலோ? சோறளித்த இச்செயலைப் பாரதமும் பாராட்டியதில்லை என்பதையுமுணர்க. எனவே, பாரதக்கதை தமிழ்நாட்டுக் கண்ணேயே நடைபெற்றதாதல்வேண்டும். இதனை இடம், பெயர், மரபு, இத்துணையும் திரிய, வடநூலார் உரைத்தனராகல் வேண்டும்.

மற்றொன்றும் ஈண்டுகருதற்பாலது வியாசரும், வான்மீகரும் கதை நிகழ்ந்த காலத்துத் தாமிருந்தமையை யுணர்த்துவதோடமையாது அக்கதையினை ஆங்காங்கு இயக்குநராயுமிருந்தேமெனப் பறைசாற்றுகின்றனர். இராமன் மக்களுள் ஒருவனை குசனைப் புல்லால் படைத்தேமென வான்மீகரும் கௌரவர் குலத்தார் எம் புணர்ப்

பால் படைக்கப்பட்டனரென வியாசரும் விளம்பும் கற்பனைகளைக் கண்ணுறுக. முருகன் முனிவர் பெண்டிர் அறுவர் வயிற்றில் வளர்ந்த கதையும் ஈண்டு உன்னற்பாலது.

இவ்வாறு தமிழர்பால் வழங்கப்பட்ட கதைகட்கு ஆரிய முனிவர்களை மூலமெனக்காட்டி, அதனல் அக்கதைகள் எய்தலாகாச் சிறப்பை எய்தினபோல தமிழரை மருளச்செய்து தம் பிழைப்புக்கு வழிதேடிக் கொண்டனர். தமது நூலின்கண் தமிழரையும் சிறப்பித்ததாய மாயங்காட்டல்வேண்டி வான்மீகனர் கபாடபுரக்கவினையும் வியாசனர் வழுதிமகளை வானவர்கோன் திருமதலை வதுவைசெய்த கதையினையும் ஓதிப்போந்தனர். வடவரை வணக்கிய திண்டிறலைச் செப்புவதன்றி அவரோடிணங்கி வாழ்ந்ததை வண்டமிழ் நூல்கள் வழுத்தாது செல்வனகண்டும் வேதத்தையே திரித்த வியாசர் கூற்றை மெய்யென நம்பிச் சித்திராங்கதை மணம் பொருளுரையெனக் கோடல்பெரும் பேதைமைத் தென்க.

வியாசர்கூற்று வாய்மைப்பாலதே யென்னின் பாண்டவர் பிறப்பு பெரிதும் ஏதப்பாடுடையதாம். அன்னதோர் பண்பினுற்கு வழுதி மகட்கொடை யிசைந்ததுவியப்பே. அன்றியுந் தமிழர் காதல் நெறி பற்றி ஒழுகுபவராதலின் இம்மணமக்களிடத்தே ஒத்தகுலமும் ஒத்த குணமும் முதலாய நலங்கள் இல்லாமையும் நோக்குக.

இங்ஙனந்திரித்து நூலாக்கினர் உண்மை நூல்கள் தமிழில் வாழுதல் தமக்குப்பெரிதும் தீதுபயப்பதென உணர்ந்து அவை மாயும்வகை தேடுவாராயினர். தங்கள் நூல்களே தெய்வத்தினது அருளிப்பாடுடையவெனவும் தமிழ் நூல்கள் அன்ன ஆகாமையின் அவம்பட்டனவெனவும் அவற்றைப் பயிலுதலால் அருளழிந்து மருள்மீக்கூருமெனவும் அவற்றைப் பேணுதலும் அறிவின்மையென்வும் பலவாறு கற்பித்து அருந்தமிழ் நூல்களுக்கிறுதி தேடுவாராயினர். கடல்கோளாலழிந்த நூல்களினும் வடவர் கோளால் மாய்ந்த நூல்களேமிகுதியும் என்பது என்துணிபு. தங்கள் நூல்கள் தவமுனிவர்வாக்கினியன்றதெனவும் வியாசன் கூற விநாயகன் வரையேடாக எழுதினனெனவுங் கதைகூறுவர். பாரதம் பற்றிய குறிப்பு பழந்தமிழ் நூல்களில் காணப்பெற்றும் பாரதம் வரைந்த விநாயகனே தமிழ் நூல்களில் காணப்படாமை வியாசபாரதம் மிகப் பிந்திய காலத்ததென்பதைக் காட்டுகிறது. இவ்வாறு தெய்வத் தன்மை தந்த மருளால் எத்தனையோ தமிழ் நூல்கள் மாய்ந்தொழிந்தன. ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டிய கதையாகத் தமிழைப் புகலடைந்த வடமொழி தமிழ் நூல்களையே அழிக்க முயன்றது.

இவ்வடமொழி நூற்கள் செய்திகளைப் பெரிதுந் திரித்துக்கூறின என்பதற்கு மற்றுமோராதாரங்கூறுதும். திருவிளையாடற்புராணத்துக் காணலுறும் வன்னியுங்கிணறும் இலிங்கமும் அழைத்த படலத்தையும் பெரியபுராணத்துத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணத்தையும் ஒப்புநோக்குவார்க்கு வடநூலாசிரியர் செவிவழிச் செய்தியையே சிறிதுஞ் சிந்தியாது பின்னருந் திரித்துக்கூறிப் போந்தனர் என்பது புலனும். அன்றியும் "வியாதனுக்குணர்த்த அந்தப் புண்ணிய முனிவன் சூதற்கோதியதாக" த் திருவிளையாடற் புராணம் வழங்கப்படலின் வியாதன்காலம் சம்பந்தர் காலத்துக்கும் பிற்பட்டதாகல் வேண்டுமே! ஆயின் இவ்வியாதனே பாண்டவர்க்குப் பாட்டனுய பான்மைதான் என்னே! என்னே!

அன்றியும் வித்தகஞ்சான்ற முத்தமிழ்ப் புலவோரை நான்முகனரின் சாபமெய்திய நாமகள்சாயலென்னும் வஞ்ச மொழியும் வடவர் தம் திரித்துக் கூறும் வன்மையினையே தெளிக்கும். அவர்கள் பெரிய புராணத்தைத் திரித்துக்கூற இடமில்லாமல் செய்து விட்டன, சைவ சமய குரவரருளிச் செய்த தேவாரத் தீந்தமிழ்ப் பாக்கள். எனவே பெரிய புராணம் வேதப் பிரமாணம் பெற்றதன்றெென இழித்துப் பேசுவராயினர்.

இனி, திராவிடம் என்ற சொற்கும் தமிழ் என்ற சொற்கும் யாதொரு உறவுமில்லை என்பதும் தெளிந்து கொள்ளல் வேண்டும். கால்டுவெல் அறிஞர் இங்ஙனந் தெளியமாட்டாராய்த் தமிழ் என்ற சொல் திராவிடத்தின் திரிபு எனக் கொண்டனர். அஃதும் அவர் குற்றமன்று. அவர் காலத்தே சங்க நூல்கள் பயிலாமையும் அவரே கூறுவதுபோல எடுத்ததெல்லாம் வடமொழியிலிருந்துதான் பிறந்தது என்று சாதிக்க முயலும் தமிழ்ப்புல்வர் தம் அந்நாளைய மயலுமே அவரைப் பிறழ உணரச் செய்து விட்டது.

எனவே பாரதம் முதலிய கதைகள் திரித்துரைக்கப்பட்ட தமிழ்க் கதைகள் என்று உள்ளந் தெளிந்து தமிழக வரலாற்றுக்கு அவற்றினின்றும் ஆதாரந் தேடி அவமுறுதலினின்றும் நீங்கல் வேண்டும். ஏனைய நாட்டு வரலாற்றுக் குறிப்புக்களோடு ஒல்லுங்காலை இணக்கிப் பார்த்து முடிவு செய்தல்வேண்டும்.

பண்டைத் தமிழக வரலாறு இதுகாறும் யாரானும் நிரல்படக் கோத்து அமைக்கப்படவில்லை. பண்டைத் தமிழக வரலாறு அவ்வண்ணம் கோத்தமைத்தற்கு வேண்டும் எல்லா வசதிகளையும் பெற்றிருந்தும் அவ்வரலாறும் நிரல்படக் கோத்தற்கு எளி வருவதாயிருப்பவும் இதன்மாட்டுப் புலவர் இன்னும் நாட்டம் வைத்தாரில்லை. இஃது வியப்பே! இனியேனும் இத்துறையில் அறிஞர் முயல்வாராக.

# வான்வெளி ஆராய்ச்சி

எழுதியவர் : திரு. அரு. கிருட்டினமூர்த்தி, B. Sc., B. T.,

வெளியீடு: அல்லிப் பதிப்பகம், சிதம்பரம். — விலை: ரூ. 7—50

வானகத்தின் கதவுகள் திறந்துவிட்டன. திங்களுக்கும் பிறகோள்களுக்கும் மனிதன் செல்லுகின்ற நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. இந்த விண்வெளியுகத்தின் பார்வையாளர்களாக அமைந்துள்ள நாம், வான்வெளி ஆராய்ச்சி பற்றிய இயல் நாள்தோறும், விநாடிதோறும், புதிய புதிய செய்திகளில் விரிவுபெற்று விரைந்து வளர்வதை உணர்கிறோம். அடுத்தடுத்து வந்துகொண்டே இருக்கும் இந்தச் செய்திகள், நம்மை செய்தித்தாள்கள் மூலமாகவும் வானொலி வாயிலாகவும் வந்து அடைவதற்குள் புதிய நிகழ்ச்சிகளால் பழையனவாகி விடுகின்றன; இராணுவத் தற்காப்பு அடிப்படையில் பலசெய்திகள் நம்மை வந்தடையாமல் மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன. இத்தகைய சூழ்நிலையில், 1962-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை, வான்வெளி ஆராய்ச்சிபற்றிக் கிடைத்துள்ள செய்திகளை நுட்பமாகத் தொகுத்து, ஓரளவு கல்வியறிவு உடையோரும் விளங்கிக் கொள்ளும் வகையில், தெளிவான தமிழில் எழுதப்பட்டுள்ள 'வான்வெளி ஆராய்ச்சி' எனும் இந்நூலை வரவேற்கிறோம்.

வான்வெளி இயல்பற்றித் தமிழில் வெளியாகியுள்ள நூல்கள் மிகச்சில. அவற்றிலும் வான்வெளி இயலின் துவக்க நிலையோடு அமைந்தனபல. தமிழில், நூல்வடிவில் இதுவரை வெளிவந்திராத, வான்வெளி ஆராய்ச்சிபற்றிய பல நுணுக்கமான செய்திகள் இந்நூலில் விளக்கம் பெற்றுள்ளன. உருசியரும் அமெரிக்கரும் ஏவிய பல்வகை நிலாக்களையும்பற்றிய செய்திகள் விரிவாக இடம் பெற்றுள்ளன; பின்னர், பட்டியல் வடிவில் தொகுத்தும் உரைக்கப் பட்டுள்ளன. வான்வெளிஇயல் வளர்ந்தகதை வரலாற்றியல் என்னும் முதல் பகுதியிலும், பல்வகை நிலாக்களைப்பற்றிய செய்திகள் அறிவியல் என்ற தலைப்பில் இரண்டாம் பகுதியிலும், வான்வெளிக் கலங்கள், அவற்றை ஏவுதல், அவற்றின் இயக்கம், இயக்கத்திற்கு எதிரான சக்திகள், அவற்றை வெல்லும் வழிகள் முதலான செய்திகள் தொழில் நுணுக்க இயல் என்ற மூன்றும் பகுதியிலும் பிற செய்திகள் பிற்சேர்க்கையாக அகரவரிசை என்ற கடைசிப்பகுதியிலும் அமைக்கப் பட்டிருக்கின்றன. வான்வெளி ஆராய்ச்சிபற்றிய ஒரு கலைக் களஞ்சியமாக அமையுமாறு, இந்நூலில் ஆசிரியரின் உழைப்பு பயன் பெற்றுள்ளது. நுணுக்கமான செய்திகளைத் தமிழில் விளக்குவதிலும், கலைச்சொற்களை உருவாக்குவதிலும் கையாள்வதிலும், ஆசிரியர் வெற்றியடைந்துள்ளார். தொழில் நுணுக்கஇயல் பகுதியை இன்னும் ஆரம்ப நிலையிலிருந்து விரித்து எழுதுதலும், ஆங்கிலத் தமிழ் அகராதி தந்துள்ளதுபோல, தமிழ் ஆங்கிலக் கலைச்சொல் அகராதியை அமைத்தலும், மறுபதிப்பில் மேற்கொள்ளப்பட்டால், இந்நூலின் சிறப்பு மேலும் சிறக்கும் என நம்புகிறோம்.

மதிப்புரை — கோ. சண்முகசுந்தரம், எம். ஏ., எம். எசி.

# தமிழ் இலக்கியத்தில் நாவல்கள்

**ஏ. சுப்பிரமணியம்,**
பச்சையப்பன் கல்லூரி, இளங்கலை இறுதியாண்டு, சென்னை.

இன்று உலகில் வழங்கப்படுகின்ற எல்லா மொழிகளும் எழுத்துருவிலோ அல்லது வாய்ப்பாட்டின் மூலமாகவே தமக்குரிய இலக்கியச் செல்வத்தைப் பெற்றுள்ளன. இலக்கியத்தின் அமைப்பு காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே வருகிறது. இலக்கியத் துவக்கத்தில் தன்னுணர்வுப் பாடல்களை இலக்கியமாக அமைத்தது. மக்கள் அப்பாடல்களை வாய்விட்டுத் தன்போக்கில் பாடி மகிழ்ந்தனர். அதன்பின்னர் தன்னுணர்வுப் பாடல்களை இசைக்கருவிகளோடு அமைத்துப் பாடும்பாடல் முறையான தன்னுணர்வு இசைப்பாடல் (Lyric) தோன்றியது. இதற்குப் பின்னர் நாட்டுப்பாடல்கள் தோன்றின; நாட்டுப் பாடல்களுக்குப் பின்னர் வீரப்பாடல் (Heroic Poetry) இலக்கியமாகப் போற்றப்பட்டது. அதன் பின்னர் காப்பியம் எழுந்தது. காப்பியகாலம் வரையில் மக்கள் உள்ளத்தில் பெரும்பாலும் எழுத்தைக்காணும் ஆர்வம் பிறக்கவில்லை. அதனால் இன்று காப்பியத்திற்குமுன் தோன்றிய இலக்கியப் பகுதிகளை நம்மால் காணமுடியவில்லை. காப்பியத்திற்குப் பிறகு நீண்ட அடிகளில் அல்லாமல் குறைந்த அடிகளில் கருத்தை வெளியிடும் வெண்பா. வெண்பா வகைகள், அதன் பின்னர் ஆசிரியம், விருத்தம், முதலியன எல்லாம் தோன்றின. ஆனால் இவைகள் அனைத்தும் பாடலாகவே அமைந்துவிட்டன. பாடல்கள்தாம் இலக்கியம் என்ற உணர்வையும் மக்களிடம் உண்டாக்கிவிட்டது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் பாடல்களால் அமைந்தவைகள் அல்லாமல் உரை நடையால் அமைக்கப்பட்ட சிறுகதைகள், நெடுங்கதைகள், நாடகம், கட்டுரை அனைத்தும் இலக்கியம் என்று போற்றப்படுகிறது. ஆங்கில நாட்டார் பழமையான இலக்கியங்களைக்காட்டிலும் தற்கால நூல்களுக்கே பெரிதும் சிறப்பளிக்கின்றனர். தற்கால இலக்கியச் செல்வத்தைப்பெற்ற மொழியே சிறந்த மொழியெனவும் போற்றுகின்றனர். அந்தத் தற்கால இலக்கியத்தில் நாவல் எனப்படும் நெடுங்கதை சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

**நாவல் என்றால் என்ன?**

இலக்கியம் என்றால் என்ன? என்னும் கேள்விக்கு நாம் என்ன விடையைத் தருவோமோ அதே விடையைத்தான் நாம் நாவலுக்கும் பொதுவாக அளிக்கலாம். ஒருவன் தன் வாழ்க்கையில்கண்ட அல்லது அனுபவித்து உணர்ந்த உணர்வை, கதையொன்றின் மூலம் சுவையான நிகழ்ச்சிகளையும் உரையாடல்களையும் விருவிருப்பான நடையில் உரைநடையில் எழுதிக்காட்டி, படிப்பார் உள்ளத்தில் தான்பெற்ற உணர்வை எழுப்புவது நாவலாகும். நாவல்கள் உரைநடையால் அமைவதோடு முதல், இடை, இறுதி என்னும் மூன்று காப்பிய

முக்கியப் பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும்; துவக்கம் (Introduction) வளர்ச்சி, (Grouth) உச்சநிலை, (Climax) வீழ்ச்சி, (Fall) திருப்புநிலை (Catostropre) என்னும் ஐந்துவகையான நாடகப் பண்புகளையும்கொண்டு விளங்குதல் வேண்டும். இவைகள் அனைத்திற்கும் மேலாக மனித வாழ்வை உயர்த்துவதற்கு நாவல்கள் பாடுபடுவதாக அமைதல் மிகவும் இன்றியமையாததாகும்.

நாவலின் துவக்கம் :-

பாடல்களால் கருத்தை எழுதிக்காட்டும்முறை சிறிதுமாறி, உரைநடையில் கருத்தை எழுதி விளக்கும்முறை தோன்றிய காலத்தில் நாவலும் தோன்றியது என்றுகூறலாம். கடிதங்கள் எழுதும் முறையிலிருந்து வளர்ந்ததே நாவலாகும்என்று சிலர் கூறுகின்றனர். அதற்கு மேற்கோளாக ஆங்கில நாவல் பாமெலா (Pamala) என்பதை எடுத்துக்காட்டுகின்றார் மு. வ. இந்நாவல் கடிதங்களாகவே அமைந்ததாகும். எதுவாயினும் உரைநடை வளர்ச்சியோடு நாவலின் தோற்றம் துவங்கிவிட்டது உண்மையாகும். நாவல் கிரேக்கத்தில் அலக்சாந்தர் காலமான கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே துவங்கிவிட்டது என்று ஓர் ஆங்கில ஆசிரியர் கூறுகிறார்.[1] நாவல் முறை கிரேக்கத்திலிருந்து இத்தாலிக்குப் பரவி, இத்தாலியிலிருந்து 15-ஆம் நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் பரவ ஆரம்பித்தது.

தமிழ் நாவலின் தோற்றம் :-

ஆங்கிலேயர்களின் கூட்டுறவால்தான் தமிழ் உலகில் நாவல் என்னும் இலக்கிய முறையே ஏற்பட்டது என்று சிலர் கூறுகின்றனர். நாவலின் வளர்ச்சியும், அமைப்பு முறையும் ஆங்கில மக்களின் — இலக்கியங்களின் கூட்டுறவால் வளர்ந்திருக்கலாம். ஆனால் நாவல் தமிழ் உலகில்,தானே தோன்றி,தானே வளர்ந்துவந்ததாகும். நாவல் என்பது ஒரு உணர்வை அல்லது கருத்தை உணர்த்த கதையொன்றின்மூலம் நிகழ்ச்சிகள் அமைத்து உரைநடையால் செய்யப்படுவது என்று முன்பே கண்டோம். இவ்வாறு கதை கூறுகின்ற வழக்கம் தமிழ் இலக்கியத்தில் தொல்காப்பியர் காலத்தில் இருந்ததை தொல்காப்பிய நூற்பாவொன்று கூறுகிறது.

---

[1] The vogue of vovel really began in Alexandarian times, when social life was so far settled in tradition that the pleasure of reflecting on reality had definitely set in. In the second century B. C. certain Aristides wrote in six books the Milesiaka, which was perfectly the webeginning of the modern novel.

— Encyclo Pedia Britanica.

தொன்மை தானே,

உரையொடு புணர்ந்த பழமை மேற்றே—தொ. சொ. 237.

கதையொன்றை இடையிடையே உரை நடை விரவிவரக் கூறும் வழக்கம் இருந்ததை இந்நூற்பாவால் அறியலாம். இந்நூற்பாவிற்கு உரையெழுதும் ஆசிரியர் நச்சினார்க்கினியர். "தொன்மை என்பது உரை விராய் பழமையாகிய கதைப்பொருளாகச் செய்யப்படுவது என்றவாறு: அவை பெருந்தேவனாரால் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன" என்று கூறுகிறார். இதனால் தொல்காப்பியர் காலத்தில் பாட்டமைப்பால் விளங்கிய இலக்கியத்தோடு உரைநடையால் கதைப்போக்கில் அமைந்த இலக்கியங்கள் இருந்தன, என்று கொள்ளுவதில் சிறிதும் தடையில்லை. இதை நாம் நாவல் இலக்கியத்தின் துவக்க நிலை என்று கூறலால்.[2] நச்சினார்க்கினியர் குறிப்பிடும் பாரதமும் தகடூர்யாத்திரையும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் தமிழ் நாவலில் வளர்ந்த தோற்றத்தை இறையனார் களவியல் உரையில் காண்கிறோம். களவியலுரை உரைப்பாயிரம்தான் நாம் தமிழில் காணுகின்ற முதல் உரை நடையாகும். அதில், அக்காலத்தில் அரசாண்ட பாண்டியனையும் தமிழ்ப் புலவர்களையும் பற்றிய நிகழ்ச்சியொன்று கூறப்படுகிறது. அந்நாடு மழைபெறாமல் பஞ்சம் அடைந்ததால் தமிழ்ப் புலவர்கள்பால் பேரன்புகொண்ட அரசன் அவர்களை அழைத்து என்நாடு வறுமையுற்றது, நான் உங்களையெல்லாம் துன்பம் இன்றிக் காப்பாற்றும் நிலையை இழந்துவிட்டேன். அதனால் வேறுநாடு சென்று வாழ்ந்து இந்நாட்டில் மழை பெய்ததும் இங்குவருக என்று கூறினான். அதனையேற்றுப் புலவர்களும் பாண்டியநாட்டை விட்டுச் சென்றனர். பின்னர்ப் பலகாலம் கழிந்து பாண்டிய நாட்டில் மழைபெய்து நாடு செழித்தது. பாண்டியன் ஆட்களை அனுப்பிப் புலவர்களை அழைத்துவருமாறு கூறினான். பொருளிலக்கணம் உணர்ந்த புலவர் அல்லாமல் மற்றைய அனைவரும் பாண்டியநாடு திரும்பினர். பொருளிலக்கணம் கூறும் புலவர் இல்லாமையை அறிந்த பாண்டியன் எழுத்தும் சொல்லும் ஆய்வது பொருளுக்காக அன்றோ என்று கூறி வருந்தினான். அப்போது மதுரைச் சொக்கநாதர் கோயிலுக்கு அருச்சனை செய்யச்சென்ற குருக்கள் சிலையின் அடியில் அகப்பொருள் சூத்திரங்கள் எழுதப்பட்ட ஏடுகள் இருக்கக்கண்டு அதை எடுத்துச்சென்று அரசனிடம்

---

2 ஆங்கில நாவல்களில் Le Morte d' Arthur என்னும் நாவல் திருந்திய நாவல் நிலை தோன்றுவதற்கு முன்னர் எழுதப்பட்டது. இந்நாவலும் முழு உரைநடையில் அமையாமல் பாட்டுக்கள் விரவி வந்த நடையிலேயே அமைந்துள்ளது. இதனைப்பற்றிப் பேராசிரியர் ராலிக் என்பவர் (Raleigh) Leader of Poetry rather of prose என்று கூறுகிறார். இந் நாவல் ஆங்கில நாவலின் துவக்க காலத்தில் எழுந்ததாகக் கூறப்படுகிறது. எனவே தொல்காப்பியர் காலத்தில் இருந்து மறைந்த உரையிடை யிட்டபாடல் கதைகளை நாம் நாவலின் துவக்கம் என்பதில் தவறில்லை.

கொடுத்தார் அரசன் மிக மகிழ்ந்து அதனைப்பெற்று, புலவர் பெருமக்களிடம் கொடுத்து அதற்கு ஒரு சிறந்த உரை காணுமாறு வேண்டினன் புலவர்களும் அவ்வாறே உரை செய்தனர். ஆனால் அவர்களுள் யாருடைய உரை சிறந்தது என்பதில் கலாம் எழுந்தது. இறுதியில் அதைத்தீர்க்க இறைவனே அந்நகரில் உள்ள உருத்திரசன்மன் என்னும் ஊமைச் சிறுவன்பால் செல்லுமாறு கூறினர். புலவர்களும் அவ்வாறே சென்று அவன் முன்னால் தாம் செய்த உரைகளைப் படித்து விளக்கினர். மற்ற புலவர்களின் உரைகளைப் கேட்டு எவ்வித மெய்ப்பாட்டையும்காட்டாத அவ்வூமைச் சிறுவன், நக்கீரரின் உரையைக் கேட்டபோது கண்களில் நீர்ததும்பி, மயிர்கூச்செறிய, உள்ளம் புளகாங்கிதமடைந்து நின்றான். அதனால் எல்லாப் புலவர்களும் நக்கீரர் உரையே சிறந்த உரையென்று கொண்டுபோற்றினர்கள். இக்கதைப் பகுதிதான் களவியல் உரைப் பாயிரத்தில் கூறப்படுகிறது. அகப்பொருள் இலக்கணம் எவ்வளவு முக்கியமானது என்பதும், புலவர்களுக்குள் எழுகின்ற போட்டி மனப்பான்மையையும், பாண்டியமன்னர்கள் தமிழ் வளர்க்கச் செய்த தொண்டுகளைக் கூறவும் இக்கதை எவராலோ எழுதப்பட்டிருக்கலாம் இறையனார் களவியலுரைப் பாயிரத்துக்குப்பின் எக்காரணத்தாலோ உரைநடையால் அமைந்த கதைப்பகுதிகள் அமைந்த நூல்கள் தமிழில் காணப்படவில்லை.

## தமிழ் நாவலின் இடைநிலை

களவியல் உரையை அடுத்து அதனைப்போன்ற அமைப்பையும் தெளிவையும்கொண்ட கதை அமைப்பு நச்சினார்க்கினியரின் தொல்காப்பியப் பாயிர உரையில் காண்கிறோம். 'முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி' என்னும் தொல்காப்பியப் பாயிரக் குறிப்புரையில் "அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி, நீ தொல்காப்பியன் செய்தநூலைக் கேளற்க" என்று கூறுதலானும், தொல்காப்பியரும் பல்காலுஞ்சென்று 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்' என்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங்கூறி விடுவலெனக்கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடைகூறுதலின், "அரில்தபத் தெரிந்து என்றார் அவர் (அகத்தியர்) கேளன்மினென்றற்குக் காரணமென்னையோயெனின்" என்றுகூறி. சிவபெருமானுக்குத் திருமணம் நடந்தபோது தேவர்கள் அனைவரும் இமயமலையில் கூடியதால், அது தாழ்ந்துபோக அதனைச் சமநிலைப்படுத்த அகத்தியனார், தென்திசைகண் வந்தார். அவ்வாறு வரும்போது கங்கையாற்றிடம் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு யமதக்கினியாரிடம் சென்று அவர் மகன் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டும், பின்னர் புலத்தியனாரிடஞ்சென்று அவருடன்பிறந்த குமரியார் உலோபா முத்திரையை நீர்வார்த்துத் தர மணந்து அவரை அங்கேயே விட்டுவிட்டு வந்தார். வழியில் பல துன்பங்களையும் கடந்து பொதிகைமலையை அடைந்த அகத்தியர் தம் மாணவரான திரணதூமாக்கினியாரிடம் உலோபா முத்திரையை

அழைத்துவருமாறு கூறினர். அதைக்கேட்ட திரணதூமாக்கினி, நான் எவ்வாறு பிராட்டியை அழைத்துவருதல் வேண்டும் எனக் கேட்க அதற்கு ஆகத்தியர் 'முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகலநின்று கொண்டு வருக' எனக் கூறினர். திரணதூமாக்கினி அவ்வாறு உலோபா முத்திரையை அழைத்து வருங்கால் வையை ஆற்றை அவர்கள் கடக்கும்போது நீர்பெருகி உலோபாமுத்திரையை இழுத்துச்சென்றது, உடனே, திரணதூமாக்கினி அகத்தியனாரின் கட்டளையை மீறி ஓர் வெதிர்ங்கோலை முறித்துநீட்ட அதைப்பற்றிக் கொண்டு உலோபாமுத்திரையார் கரையேறினர் இதனை அறிந்த அகத்தியர் தன்சொல் காவாத மாணவரையும், மனைவியாரையும் சினந்து நீங்கள் சுவர்க்கம் அடையமாட்டீர்கள் என்று சபித்தார். "யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பீர்" என்று தொல்காப்பியனார் (திரணதூமாக்கினியே தொல்காப்பியர் என்று வழங்குவதாக நச்சினார்க்கினியர் கூறுகிறார்) அகத்தியரைச் சபித்ததால், சினமடைந்த அகத்தியர் தொல்காப்பியர் செய்தநூலை கேட்டல் வேண்டாம் என்று அதங்கோட்டாசிரியரிடம் கூறினர் என்று உண்மைபோன்ற ஒரு கதை நிகழ்ச்சியைக் கூறுகிறார். இக்கதையும் இறையனார் களவியலுரைபோன்று உரைநடையால் அமைந்ததே. ஆனால் இது இறையனார் களவியலுரையைக் காட்டிலும் அளவில் மிகவும் குறுகியதாகும்.

இறுதி வளர்ச்சி:-

மேற்கூறிய இரண்டு நிலைகளையும் அடுத்து இறுதியான — சிறப்பான முறையில் நாவல் எழுந்தது வேதநாயகம் பிள்ளை அவர்களின் காலத்தில் ஆகும். அவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி என்னும் இரண்டு நாவல்களும் விழுமிய உரை நடையில் விருவிருப்பான கதை நிகழ்ச்சிகளையும் உரையாடல்களையும் கொண்டு அமைந்த நாவல்களாகும். அவைகளையடுத்து பல ஆசிரியர்கள் இன்று வரையில் பல வகையான நாவல்களைச் சிறப்பாக எழுதி தமிழ் நாவல் இலக்கியத்தை வளர்த்து வருகின்றனர். இவர்களுள் கல்கி மிகவும் சிறந்தவராவர். தமிழ் நாவலின் வளர்ச்சியும் அதனைச்சிறப்புற அமைத்த பெருமையும் கல்கி அவர்களைச் சாரும்.

நாவலின் பிரிவு.

நாவல் கற்பனை நிகழ்ச்சிகளையே பெரும்பாலும் கூறுகின்ற கற்பனை நாவல் (Romantic Novel) என்றும், வாழ்க்கையில் நிகழும் உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு அமையும் உண்மை நிலை நாவல் (Realistic Novel) என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. மேல்நாட்டு ஆய்வாளர்கள் இவ்விரண்டு பகுதிகளுக்கும் பல்வேறு விளக்கங்களைக் கூறுகிறார்கள். பெரும்பான்மை கற்பனையின் துணைகொண்டு உலகச் சூழ்நிலையில் நடக்கமுடியாத

நிகழ்ச்சிகளால் பின்னப்படுவது கற்பனை நாவல் என்றும், உண்மை நிகழ்ச்சிகளைக் கற்பனையின் பெருந்துணையில்லாமல் வாழ்க்கையில் உள்ளவற்றை உள்ளவாறே அமைத்து எழுதப்படுவது உண்மை நிலை நாவல் என்றும் கூறலாம். இவைகள் இரண்டோடும் அல்லாமல் இன்றைய கம்யூனிசக் கொள்கையின் பரவலால் யதார்த்த நாவல் (Materialestic Novel) என்றும் மற்றொரு நாவல்பிரிவும் தோன்றியுள்ளது. இந்நாவல் பிரிவு ஏறக்குறைய உண்மைநிலை நாவலைப் போன்று அமைந்தாலும், இந்நூலில் வாழ்க்கை எவ்வாறு உள்ளதோ அவ்வாறே விளக்கப்படும். ஆனால் எவ்வாறு அமையவேண்டும் என்பதை இந்நூலாசிரியர்கள் எழுதாமல் விட்டு விடுவர்.

**உட்பிரிவுகள் :-**

இம் மூன்று பிரிவுகளுக்குள்ளும் பல்வேறு உட்பிரிவுகள் உள்ளன. நாவலின் தன்மைக்கும் கதைப் போக்கிற்கும் ஏற்ப நாவல்களை ஏழு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகளாவன

1. நிகழ்ச்சிமிக்க நாவல் — (Novel of Action)
2. பண்புநலன் காட்டும் நாவல் — (Novel of Character)
3. விளக்கமும் வருணனையுமுடைய நாவல் — (Picturesque-Novel)
4. நாடகப்போக்கில் அமைந்த நாவல் — (Dramatic Novel)
5. மனவெழுச்சி தரும் நாவல் — (Emotional Novel)
6. துப்பறியும் நாவல் — (Detective Novel)
7. பொழுதுபோக்கு நாவல் — Passtime Novel or Novel for a glance

**நிகழ்ச்சிமிக்க நாவல் :-**

வாழ்க்கையே நிகழ்ச்சிகளின் கோவையாக அமைந்துள்ளது. மனிதன் பிறப்பதிலிருந்து இறக்கும் வரையிலும், காலையில் துயிலெழுவதிலிருந்து உறங்கச்செல்லும் வரையிலும் நிகழ்கின்ற அனைத்தும் நிகழ்ச்சிகளே. ஆனால் அவைகளுள் மிகவும் முக்கியமானவற்றை மனித வாழ்க்கையில் திருப்பங்களை உண்டாக்கும் நிகழ்ச்சிகளைச் சுவைபட அமைத்துக்காட்டுவதே இந்நாவலின் தன்மையாகும். இவ்வகை நாவலில் வருணனைக் காட்சிகளுக்கோ அல்லது பண்பு நலன் விளக்கங்களுக்கோ பெரிதும் இடமளித்தல் இல்லை. நாவலின் துவக்கத்தில் ஒரு நிகழ்ச்சி துவங்க அதைத் தொடர்புபடுத்தி மற்றொரு நிகழ்ச்சியும், இந்த இரு நிகழ்ச்சிகளை

விளக்க மேலும் மேலும் நிகழ்ச்சிகளை அமைத்து இறுதியில் எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரு நிகழ்ச்சியில் முடித்துக்காட்டப்படும். இவ்வகை நாவலில் சொல் அலங்காரங்களையோ பொருள் சிறப்புக்களையோ பெரிதும் காணுதல் இயலாது. வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படை யாகக்கொண்டு எழும் நாவல்கள் அனைத்தும் பெரும்பாலும் இவ் வகையில் நடக்கும வரலாற்று நாவலாசிரியர்கள் படிப்போரின் உள்ளத்தைக கவருவதற்கு அடுத்தடுத்து புதிய நிகழ்ச்சிகளை உரு வாக்கிச்செல்வர். அந்த நிகழ்ச்சிகளின் காரணத்தை முதலில் விளக்காமல் நிகழ்ச்சிகளையே விரிவாக்கிக்கொண்டும் செல்வார்கள் கல்கியின் பொன்னியின் செல்வன் இவ்வகை நாவலுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். வீரநாருயணன் ஏரிக்கரையில் வந்தியத் தேவன் குதிரைமீது செல்லுவதாகத் துவங்கும் கதை ஒவ்வொரு அத்தியாயம் முடியும்போது ஒரு புது நிகழ்ச்சியைப் பெறுகிறது. இளவரசன் கரிகாலன் கொல்லப்படும்போது இந்தப் பல நிகழ்ச்சி களும் ஒன்றுசேர்ந்து, கரிகாலனைக் கொன்றதுயார் என்பதை அறிய முடியாமல் மறைக்கப் பெரிதும் துணைசெய்கிறது. அவருடைய 'பார்த்திபன் கனவு' என்னும் நாவல் தொடர்ந்த விறுவிறுப்பான நிகழ்ச்சிகளைக்கொண்டு அமைவதே. இன்றுவாழும் வரலாற்று நாவ லாசிரியர்களில் நிகழ்ச்சிகளைச் சுவைப்பட அமைப்பதில் சாண்டில்யன் குறிப்பிடத்தக்கவராவார். அவருடைய ஜலமோகினி மலைவாசல், ஜீவபூமி என்னும் நாவல்கள் சிறப்புற நிகழ்ச்சிகளை அடுத்தடுத்து அமைத்து படிப்பாரின் உள்ளத்தை ஈர்ப்பதற்கு எடுத்துக்காட்டாகும் ஆனால் தேவையில்லாத ஆண் பெண் உறவையும் பெண்களின் உடலமைப்புகளையும் மிகுதியாக இவர் புனைந்து கூறுகிறார். அதோடு இயற்கையாக அமையாமல் தமிழ் நடையும் பெரும்பாலும் வட சொற்கள்கலந்து நீண்ட தொடராக இவர் நாவலில் பயன்படுத்துவ தால் சில இடங்களில் நிகழ்ச்சிப் போக்குத் தடைப்படுகிறது.

**பண்பு நலன் காட்டும் நாவல்கள் :-**

நாவல் பிரிவிலேயே சிறப்பான இடத்தைப் பெறுவது பண்பு நலனைக் காட்டும் நாவல்களாகும். இவ்வகை நாவலை அமைப்பது ஒருசிலருக்கே கைவருவதாகும். நாவலில் வருகின்ற பாத்திரத்தின் தன்மைகளை அந்தப் பாத்திரம் செய்கிற செயலாலும் பேசும் பேச்சா லும், அந்தச் செயலாலும் பேச்சாலும் விளைகின்ற விளைவுகளாலும் படிப்போரின் எண்ணத்தில் எப்போதும் நீங்காத இடத்தைப் பெறு மாறு செய்வதே இந்நாவலின்பணியாகும். நாவலில் விளக்கப்படும் பாத்திரம் நல்லவனாகவும் அமையலாம் அல்லது தீயவனாகவும் அமை யலாம் அல்லாமல் இந்த இரண்டு பண்பும் சேர்ந்து அமைந்தவனா கவும் இருக்கலாம். ஆனால் அந்தப் பாத்திரத்தின் பண்புகள் முழு வதும் செம்மையாக விளக்கப்படுதல் வேண்டும். இவ்வகை நாவலில் கல்கியின் சிவகாமியின் சபதம் சிறந்த இடத்தைப் பெறுகிறது அந்நாவலில் படைக்கப்பட்டுள்ள புத்தபிட்சு நாகநந்தியின் பாத்திரம் படிப்போரின் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது. விரைந்து

செயலாற்றுவதற்கும் ஆட்சிக்கும், அஞ்சாமைக்கும் ஓர் பாத்திரத்தை நாம் நினைத்தால் நம் மனக்கண் முன் நாகநந்தியே தோன்றுவார். அடுத்து அகிலனின் நெஞ்சின் அலைகள் வேங்கையின் மைந்தன் என்னும் இரண்டு நாவல்களையும் கூறலாம். அந்நாவல்களில் வரும் புஷ்பா, ரோகினி என்னும் இரண்டு பெண்கள் பாத்திரங்களும் உயர்துடிப்புடையவை. படிப்போரின் உள்ளத்தில் என்றும் நின்று நிலவும் தன்மை வாய்ந்தவை. அரு. ராமநாதனின் அசோகனின் காதலியும் சிறந்த பண்பு நலனைக் குறிக்கும் நாவலாகும்; அந் நாவலில் ஆசிரியர் அசோகனின் பண்பையும் அவனுடைய காதலியாக வரும் பெண்ணின் பண்பையும் சிறப்புற அமைத்துள்ளார்.

**விளக்கமும் வருணனையுமுடைய நாவல்:-**

இவ்வகை நாவலில் நாவலாசிரியர் மிகக் குறைந்த நிகழ்ச்சிகளை அமைத்துக்கொண்டு அந்நிகழ்ச்சிகளையும் அவைகளுக்கு உரிய காரணங்களையும், அந்நிகழ்ச்சிகள் எழுதுவதற்குக் காரணமாக அமைந்த பொருள்களையும் விளக்கியே நாவலை முடிப்பர். இவ்வகை, நாவலை உரைநடையில் எழுந்த காப்பியத்தோடு ஓரளவு ஒப்பிடலாம். இக்காட்சியில் இயற்கைப்புனைவு மிகுந்திருக்கும் ஆசிரியரின் குரல் மேலோங்கி, சில நேரங்களில் படிப்பார்க்குச் சோர்வையும் ஏற் படுத்தும். இவ்வகை நாவல்களை எழுதுவோர் கவிமனம் படைத்த வர்களாக இருப்பர், தத்துவவாதிகளாகவும் தர்க்கவாதிகளாகவும் அமைவர். விளக்கமும் வருணனையும் உடைய நாவல்களுக்கு டாக்டர் மு. வ. வின் நாவல்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். அவரு டைய நாவல்கள் பெரும்பாலும் ஏதாவது ஒரு கருத்தை வலியுறுத்து வதற்கென்றே அமையும் 'கள்ளோ காவியமோ' என்னும் நாவல் கணவன் மனைவியர்களுக்குள் உரிமையும் உணர்ந்த நிலையும் வேண்டும், என்பதையும் கரித்துண்டு கலையார்வம் கொண்டவர்களு டைய வாழ்வு அறிவுநிலையில் அமைக்கப்படாத வரையில் அமைதி யடைவதில்லை என்பதையும், டாக்டர் அல்லி, மனஅடக்கம் இல்லா மையால் வரும்துன்பங்கள், அகல்விளக்கு கூர்மையான அறிவு படைத்தவர்கள் வழிதவறிவிட்டால் எவ்வளவு மோசமான நிலைக்குச் செல்வார்கள் என்பதையும் விளக்கவே எழுந்திருப்பதை அதை படிக்கும் அனைவரும் அறிவர். அவருடைய நாவல்களில் விளக்கங்களும் வருணனைகளும் மிகுதியாக அமைவதால் தொடர்ந்து படிப்பதற்கு உள்ளம் செல்லுவதில்லை எனச்சிலர் குறை கூறுகின்ற னர். ஆனால் ஆசிரியர், நாவலில் தருகின்ற விளக்கங்கள் வாழ்க் கையைப்பற்றியும் மனித உள்ளங்களின் இயல்புகளைப்பற்றியுமே அமைவதால், அவ்விளக்கங்கள் பலகாலும் விரும்பிப் போற்றப்படு கின்றன. விளக்கமும் வருணனையும் கூறும் நாவல்கள் காப்பியம் கவிதைபோன்று பலகாலம் நிலைத்து வாழும் தன்மை உடையன வாகும்.

### நாடகப் போக்கில் அமைந்த நாவல்

நிகழ்ச்சிகள் அதிகமாக அமைந்து விளக்கமும் வருணனையும் பெரும்பாலும் அமையாமல் ஆசிரியர் கதை கூறுகின்ற போக்கில் அல்லாமல் நாவலில்வரும் பாத்திரங்களுக்கு இடையிலே சுவையான உரையாடல்களை அமைத்துச் செல்லுவது இவ்வகை நாவலின் பண்பாகும். இந்நாவல்கள் மற்றவைகளைப் போல் நீண்டு செல்லாமல் மிகவும் குறுகிய நேரத்தில் முடிந்துவிடும். இவ்வகை நாவல்களை எழுதுவோர் பெரும்பாலும் நாடகக்கலை அறிந்தவர்களாகவே இருப்பர். தமிழில் இவ்வகை நாவல்கள் சிறப்பாகத் தோன்றவில்லை. நாவலில் பாத்திரங்களே கதையைக் கூறுவதுபோல் அமைத்த சில நாவலாசிரியர்களும் விளக்கத்தையும் வருணனையும் அதிகமாக அமைத்து அவைகளையும் விளக்கமும் வருணனையும்கொண்ட நாவலாக அமைத்துவிட்டனர். மு. வ. வின் அந்தநாள் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### மனவெழுச்சிதரும் நாவல்:-

இவ்வகை நாவல்களைப் படித்துமுடித்ததும் படிப்போரின் உள்ளத்தில் ஒருவகை உணர்ச்சியெழுந்து அவர்கள் உள்ளத்தை அலைக்கும் நாவலாசிரியர் துன்ப நிகழ்ச்சியைக் கூறி நாவலை முடித்திருந்தால் அத்துன்ப நிகழ்ச்சிக்குக் காரணமானவர்களின்மீது நம் உள்ளம் பாய்ந்து அவர்களை ஒரு கொடிய பகைவன்போல் நினைக்கும் இவ்வகை நாவல்கள் மனித உள்ளத்தை தூய்மைபடுத்துவதற்குச் சிறந்த துணையாக அமையும். தமிழ்நாட்டில் இவ்வகை நாவலை எழுதுபவர்களில் சிறந்தவரும் ஒருவருமாக அமைபவர் விந்தன் ஆவார். அவருடைய பாலும் பாவையும் என்னும் நாவல் இவ்வகை நாவலுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வகை நாவலாசிரியர்கள், சமூகத்தின் சீர்திருத்தங்களையும் நாட்டின் கொடுமைகளையும் சுட்டிக்காட்டுவதற்கும்; அவைகளை நீக்குவதற்குமே பெரிதும் முயல்வர். ஆனால் இவ்வகை நாவல்கள் பெரும்பாலும் ஒரு வகை கருத்துக்களை விளம்பரப்படுத்துவதற்கு எழுதப்படும் நாவல்கள் (Novel for Propaganda) என்று கூறப்படுகிறது. உருசிய நாவலாசிரியர் மார்க்சிம் கார்க்கியின் 'தாய்' என்னும் நாவல் (தமிழில் ரகுநாதன் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) மிகவும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(தொடரும்)